


THE ANNUAL OF THE

# MUSLIM MAJLIS

UNIVERSITY OF SRI LANKA
JAFFNA CAMPUS



With Best Wishes

&

Kind Regards

from

# M. I. M. Naleem Hadjiar

BERUWALA

# இன்கிலாப்

# ඉන්කිලාබ්

# INQILAAB

PEACE ★ KNOWLEDGE ★ FAITH

TNAM
715
JAFFNA

**VOLUME I**

**1977**

**( HIJRI 1397 )**

THE ANNUAL OF THE

# MUSLIM MAJLIS

**UNIVERSITY OF SRI LANKA**

**JAFFNA CAMPUS**

**THIRUNELVELY**

★ ★ ★ ★

## The Cover......

The Holy Quran is the bedrock of the edifice of the Islamic system of life When Europe was groping in utter darkness it was the rays of the Holy Quran that brought light to the world. The Arab nation which had no knowledge of the Sciences was miraculously transformed into a people who, within a short period of 23 years, beame the leaders of the world. Encouraged by the Holy Quran the Arab Muslims at the early stages, and other Muslims in later periods, grew so thirsty of knowledge that they mastered almost all the branches of Science and Arts. Although this fact has been completely blacked out by dishonest and hostile historians of the West, some of the intellectually honest writers have acknowledged the debt, which the West owes for its progress to the Muslims.

The cover illustrates by symbols the different fields of Science to which invaluable contributions have been made by Muslims. The rays emanating from the Holy Quran in the Centre encompass the different fields of knowledge.

## அட்டை......

குர்ஆனே இஸ்லாமிய வாழ்க்கையின் ஜீவநாடி. குர்ஆனின் மகத்துவத்தை முஸ்லிம் சமுதாயமும் உலகமும் மறந்துகொண்டிருக்கும் இவ்வேளையில், குர்ஆனின் ஊற்றுச்சுனையில் இருந்தே இன்று சிறப்புற்று விளங்கும் சகலகலைகளும் வளர்ச்சியடைந்தன; வளர்க்கப்பட்டன என்ற உண்மையை இவ்வட்டை சித்திகரிக்கின்றது.

குர்ஆனின் ஒளியின்கீழ் நீதித்துறை வளர்க்கப்பட்டது. ஒப்புயர்வற்ற எதேச்சாதிகாரமற்ற நீதியை இஸ்லாம் மக்களுக்கு வழங்குகின்றது என்பதையும், குர்ஆனின் வழிகாட்டலின்கீழ் முஸ்லிம்கள் வியாபாரத்துறையில் சிறப்புற்று இருந்தனர்; குர்ஆன் நேர்மையான வியாபாரத்தினை ஊக்குவிக்கின்றது என்ற இருகருத்துக்களையும் சமநிலையில் பேணப்பட்டுள்ள தராசு சித்தரிக்கின்றது.

முஸ்லிம் விஞ்ஞானிகள், மருத்துவவியலாளர்கள், கணிதவிற்பன்னர்கள், வானவியல் பேரறிஞர்கள் பலவியத்தகு சாதனைகளைப் புரிந்தும் அவை இருட்டடிப்புச் செய்யப்பட்டு, வேண்டுமென்றே திரித்துக் கூறப்பட்டுள்ளதை நாம் அறியாமல் இல்லை.

குர்ஆனின் வழிகாட்டலின்கீழ் மருத்துவம், கணிதம், விஞ்ஞான ஆராய்ச்சி, வானவியல் ஆராய்ச்சி, கட்டடக்கலை என்பன வளர்ந்தோங்கின, செழிப்புற்றன என்ற உண்மைகளை முறையே பாம்புகளைக்கொண்ட சின்னமும், வரைபுகளும், விஞ்ஞான ஆய்வு கூடமும், வான ஆராய்ச்சிக்கலமும், வானளாவிய மினாராவும் சித்தரிக்கின்றன.

# Editorial -

# - Board


**Managing Editors :**

| | |
|---|---|
| *I. L. A. JABBAR* | *(Faculty of Science)* |
| *M. S. M. ASLAH* | *(Faculty of Science)* |
| *M. B. NOOR MOHAMED* | *(Faculty of Science)* |

**Co - Editors :**

| | |
|---|---|
| *M. A. K. M. A. HAMEED* | *(Faculty of Humanities)* |
| *A. J. NOORUL BAKIYA* | *(Faculty of Humanities)* |

**Members of the Board :**

| | |
|---|---|
| *A. L. JOUFERSADIQUE* | *(Faculty of Science)* |
| *K. L. A. THASOOL* | *(Faculty of Humanities)* |
| *M. H. M. UWAIS* | *(Faculty of Humanities)* |

# THE OPENING (AL-FATIHA)

IN THE NAME OF ALLAH, MOST GRACIOUS, MOST MERCIFUL

*Praise be to God;*
*The chersiher and sustainer of the worlds;*
*Most Gracious, Most Merciful;*
*Master of the day of Judgement;*
*Thee do we worship;*
*And Thine aid we seek;*
*Show us the straight way;*
*The way of those on whom;*
*Thou hast best owed Thy Grace;*
*Those whose (portion)*
*In not wrath;*
*And who go not astray;*

***Ameen***

# பொருளடக்கம்
# CONTENTS


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | *Message from Minister of Transport* ... ... | I |
| 2 | *Message from Vice Chancellor* | II |
| 3 | *Message from Campus President* ... ... | III |
| 4 | *Message from Majlis President* ... ... | IV |
| 5 | மேற்கிலிருந்து பெறும் வாழ்த்து ... ... | V |
| 6 | *Executive Committee 1977* ... ... | VI |
| 7 | நுகரமுன் ... ... ... | VII |
| 8 | உங்களுடன் ஒரு வார்த்தை ... ... | VIII |
| 9 | இலங்கை முஸ்லிம்களின் குடிப்பரம்பல் ... ... | 1 |
| 10 | *Come Let Us Change the World* ... ... | 9 |
| 11 | *Development of Islam in Sri Lanka* ... ... | 11 |
| 12 | இஸ்லாம் கூறும் தனித்துவமும் வரலாற்றுப் பின்னணியும் ... | 14 |
| 13 | பாலைநிலப் பசுந்தரையில் பலஸ்தீனம் மலரட்டும் ... | 17 |
| 14 | *Muslim Embassies and Islam* ... ... | 18 |
| 15 | இஸ்லாமிய அரசியல் கோட்பாடு ... ... | 20 |
| 16 | கண் துயிலும் என் செல்வா...! ... ... | 25 |
| 17 | இரத்தச் சிவப்புமிழும் புத்தம் புது மலர்கள் ... ... | 26 |
| 18 | பல்கலைக்கழக அனுமதியில் நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ... | 28 |
| 19 | இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றுப் பாரம்பரியங்கள் ... | 33 |
| 20 | இன்கிலாப் ... ... | 41 |
| 21 | சீர்திருத்தவாதிகள் ... ... ... | 42 |
| 22 | இன்கிலாபே ! தொடர்க பணி ... ... | 49 |
| 23 | නබිනායකයාණන් (සල්) සෙවන යට වර්ධනයවූ ඉස්ලාමීය ශිෂ්ටාචාරය ... | 50 |
| 24 | நம் சிந்தனைக்கு ... ... ... | 53 |
| 25 | இஸ்லாமிய இலட்சியப் பெண் ... ... | 57 |
| 26 | அனைத்துலக மனிதனை நோக்கி அல்லாமா இக்பால் ... | 60 |
| 27 | இஸ்லாத்தின் பெருமை பற்றி பிற மதத்தினர் அளிக்கும் நற்சான்றுகள் | 63 |
| 28 | பிணைக்குப் பிணை ... ... ... | 65 |
| 29 | "ශුද්ධ මොහම්මත් නබි (සල්) තුමාගේ සාධුකම්පිත අදහස" ... | 69 |
| 30 | *Our Majlis Members* ... ... ... | 72 |
| 31 | பொதுச் செயலாளரின் அறிக்கை ... .. | 74 |
| 32 | *Our Grateful Thanks To* ... ... ... | 76 |

# Message from the Minister of Transport

I feel privileged at the request for a message to appear in the Souvenir that is intended to commemorate the First Anniversary of the Muslim students Majlis of the Jaffna Campus of the University of Sri Lanka, and I send this message of congratulations and good wishes with feelings of pleasure and pride - ''Alhamdu Lillah''.

It is worth paying a tribute to the members of this Majlis for their effort in publishing this Magazine on the very First Year of the Inauguration of the Majlis in the newly established Campus which will be a fitting model to the other Associations.

The Muslim Majlis should play an important role along with their Academic career at the Campus in moulding the students to lead a moral and spiritual life and I am very happy to note that the Muslim Majlis are playing an active role to look after the welfare of the Muslim students attached to the above Campus.

I wish them all success in their effort.

*M. H. Mohamed,*
*Minister of Transport*

## The Vice Chancellors' Message

"I am glad to know that the Muslim Majlis of the Jaffna Campus is publishing its first Annual Magazine and it is a pleasure to convey to the Majlis my congratulations and best wishes It is a great pity that the functioning of the Jaffna Campus has been disrupted due to the recent unfortunate situation and we look forward to the restoration of normalcy where all students of the Campus could continue to live together and carry out their academic as well as extra - curricular activities without further interruption. It is very essential that our students irrespective of race, religion or any other factors, should work together and live in harmony, giving each other complete co operation and assistance, This is necessary not only for cordiality but is also essential for the future success of this country.

I wish the Muslim Majlis well in all their activities and to continue with their efforts to make student life better and more useful."

University of Sri Lanka
Senate House
18, Ward Place,
Colombo-7.

yours sincerely,
**(Prof.) P. P. G. L. Siriwardene**
Vice Chancellor.

# ஆசியுரை

பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன்
தலைவர், இலங்கைப் பல்கலைக் கழக யாழ் வளாகம்

இலங்கைப் பல்கலைக் கழக யாழ்ப்பாண வளாகத்தில் ஈழத்தின் பல பகுதிகளைச் சேர்ந்த முஸ்லிம்கள் கல்வி பயில்கின்றார்கள். இவர்கள் அனைவரையும் இணைத்து முஸ்லிம் மாணவரின் பொது நலனுக்காக உழைக்கும் முஸ்லிம் மஜ்லிஸ் இவ்வாண்டு சஞ்சிகையொன்றினைத் தொடங்குகின்றது.

இஸ்லாமிய தத்துவம், இஸ்லாமிய காலாசாரம், இஸ்லாமிய இலக்கியம் முதலியன பற்றிய அறிவை வளர்க்கும் நோக்கத்துடன் கால்கோள்காணும் இச் சஞ்சிகை தரம் சிறந்த கட்டுரைகளை வெளியிட்டுப் பல சீரிய எழுத்தாளரை உருவாக்கும் என எதிர்பார்க்கலாம்.

கன்னி முயற்சி தொடர் முயற்சியாக அமையவேண்டும். பல்கலைக் கழகத்திலுள்ள, எல்லா மதத்தினரையும் சகோதரத்துவ அடிப்படையில் அணைத்துச் செல்ல வேண்டும். எல்லாப் பல்கலைக்கழகங்களிலுமுள்ள இஸ்லாமிய மாணவ மன்றங்களிடையே தொடர்பு ஏற்படுத்தி, முஸ்லிம் மாணவர் ஒன்றியத்தினை உருவாக்க வேண்டும்.

யான் பிறையன்பன்; இஸ்லாமிய இலக்கியப் பிரியன். எனவே சஞ்சிகையின் வளர்ச்சிக்கு ஆவன செய்வேன். சஞ்சிகையின் பெயருக்கமைய இம்முயற்சி முஸ்லிம் மாணவரிடையே எழுச்சியை ஏற்படுத்தி பல துறையிலும் நற்பணி செய்து ஓங்கி வளர எமது வாழ்த்துக்கள்.

இலங்கைப் பல்கலைக் கழகம்
யாழ் வளாகம்
திருநெல்வேலி

## *Message from the President of the Muslim Majils*

I am very happy to give this message to the first issue of the annual magazine "INQILAAB" of the Muslim Majlis of the Jaffna Campus. The Muslim students though we are less in number published this issue with the untiring efforts of its members. We have created traditions by publishing the first issue and I sincerely hope that our brother students will share the benefits.

The intention of the Muslim Majlis is that this Magazine should embody the cream of Muslim culture. The Muslims of this country have been in the back-waters in the field of education. We should be happy that we are now on the threshold of educational advancement. We in future should be alive to the situation and the educational reforms.

I pray Allah Almighty guide us all to fulfil our duty, to purify our hearts, intentions and beliefs to follow His right path and to make our future brighter than our past.

I wish the Muslim Majlis students of the Jaffna Campus every success.

Allah surely is all powerful and Mighty.

May Allah's peace Mercy and blessings be upon us. (AMEEN)

**I. L. A. Jabbar**

# மேற்கிலிருந்து பெறும் வாழ்த்து

யாழ்ப்பாண வளாக முஸ்லிம் மஜ்லிஸின் சஞ்சிகை வெளியீட்டு முயற்சி பற்றியறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இம்மன்றம் அமைக்கப்பட்டுக் குறுகிய காலத்திற்குள் இக்காரியத்தை ஊக்கத்துடன் மேற்கொண்டுள்ள சகோதரர்களின் முயற்சி பாராட்டற்குரியதாகும். அவர்களது இம்முயற்சி வெற்றியடைய வாழ்த்துகிறேன்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை மதம் அவர்களது அன்றாட வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்ததாகும். ஏக இறைநம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட இஸ்லாம், வாழ்க்கையின் சகல துறைகளிலும் நடந்து கொள்வதற்குரிய ஒரு கட்டுக்கோப்பான வழிமுறையை வகுத்துக் காட்டியுள்ளது. புனித இறைத் தூதர் அவர்கள் போதித்து வாழ்ந்து காட்டிய இவ்வாழ்க்கை முறையை முற்றிலும் பின்பற்றுவதிலேயே மனித இனத்தின் சகல பிரச்சினைகளுக்குமான தீர்வும், உண்மை வெற்றியும் தங்கியுள்ளது என்பது எமது நம்பிக்கை.

இந்நிலையில் ஒரு உயர் கல்விப்பீட இஸ்லாமிய மன்றம் என்ற முறையில் இம் மஜ்லிஸின் பணிகள் மிக முக்கியமானவையாகும். பல்கலைக்கழக வாழ்க்கையில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளில் மாணவர்களுக்கு உதவுவது மட்டுமன்றி, இஸ்லாத்தின் போதனைகளைப்பற்றிய விளக்கங்களை விருத்தி செய்வதற்குரிய திட்டங்களை மேற்கொள்வதும் இம்மன்றத்தின் ஒரு முக்கிய பணியாகும். இது எமது அன்றாட வாழ்க்கையில் இஸ்லாமிய நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கும், தனிப்பட்ட அல்லது சமூக வாழ்க்கையில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் அணுகி, அதுபோதிக்கும் தீர்வுகளைச் செயற்படுத்துவதற்கும் ஆர்வத்தை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

வளாகத்திலுள்ள ஏனைய மாணவர் இயக்கங்களோடு நட்புறவை மேற்கொள்வதன் மூலம், வளாகத்தைச் சார்ந்த சகல மாணவர்களுக்கிடையிலும் நல்லெண்ணத்தை வளர்ப்பதற்கு உதவுவதும், அவர்களுக்கு இஸ்லாத்தைப்பற்றிய உண்மையான அறிமுகத்தையளிப்பதும் இம்மன்றத்தைச் சார்ந்ததாகும். இவை, இம்மன்றம் எமது வளாகத்திற்கும், சமூகத்திற்கும் ஆற்றக்கூடிய ஒரு சிறந்த சேவையாகும் என்பதில் ஐயமில்லை.

இம் மன்றம் அமைக்கப்பட்டு ஓராண்டு பூர்த்தியாகியிருக்கும் இவ்வேளையில். மன்ற அங்கத்தவர்களனைவருக்கும எனது உள்ளங் கனிந்த நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, அதன் எதிர்காலத் திட்டங்களனைத்திலும் சிறந்த வெற்றிகளையளிக்க எல்லாம் வல்ல ஏக இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

கணிதப் பகுதி
ஹிரொய்வட் பல்கலைக்கழகம்
எடின்பேக்.

எம். இஸட். எம் மஃஹரூீன் B.Sc. (Hons)
(பட்டப் பின் படிப்பு மாணவன்)

# Executive Committee - 1977

Patron:

*Mr. K. M. H. Kalideen*
*B. A Hons. (Cey.)*

Senior Treasurer:

*Mr. M. A. Nuhman*
*B. A. Hons. (Cey.)*

President:

*Mr. I. L. A. Jabbar*

Vice-President:

*Mr. M. T. Ahamed*

General Secretary:

*Mr. A. L. Joufersadique*

Asst. General Secretary:

*Mr. I. S. Mathar*

Social Secretary:

*Mr. Y. M. Ismail*

Junior Treasurer:

*Mr. M. S. M. Cassim*

Editors:

*Mr. M. A. K. M. A. Hameed*
*Miss. A J. Noorulbakiya*

Committee Members:

*Mr. M. H. M. Uwais*
*Mr. M. B. Noormohamed*
*Miss. A. H. Mumthazbegum*

நுகர முன்.....

ஈழத்தின் பல்கலைக்கழக வளாகங்களிலேயே மிகவும் இளமை வாய்ந்த, யாழ்வளாக முஸ்லிம் மஜ்லிஸின் முதலாவது ஆண்டு மலர் உங்கள் கரங்களில் புது மெருகுடன் தவழுவதைக் கண்டு நாம் உவகை கொள்கிறோம்; பெருமையுறுகிறோம்.

"அல்ஹம்துலில்லாஹ்" அனைத்து புகழும் அல்லாஹ்வுக்கே.

சென்ற வருடம் உதித்த எமது மஜ்லிஸ் ஒரு வருட காலத்திலேயே தனது தனித்துவத்தைப் பேணி, ஒரு மலரைப் பொலிவுடன் வெளியிட எடுத்த முயற்சி வீணாகவில்லை. எமது மஜ்லிஸ் உறுப்பினர்களின் திட சங்கற்பம், விளம்பரதாரர்களின் ஆதரவு, வள்ளல்களின் தாராள மனப்பான்மை என்பன ஒருங்கே இணைந்து எமது கன்னி மலரைப் பெற்றெடுத்தன.

எமது வளாக மாணவர்களினதும், விரிவுரையாளர்களினதும் படைப்புக்களோடு, முஸ்லிம் கல்விமான்களினதும், அறிஞர்களினதும் படைப்புக்களைத் தாங்கி இடமலர் பவனி வருகிறது. இதில் பரவிக் கிடக்கும் அரிய கருத்துக்கள், உங்கள் சிந்தனைகளைத் தூண்டி எமது சமூகத்தின் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் எமது அபிலாஷை. பல்கலைக்கழக மாணவர் மாத்திரமன்றி, பல்கலைக் கழகத்திற்கு வெளியில் உள்ளோரும் சுவைப்பதற்காக வேண்டி சமுதாயத்தின் தேவைக்கேற்ப பொதுவான சிக்கலற்ற எழுத்தோவியங்களே இதில் ஆங்காங்கு காணப்படுகின்றன. இதன் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வது உங்கள் பணி.


மிகக் குறுகிய கால இடைவெளிக்குள் சஞ்சிகைக்கான ஆக்கங்களை ஆக்கித் தந்து எம்மை ஊக்குவித்த எழுத்தாளர்களுக்கு எமது பாராட்டுக்கள் பல. மலரை வெளியிடப் பங்கெடுத்த அனைவருக்கும் இம்மலருக்குக் கிடைக்கும் பாராட்டுக்களும் விமர்சனங்களும் உரித்தாகட்டும்.

தொடர்ந்து எம் இளம் உள்ளங்களில் தோன்றும் கருத்துக் குவியல்களையும், அறிவிற் சிறந்த அறிஞர்களின் அறிவுக் களஞ்சியங்களையும் தாங்கி இம்மலர் மணம் கமழ வேண்டும் என பிரார்த்திக்கின்றோம்.

இறுதியாக ரோஜாவுக்கும் முள் உண்டு, நெல்லுக்கும் உமியுண்டு என்றெண்ணி இதில் காணும் குறைகளை நீக்கி நிறை காணும்படி உங்கள் அனைவரையும் வினயமாக வேண்டி நிற்கிறோம்.

— ஆசிரியர் குழு —

# EDITORIAL BOARD



*Seated :* (*L. R.*) Miss. Bakiya Jaleel, Mr. I. L. A. Jabbar, Mr. M. S. M. Aslah.

*Standing :* (*L. R.*) Mr. A. L. Jaufer Sadique, Mr. M. H. M. Uwais, Mr. M. A. K. M. A. Hameed, Mr. K. L. A. Thasool, Mr. M. B. Noor Mohamed.

## உங்களுடன் ஒரு வார்த்தை.........

கல்வித்துறையில் மாற்றங்களும் புதிய திருப்பங்களும் துரிதகதி வேகத்தில் இடம் பெற்றுக்கொண்டிருக்கும் ஒரு காலப்பொழுதில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அண்மைக் காலத்தில் கல்வித்துறையில் ஏற்பட்ட முக்கிய திருப்பங்கள் நம் அனைவரினதும் கவனத்தையும் கருத்தையும் ஈர்த்து நம்மை மேலும் ஒருபடி சிந்திக்கத் தூண்டியுள்ளன.

இந்த நவீன காலத்தில் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் கல்வி, சமூக, பொருளாதார மாற்றங்களை உணர்ந்து, அவற்றால் உருவாகக்கூடிய புதிய சூழ்நிலைகளை ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவுக்கு, நம்மை மாற்றிக்கொள்ள முயலவேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். நாட்டின் இதர தேசிய இனங்களோடு சரிசமமாக நிற்கக்கூடிய அளவுக்கு முன்னேற வேண்டுமானால் இன்னும் எவ்வளவோ வேகமாகச் செயற்பட்டு கல்வி, பொருளாதாரத்துறைகளில் கூடிய கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளோம். இவை எல்லாவற்றிற்கும் அறிஞர்கள், கல்விமான்கள், வள்ளல்கள், பெற்றோர்கள், துடிப்புள்ள இளைஞர்கள், மாணவர்கள் ஆகிய ஒவ்வொரு அங்கத்தவர்களினதும் ஏகோபித்த ஒத்துழைப்பை சமூகம் வேண்டி நிற்கிறது.

முதற்படியாக விழிப்புணர்ச்சியும், சிந்தனைத்திறனும் நமது இளம் மாணவர் மத்தியில் முளைகொண்டு எழுந்து, அவை நல்வழியில் செயல் பெற்று, இஸ்லாமிய நெறி முறையில் இயங்க சமூகத்தில் உள்ள முக்கியஸ்தர்கள் தீர்க்கதரிசனத்துடன் அறிவுரைகளை அள்ளி வழங்க வேண்டும்; எம் பெற்றோர்களும் இளம் மாணவர்களும் உயர்கல்வியில் காட்டும் ஆர்வமும் ஆசையும் மேலும் மேலும் விருத்தியடைந்து பெருக வேண்டும். பல்கலைக்கழக வளாகங்களிலே விரல்விட்டு எண்ணக்கூடியவாறு காணப்படும் எமது மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும்; இந்தப் பாரிய பொறுப்பு மாணவர் சமுதாயத்தை வழி நடாத்தும் ஆசிரியப் பெருந்தகைகளின் கையில் தங்கியுள்ளது. உயர்கல்வி பெற வேண்டிய அவசியத்தையும், அவசரத்தையும் மாணவர்கள் மத்தியில் எடுத்தியம்பி, உரமூட்டும் சிந்தனைகளை அவர்கள் மத்தியில் தூவி முளைகொள்ளச் செய்து, சமூகமும் நாடும் போற்றக்கூடிய திறன்பெற்ற சமுதாயமாக ஒளிரச் செய்வது கடமை உணர்ச்சியுள்ள இவர்களின் பணியாம்.

அண்மைக் காலத்தில் நியமனம் பெற்று, பாடசாலைகளில் கல்வி புகட்டும் பணியைச் செய்யும் இளம் ஆசிரியர் சமுதாயம் பல்கலைக்கழகங்களில் நுழைந்து உயர் கல்வி பெற்று, தமது அறிவை மேலும் விருத்தி செய்து, வளர்ந்து வரும் புதிய தலைமுறையினருக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழவேண்டும் என்பது எமது அபிலாஷை. நாம் ''ஏணி'' போல் அல்லாது ''ஹெலிகொப்டர்'' போல் திகழ்வதுதான் நன்று. ஏனெனில் ஏணி மற்றவர்களை உயர ஏற்றி தான் கீழே நின்று விடுகிறது. ஆனால் ஹெலிகொப்டர் மற்றவர்களை உயர ஏற்றிக்கொண்டு தானும் மேலேறி முன்னேறுகிறது.

இன்று சமுதாயத்தில் பரவிக் காணப்படும் பொருளாதாரப் பிரச்சினை காரணமாக எத்தனையோ படிக்கக் கூடிய, படித்து சமுதாயத்திற்குச் சேவை செய்யக்கூடிய மாணவர்கள், இடை நடுவில் படிப்பை நிறுத்தி விட்டு சிறு தொழிலை நாடிச் செல்கின்றனர். சிலர் எதுவுமற்று அலைகின்றனர். இதன் காரணமாக இன்று சமூகம் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. முக்கியமாக பல்கலைக்கழகங்கள் போன்ற உயர் கல்விப்பீடங்களில் முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துள்ளது. எமது விகிதாசாரத்தில் ஒருவிகிதமானோரே பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுகின்றனர். அதுவும் பொறியியல், மருத்துவ, விஞ்ஞான பீடங்களில் மிகவும் சிறு தொகையினரே வளாகங்களில் காணப்படுகின்றனர். இந்நிலை தவிர்க்கப்பட வேண்டுமானால், வறிய ஏழைச்சகோதரர்களின் பிள்ளைகள் உயர்கல்வியைத் தொடர அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். இதற்காக நம் நாட்டில் உள்ள வசதி படைத்த முஸ்லிம்கள் அனைவரும் ஒன்று திரண்டு முன்வரவேண்டும். ஒரு சமுதாயத்தின் உயர்ச்சி அச்சமுதாயத்தில் கற்றோரின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதிலேயே தங்கியிருக்கிறது. ''கல்விக்கு உயிர் கொடுத்தோரின் புகழ், அவர்கள் இறந்தாலும் அழிவதில்லை'' என்ற எம் பெருமானார் (ஸல்) அவர்களின் அமுதவாக்கிற்கேற்ப, உயர் கல்வி கற்க ஆசையுடன் இருக்கும் வசதியற்ற மாணவர்களுக்கு பொருளாதார உதவி அளிப்பதன்மூலம், எம்சமூகத்தில் கற்றோர் தொகையை அதிகரிக்கச் செய்து, அவர்கள்மூலம் சமூகம் பயன் பெறுவதற்கான வழிவகைகளைச் செய்யப் பணம்படைத்த செல்வந்தர்கள் முன்வர வேண்டும். சில செல்வந்தர்கள் வீணாகச் செலவிடும் பணத்தை, எம்மாணவர்களின் உயர்கல்வித் தேவைகளுக்குப் பயன்படுத்த சிறிது சிந்தித்துப் பார்ப்பார்களா? அல்லது சிந்தித்தவர்கள் இதை அவர்களுக்கு உணர்த்துவார்களா?

அடுத்து தற்போது நடைபெற்றுவரும் பல்கலைக்கழக அனுமதியில் எமது கண்ணோட்டத்தைச் செலுத்தும்போது, அதில் பல ஒழுங்கீனங்கள் நடைபெறுவதைக் காணலாம். இம்முறையினால் இலங்கை முழுவதும் பரவலாக வாழும் முஸ்லிம் மாணவர்கள் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றனர். இதைப்பற்றி பல அரசியல் பிரமுகர்களிடம் அவ்வப்போது சுட்டிக்காட்டியும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை இந்த பாராமுக செயல் காரணமாகவே இன்று சகல பல்கலைக்கழக வளாகங்களிலும் மிகவும் சிறிய சமுதாயமாக நாம் காணப்படுகிறோம். பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியின் தராதரத்தை நிலைநிறுத்த இன, மொழி சார்பற்றமுறையில் மாணவர்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுகிறோம். தற்போது ஆட்சிப்பொறுப்பை ஏற்றுள்ள புதிய அரசாங்கம் பல்கலைக்கழக அனுமதியில் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு முறையை அமுல் செய்ய இருப்பதாக அறிவித்துள்ளது. முதற்படியாக பல்கலைக்கழக அனுமதியில் கடைப்பிடித்து வரும் தரப்படுத்தல் முறையை நீக்கியுள்ளது. இதற்குப் பதிலாக வேறு ஏதாவது முறை கடைப்பிடிக்கப்படலாம் எனப் பலரும் எதிர்பார்க்கின்றனர். எது எப்படியாயினும் எமது மாணவர் சமுதாயம் இச்சந்தர்ப்பத்தில் கல்வியில் கூடிய கவனம் எடுத்து அவதானத்துடன் செயற்படுவார்களாக!

எனவே நாளை மலரப்போகும் மாணவ தலைமுறையினரை மாறி வரும் நவீன உலகிற்கேற்ற, வளம்மிக்க, பொறுப்புள்ள பிரசைகளாக மாற்றி, அவர்களை சுபீட்சமாக நல்வழியில் வாழவைப்பது சிந்தனையும் துடிப்புமுள்ள அனைவரினதும் பொறுப்பாகும் என்று மீண்டும் கூறிவைக்க விரும்புகிறோம். ஆகவே சமூகத்தில் பொறுப்பானவர்கள் எனக்கருதப்படுபவர்கள் அவரவர்களின் கையில் ஒப்படைக்கப்பட்டுள்ள பாரிய பொறுப்புக்களைச் செவ்வனே நிறைவேற்றி, முழுமைபெற்ற சமுதாயமாக ஈழத்திலே தனித்துவத்தைப் பேணி வாழ்வோமாக.

— ஆசிரியர் குழு —

# Executive Committee



*Seated :* (*L. R.*) Mr. M. S. M. Cassim (*Junior Treasurer*), Mr. I. L. A. Jabbar (*President*), Mr. A. L. Jaufer Sadique (*Secretary*), Moulavi K. M. H. Kalideen (*Patron*), Mr. M. A. Nuhman (*Senior Treasurer*),

*Standing :* (*L. R.*) Miss. A. H. Mumthaz Begum (*Com: Member*), Mr. M. A. K. M. A. Hameed (*Co–Editor*), Mr. M. H. M. Uwais (*Com. Member*), Miss. Bakiya Jaleel (*Co–Editor*), Mr. M. T. Ahamed (*Vice-President*), Mr. I. S. Mathar (*Asst. Secretary*), Mr. Y. M. Ismail (*Social Secretary*),

*Absent :* Mr. M. B. Noor Mohamed.

# இலங்கை முஸ்லிம்களின் குடிப்பரம்பல்

A. C. S. ஹமீட்,
B. A. (Hons) உதவி விரிவுரையாளர்
புவியியல்துறை, இலங்கைப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாண வளாகம்.

இலங்கையின் மொத்தச் சனத்தொகை 1974ம் ஆண்டு தரவுகளின்படி 13·4 மில்லியன் ஆகும். இம் மொத்தச் சனத்தொகையில் சிங்களவர்கள் முக்கியமானவர்களாக உள்ளனர். இன அடிப்படையில் சிங்களவர்கள் 72 சதவீதமும், தமிழர்கள் 20 சதவீதமும், முஸ்லிம்கள் 8 சதவீதமும் காணப்படுகின்றனர். (அட்டவணை) மத ரீதியாக பார்ப்பின் பௌத்தர்கள் 67 சதவீதமும், இந்துக்கள் 18 சதவீதமும், முஸ்லிம்கள் 7 சதவீதமும், றோமன் கத்தோலிக்கர்கள், கிறித்தவர்கள் 8 சதவீதமும், என்ற ரீதியில் வாழ்கின்றனர். (அட்டவணை) அட்டவணையில் முஸ்லிம்களை இலங்கை முஸ்லிம்கள், இந்திய முஸ்லிம்கள், மலாயர்கள் என வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது இக் கட்டுரையில் இம் மூன்று பிரிவினரையும் முஸ்லிம்கள் என பொதுவான கருத்துப் பட கூறப்படுகின்றது.

## இலங்கை மக்களின் இன, சமய அடிப்படையிலான பிரிவுகள்

| இனப் பிரிவுகள் | | |
|---|---|---|
| பிரிவுகள் | மொத்தம் | சதவீதம் |
| தாழ்நாட்டுச் சிங்களவர்கள் | 5,445,706 | 42·8 |
| மலைநாட்டுச் சிங்களவர்கள் | 3,700,973 | 29·1 |
| இலங்கைத் தமிழர்கள் | 1,415,567 | 11·1 |
| இந்தியத் தமிழர்கள் | 1,195,368 | 9.4 |
| இலங்கை முஸ்லிம்கள் | 824,291 | 6·5 |
| இந்திய முஸ்லிம்கள் | 29,416 | 0·2 |
| பறங்கியர்கள் | 44,250 | 0·3 |
| மலாயர்கள் | 41 615 | 0 3 |
| ஏனையோர்கள் | 13,957 | 0.1 |
| மொத்தம் | 12,711,143 | 100.00 |

அட்டவணை 1 மூலம்: குடிசன மதிப்பு புள்ளி விபரப் பகுதி த்ணைக்களம் 1971

| சமயப் பிரிவுகள் | | |
|---|---|---|
| பௌத்தர்கள் | 8,567,570 | 67·4 |
| இந்துக்கள் | 2,239,310 | 17·6 |
| முஸ்லிம்கள் | 909,941 | 7·1 |
| ரோமன் கத்தோலிக்கர்கள் | 883,111 | 6:9 |
| ஏனைய கிறித்தவர்கள் | 103,576 | 0·8 |
| ஏனையோர்கள் | 7,635 | 0·1 |
| மொத்தம் | 12,711,143 | 100 |

அட்டவணை 2 மூலம்:- குடிசன மதிப்பு புள்ளி விபரப் பகுதி திணைக்களம் 1971

இலங்கையின் மொத்த சனத்தொகை அமைப்பில் முஸ்லிம்கள் ஏழு சதவீதத்தினராக உள்ளனர். மிகச் சிறிய அளவினராக காணப்படுகின்ற இவர்கள் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக ஒரே அளவில் எவ்வித மாற்றமுமின்றி காணப்படுகின்றனர். 1871ம் ஆண்டிலிருந்து 1971ம் ஆண்டு வரை முஸ்லிம்களின் சனத்தொகை வளர்ச்சியை அட்டவணை மூன்றில் அவதானிக்கலாம். இவ் அட்டவணையிலிருந்து மூன்று பிரதான தன்மைகளை நோக்க முடிகின்றது. மொத்தமாக முஸ்லிம்கள் கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் சுமார் 7·5 லட்சம் அளவில் அதிகரித்துள்ளனர். முன்னைய காலங்களுடன் ஒப்பிடும்போது இது ஒரு குறிப்பிடத்தக்க தொரு அமைப்பு எனலாம். அடுத்து மொத்த சனத்தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டபோதும் மொத்த சதவீத அளவில் (7 1%) எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்பது முக்கியமாகும். இறுதியாக சனத்தொகை சதவீத அளவு 1891 இருந்து தொடர்ச்சியாக குறைவடைந்து, பின் 1953 இலிருந்து ஏற்றமடைந்து இறுதியாக 1971 அளவில் 7·1 வீதமாக சமநிலை அடைகின்றது. எனவே சதவீத அளவைப் பொறுத்து ஏற்ற இறக்கம் காணப்படுகின்றது. மேற்கூறியவாறு பொதுவாக இலங்கை முஸ்லிம்களின் சனத்தொகை வளர்ச்சியில் சில தன்மைகளை அறிந்து கொள்ள முடிகின்றது.

முஸ்லிம்களின் சனத்தொகை வளர்ச்சி 1871 — 1971

| ஆண்டு | மொத்த எண் | சதவீத அளவு |
|---|---|---|
| 1871 | 171,542 | 7.1 |
| 1881 | 195,775 | 7·2 |
| 1891 | 211,995 | 7·0 |
| 1901 | 246,118 | 6·9 |
| 1911 | 283,631 | 6 9 |
| 1921 | 302,532 | 6·7 |
| 1946 | 436,556 | 6.6 |
| 19*3 | 541,506 | 6.7 |
| 1963 | 724,043 | 6.8 |
| 1971 | 909,941 | 7.1 |

அட்டவணை 3

குடிசன மதிப்பு, புள்ளி விபரப் பகுதி திணைக்களம்-கொழும்பு 1974

## மாவட்ட ரீதியாக முஸ்லிம்களின் குடிப்பரம்பல்

மாவட்ட ரீதியாக பரம்பலை அவதானிப்பின் முஸ்லிம்களின் இடம் சார்ந்த அமைவினை விளங்கிக் கொள்ளலாம். இலங்கையில் முஸ்லிம்கள் ஒரு பிரதேசத்தில் மாத்திரம் அடர்த்தியாக அன்றித் தீவு முழுவதும் பரவலாக வாழ்ந்து வருவது பிரதானமானதாகும். பெரும்பான்மை முஸ்லிம்கள் கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்றனர். இலங்கையில் மொத்த முஸ்லிம்களில் சுமார் 25 சதவீதத்தினர் கிழக்கு மாகாணத்தில் உள்ளனர். முஸ்லிம்களின் சனத்தொகைப் பற்றிய ஒரு ஆய்வில் பாலகிருஷ்ணன் குணசேகர ஆகிய இருவரும் இக்கருத்தினை வலியுறுத்துகின்றனர்.1 கொழும்பு, கண்டி, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் சுமார் 46 சதவிகித அளவில் (அட்டவணை 4) முஸ்லிம்கள் அதிகமாக வாழ்கின்ற மாவட்டங்களாக உள்ளன. (அட்டவணை 8) இவை ஒவ்வொன்றிலும் முஸ்லிம்கள் ஒரு இட்சத்துக்கு மேற்பட்ட எண்ணிக்கையுடையவராக இருக்கின்றனர். இம் மூன்று மாவட்டங்களும் முறையே மேற்கு, மத்திய, கிழக்கு ஆகிய மாகாணங்களில் அமைந்திருக்கின்றன.

கொழும்பு மாவட்டம் ஏனைய இரண்டு மாவட்டங்களையும் விட ஒரு சிறப்புத் தன்மை உடையதாக இருக்கின்றது. மாவட்டத்திலுள்ள மொத்த முஸ்லிம்களில் சுமார் 65 வீதத்துக்கு மேலானோர் கொழும்பு மாநரக சபை எல்லைக்குள் வாழ்கின்றனர். இது முஸ்லிம்கள் எந்தளவு நகர வாழ்வில் தங்கியிருக்கின்றனர் என்பதனை எடுத்துக்காட்டுகின்றது. வர்த்தகர்கள் பெருமளவு இப்பகுதியில் இருக்கின்றனர். அனேக முஸ்லிம்கள் மாநகர சபை எல்லைக்குள் வசதியற்ற முறையிலே வாழ்ந்து வருகின்றனர்.

கண்டி மாவட்டத்தில் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்டளவில் முஸ்லிம்கள் வாழ்ந்தாலும், கொழும்பைப் போன்றல்லாது இங்கு ஆங்காங்கே சிதறுதலாக கிராமங்கள் தோறும் வாழ்கின்றனர். அம்பாறையிலும் இது போன்றேயாகும். முஸ்லிம்கள் சிதறுதலாக வாழ்ந்தாலும் குழு. குழுவாக வாழ்கின்ற நிலை பிரதானதொரு தன்மையாகும். இந்த முறையில் இவ்விரு மாவட்டங்களிலுமுள்ள கிராமிய அமைப்பினை நாம் அறியலாம் 2 இது போன்று ஏனைய மாவட்டங்களிலும் இவ்வாறான தன்மையை எடுத்துக் காட்டலாம். யாழ்ப்பாண முஸ்லிம்களில் பெரும்பான்மையினர் குறிப்பிட்ட ஒரு எல்லைக்குள்ளே வாழ்கின்றனர். மட்டக்களப்பில் காத்தாங்குடியும் முஸ்லிம்கள் அடர்த்தியாக வாழும் இன்னொரு பகுதியாகும்.

அட்டவணை நான்கின்படி ஐம்பதினாயிரத்துக்கும் ஒரு இலட்சத்துக்கும் இடைப்பட்ட முறையில் முஸ்லிம்கள் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் வாழ்கின்றனர். மொத்த முஸ்லிம்களில் பதினைந்து சதவீதத்தினர் இவ்விரு மாவட்டங்களிலும் உள்ளனர். மேற்கூறிய ஐந்து மாவட்டங்களையும் விட ஏனைய பதினேழு மாவட்டங்களிலும் சுமார் நாற்பது சதவீதத்தினரே இருக்கின்றனர். களுத்துறை குருணாகல், புத்தளம், கேகாலை, அநுராத ஆகிய மாவட்டங்களில் குறிப்பிடத்தக்களவு முஸ்லிம்கள் 25,000 — 60.000க்கும் இடைப்பட்ட அளவில் வாழ்கின்றனர் தலா 10,000க்கும் குறைவானளவில், மொனராகலை, ஹம்பாந்தோட்டை வவுனியா, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் இருக்கின்றனர்.

1 Balakrishnan, N; and Gunasekera H. M. 'A review of demorgraphic trends' the institute of Asian Affairs Hamburg, P. 117 – Sri Lanka A survey, 1977.

2 குடிசன காணிப்பீடு புள்ளி விபரம் பகுதி திணைக்களம் ஜூன் 1972 இதில் காட்டப்பட்டுள்ள சில அட்டவணைகளிலிருந்து இத்தன்மையினை அறியலாம்.

அட்டவணை 4

## இலங்கை முஸ்லிம்களின் வகை வகுப்பு – அடிப்படையிலான விபரம்

| வகை வகுப்பு (இலட்சத்தில்) | மொத்த எண் | மாவட்ட எண் | சதவீதம் |
|---|---|---|---|
| < 0.10 | 28437 | 4 | 3.1 |
| 0·10 — 0.15 | 56781 | 3 | 4.0 |
| 0 15 — 0 25 | 1,06098 | 5 | 11.7 |
| 0 25 — 0 5 | 1.95454 | 5 | 21.5 |
| 0 5 — 1.0 | 1,24682 | 2 | 13.7 |
| 1.0 > | 4.18459 | 3 | 46 0 |
| மொத்தம் | 9,09911 | 22 | 100 0 |

அட்டவணை 4ன், மூலம் : 1971 ஆம் ஆண்டு குடிசன மதிப்பு புள்ளி விபரங்களின் படி

அட்டவணை 5

## சதவீத அடிப்படையில் நகர, கிராமிய முஸ்லிம் சனத்தொகை

| வகை வகுப்பு சதவீத அடிப்படையில் | மொத்த எண் | | மாவட்டங்களின் எண் | |
|---|---|---|---|---|
| | நகரம் | கிராமம் | நகரம் | கிராமம் |
| < 25 | 39808 | 29333 | 8 | 2 |
| 26 — 50 | 1,407 3 | 24815 | 9 | 4 |
| 51 — 75 | 68820 | 2,20683 | 4 | 9 |
| 76 — 100 | 1.64187 | 2,08719 | 1 | 7 |
| மொத்தம் | 4,13598 | 4,83560 | 22 | 22 |

அட்டவணை: 5 மூலம்: 1971 புள்ளி விபரங்களின்படி தயாரிக்கப்பட்டது.

### நகர கிராமிய அமைப்பு முறை

சிதறுண்டு வாழ்கின்ற முஸ்லிம்கள் ஒவ்வொரு மாவட்டங்களிலும்; வாழ்கின்ற போது. அவர்களது சமூக, பொருளாதார நடவடிக்கைகள் கூட பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபட்டு அமைந்துள்ளது. இதனால் அவர்களது வாழ்க்கை முறைகள், பொருளாதார நடவடிக்கைகளைப் பின்னணியாகக் கொண்டு அமைந்துள்ளமையைக் காண முடிகின்றது. நகர கிராமிய அமைப்பு முறையில் முஸ்லிம்களின் நிலையை அவதானிப்பின் மொத்த முஸ்லிம்களில் சுமார் 46 சதவீதத்தினர் நகரப் பகுதிகளில் வாழ்கின்ற தன்மை பிரதானமானதாகும். இலங்கையின் ஏனைய சமூகத்தவருடன் ஒப்பிடும்போது இது ஒரு சிறப்பான தன்மையினதாகவுள்ளது. (ரோமன் கத்தோலிக்கர்களைத் தவிர)3

அட்டவணை ஐந்து இலங்கையில் முஸ்லிம்கள் நகர கிராமப்பகுதிகளில் வாழும் எண்ணிக்கையைச் சதவீகிதத்தில் எடுத்துக் காட்டுகின்றது. இவ் அட்டவணையிலிருந்து இரண்டு பிரதான தன்மைகளை அவதானிக்கலாம். ஒன்று, நகர வாழ்விட அமைப்பில் முஸ்லிம்கள் மாவட்ட அடிப்படையில் குறைந்த சதவிகித வகுப்பிலிருந்து கூடிய சதவிகித வகுப்பிற்கு குறைந்து செல்வதும்; இரண்டாவது கிராமிய வாழ்விட அமைப்பில் மாவட்ட அடிப்படையில் குறைந்த சதவிகித வகுப்பிலிருந்து கூடிய சதவிகித வகுப்பிற்கு அதிகரித்துச் செல்வதுமான எதிர் மாறான தன்மையினை விளங்கிக் கொள்ளலாம். உதாரணமாக 8 மாவட்டங்களிலுள்ள நகரப்பகுதியில் 25 சதவிகிதத்துக்குக் குறைவான மக்கள் வாழும் அதே வேளை இரண்டு மாவட்டங்களிலுள்ள கிராமப்பகுதியில் மாத்திரமே இதே வகையில் வாழ்கின்ற முஸ்லிம்கள் உட்படுத்தப்படுகின்றனர் இவ்வாறு நகர, கிராமிய அமைப்புமுறை ஒவ்வொரு மாவட்டத்திலும் வேறுபட்டு அமைந்துள்ளது. கொழும்பு மாவட்டத்தில் மாத்திரமே 75%க்கு மேலானோர் வாழ்கின்றனர்.

அதேவேளை மன்னார், வவுனியா, அம்பாறை, குருணாகல், அநுராதபுரம், பொலன்னறுவை, மொனராகலை ஆகிய மாவட்டங்களிலும் 75%க்கு மேலான முஸ்லிம்கள் கிராமப் புறத்தில் வாழ்கின்றனர். கொழும்பு மாவட்டத்தை அடுத்து முஸ்லிம்கள் களுத்துறை, காலி, யாழ்ப்பாணம், ஹம்பாந்தோட்டை ஆகிய நான்கு மாவட்டங்களிலும் அதிகமாக நகரப் பகுதிகளில் வாழ்கின்றனர். இருப்பினும் மொத்த ரீதியாக அதிகளவினர் கிராமப்புற அமைப்புடையவர்களாக இருப்பது கவனிக்கத்தக்க தொன்றும்.

அட்டவணை 6

#### தேர்தல் தொகுதி அடிப்படையில் முஸ்லிம்கள்

| தேர்தல் தொகுதிகளில் முஸ்லிம்களினளவு (சதவிகிதத்தில்) | தேர்தல் தொகுதிகள் மொத்த எண்ணிக்கை |
|---|---|
| — 5.0 | 102 |
| 5·0 — 10.0 | 30 |
| 10·0 — 20·0 | 17 |
| 20.0 — 60.0 | 04 |
| 30.0 — 40·0 | 03 |
| 40.0 — 60·0 | 01 |
| 60.0 — 80·0 | 03 |
| மொத்தம் | 160 |

மூலம்: Derived From:– Report of the Delimitation Commission 1975

3 குடிசன கணிப்பீடு இல. 1 ஜூன் 1972, பக்கம் 2, அட்டவணை 2.

## தேர்தல் தொகுதிகளும் முஸ்லிம்களும்

இலங்கை முஸ்லிம்கள் சிதறுண்டு வாழ்கின்ற ஒரு அமைப்பு அரசியல் ரீதியாக பெரும் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. தேர்தல் தொகுதிகளின்படி மொத்த முஸ்லிம்களின் சனத்தொகை அளவுக்கேற்ப தேசிய அரசுத் பேரவைக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க முடியாத நிலையுள்ளது. முஸ்லிம்கள் அதிகமாக வாழும் ஒருசில தொகுதிகளில் மாத்திரம் அவர்களுக்கென ஒரு பிரதிநிதியைத் தேசிய அரசுப்பேரவைக்கு அனுப்பக்கூடிய வசதி காணப்படுகின்றது. 4

அட்டவணை ஆறு இனை அவதானித்தால் இதில் ஒவ்வொரு தேர்தல் தொகுதிகளிலும் முஸ்லிம்கள் விகிதாசார அளவில் எந்தளவு வாழ்கின்றனர் என்ற விபரத்தைக் கண்டு கொள்ளலாம். இதிலிருந்து விளங்கக்கூடிய ஒரு முக்கிய விடயம் என்னவெனில்; முஸ்லிம்கள் 50 வீதத்துக்கு மேற்பட்டளவில் வாழ்கின்ற தொகுதிகள் மொத்தம்; நான்காகும் 5 சம்மாந்துறை (74, 81), கல்முனை (63, 63), மூதூர் (66, 11), பொத்துவில் (50, 57) 6 ஆகிய நான்கு தேர்தல் தொகுதிகளும் முஸ்லிம்களுக்குரிய தேர்தல் தொகுதிகளாகும். இதனைவிட 30 – 40 சதவிகிதமளவில் முஸ்லிம்கள் வாழும் தேர்தல் தொகுதிகளாக மத்திய கொழும்பு (35, 55) புத்தளம் (39, 52) மட்டக்களப்பு 7 34, 24) ஆகியவை காணப்படுகின்றன.

இத்தேர்தல் தொகுதிகளிலிருந்து அநேகமாக ஒரு முஸ்லிம் அங்கத்தவர் தேர்ந்தெடுக்கப்பட முடியுமாயினும் சிலவேளை தேர்ந்தெடுக்கப்படாதும் போய்விடலாம். எப்படியாயினும் பொதுவாகத் தேர்தற் தொகுதி அடிப்படையில் சுமார் 7 முஸ்லிம் அங்கத்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படக் கூடிய சூழ்நிலை குடிப்பரம்பல் அடிப்படையில் இலங்கையில் இருப்பதாகக் கூறலாம்.

## இந்திய முஸ்லிம்களும் மலாயர்களும்

இலங்கையில் இந்திய முஸ்லிம்கள் மிகச் சிறிய தொகையினராக, மொத்தச் சனத் தொகையில் 0 2% அளவினராகக் காணப்படுகின்றனர். இந்திய முஸ்லிம்கள் மொத்தமாக 29416 பேர் இலங்கையில் வாழ்கின்றனராயினும், அண்மைக் காலங்களில் இவ்வெண்ணிக்கை அரசாங்கக் கொள்கையினடிப்படையில் மாறுதலடைந்து வருகின்றது. இந்தியமுஸ்லிம்கள் இந்தியாவுக்குக் குடிபெயர வேண்டியிருந்தமை அவர்கள் குறைவடைவதற்குக் காரணமாகும். 8 இதில் கொழும்பு, கண்டி ஆகிய மாவட்டங்களில் மாத்திரம் மொத்த இந்திய முஸ்லிம்களில் சுமார் 40 வீதத்தினர் வாழ்கின்றனர். பெருமளவு இந்திய முஸ்லிம்கள் கொழும்பு மாவட்டத்திலே உள்ளனர். கடந்த 50 வருடங்களாகக் கொழும்பு நகரத்தில் இந்திய முஸ்லிம்கள் வாழ்ந்து வந்த நிலையினை அட்டவணையிலிருந்து நோக்கலாம்.

4 Report of the Delimitation Commission 1975 C S P No. 1 – 1975 Oct. 1976 Govt Press, Colombo

5 1977ம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற தேர்தலில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் தொகை 12 ஆகும். இந்த உறுப்பினர் அனைவரும் தனியாக முஸ்லிம்களின் செல்வாக்கினால் தெரிவு செய்யப்பட்டவல்லர். ஹரிஸ்பத்துவ, வேருவளை, பொரளை ஆகிய தொகுதிகளில் முஸ்லிம்கள் சிறுபகுதியினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

6 பொத்துவில் இரட்டை அங்கத்தவர் தொகுதியாகும் சரிசமமாக வாழும் தமிழர்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்குவதற்காக இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது.

7 மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதியாக இருப்பதற்குக் காரணம் முஸ்லிம்களுக்கு ஒரு பிரதிநிதித்துவம் கொடுப்பதற்காகவே யாகும் இருப்பினும் பல முஸ்லிம்கள் கட்சியடிப்படையில் போட்டியிடும்போது சில சமயம் முஸ்லிம் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட முடியாத நிலை ஏற்படுவதுமுண்டு.

8 op.cit Page 117

அட்டவணை 7

கொழும்பு நகரத்தில் மொத்த சனத்தொகையமைப்பில்
முஸ்லிம்களது சதவீத அடிப்படையிலான பிரிவு 1921 — 1971

| | 1921 | 1931 | 1946 | 1953 | 1963 | 1971 |
|---|---|---|---|---|---|---|
| இலங்கை முஸ்லிம்கள் | 10.4 | 10·3 | 12·4 | 18 5 | 17.4 | 18·1 |
| இந்திய முஸ்லிம்கள் | 5.8 | 5.2 | 4.4 | 4.2 | 1.4 | 0·9 |
| மலாயர்கள் | 2·4 | 2·5 | 3·0 | 2·7 | 2·2 | 2.6 |

அட்டவணை மூலம்: குடிசன மதிப்பு புள்ளி விபர திணைக்களம் கொழும்பு. (1974)

இதில் கடந்த 50 ஆண்டுகளில் இந்திய முஸ்லிம்களினளவு குறைந்து வந்திருக்கின்றமையையும், இலங்கை முஸ்லிம்களினளவு அதிகரித்து வந்திருப்பதனையும் அவதானிக்கலாம். பதுளை, இரத்தினபுரி மன்னார், குருணாகல், நுவரெலியா, கேகாலை, அம்பாறை, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் இந்திய முஸ்லிம்கள் ஓரளவு காணப்படுகின்றனர் அநேகமும் அவர்கள் குறிப்பாக நகர்ப் பகுதிகளிலேயே வாழ்கின்றனர்.

மலாயர்களும் சுமார் 0·3% அளவினராக மொத்தம் 41615 பேர் வாழ்கின்றர். கடந்த 25 ஆண்டுகளில் இவர்கள் இருமடங்காக அதிகரித்துள்ளனர். 9 கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் மொத்த மலாயர்களில் 64 வீதத்தினர் வாழ்கின்றனர். அதையடுத்து ஹம்பாந்தோட்டை, கண்டி, பதுளை, குருணாகல் ஆகிய மாவட்டங்களில் பரவலாகவும் வாழ்கின்றனர்.

9: ibid. page 117

## முடிவுரை

இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம்களின் குடிப்பரம்பலைப் பொதுவாகவும், மாவட்ட ரீதியாகவும், பின் நகர - கிராமிய முறையிலும், தேர்தல் தொகுதி அடிப்படையிலும் அவதானிக்கும்போது சில உண்மைகளை எடுத்துக்காட்ட முடிகின்றது. தமக்கே உரிய சமூக காலசார அம்சங்களுடன் இலங்கையில் முஸ்லிம்கள் பரவலாகவும் குழுக்களாகவும் வாழ்கின்ற அமைப்பு முக்கியமானது. பிரதேச ரீதியாக முஸ்லிம்கள் எங்கும் ஒரே அளவினராகக் காணப்படவில்லை. ஏனைய சமூகத்தவர்களுடன் ஒப்பிடுகின்றபோது முஸ்லிம்கள் நகரப் பகுதிகளிலதிகமாக வாழ்கின்றனர். மொத்த சனத்தொகை அடிப்படையில் தேர்தல் தொகுதிகளில் அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுப்பது பிரச்சனைக்குரிய விடயம் என்பது போன்ற விடயங்களை அறியக்கூடியதாகவுள்ளது.

※

| மாவட்டம் | மொத்தம் | நகரம் | சதவீதம் | கிராமம் | சதவீதம் | தோட்டம் |
|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 1,87,987 | 1,64,187 | 87·3 | 23,781 | 12.7 | 19 |
| களுத்துறை | 49,600 | 36,000 | 72.6 | 13,340 | 26 9 | 260 |
| கண்டி | 1,04,469 | 26,569 | 25 4 | 73,477 | 70.3 | 3323 |
| மாத்தளை | 21,825 | 7,709 | 35·3 | 13,443 | 61 6 | 673 |
| நுவரெலியா | 9,609 | 1,870 | 19.5 | 5,717 | 59 5 | 2022 |
| காலி | 22,555 | 16,808 | 74·5 | 5,552 | 24 6 | 195 |
| மாத்தறை | 14,960 | 7,708 | 47.3 | 7,756 | 51.8 | 126 |
| யாழ்ப்பாணம் | 15,520 | 11,388 | 73.4 | 4,138 | 26 6 | — |
| மன்னார் | 21,910 | 2,553 | 11.6 | 19,354 | 88.4 | — |
| வவுனியா | 6,999 | 1,469 | 21·0 | 5.530 | 79.0 | — |
| மட்டக்களப்பு | 62,519 | 31,147 | 49.8 | 31,362 | 50.2 | 10 |
| அம்பாறை | 126,003 | 24,525 | 19.5 | 1,01,508 | 80.5 | — |
| திருகோணமலை | 62,163 | 29,606 | 47.6 | 32,527 | 52.3 | 36 |
| குருனாகல் | 48,881 | 5,707 | 11 7 | 43,031 | 88.0 | 143 |
| ஹம்பாந்தோட்ட | 7,634 | 4,624 | 60 6 | 3,004 | 39 3 | 6 |
| புத்தளம் | 39,548 | 16,836 | 42.6 | 22,599 | 57 1 | 113 |
| அனுராதபுரம் | 27,274 | 3,224 | 11.8 | 24,031 | 88 1 | 19 |
| பொல்லநறுவை | 11,603 | 360 | 3.1 | 11,241 | 96 9 | 27 |
| பதுளை | 24,288 | 7,631 | 31.4 | 14,820 | 61 0 | 1837 |
| மொனராகலை | 4,195 | 100 | 23·8 | 4,031 | 96.1 | 64 |
| இரத்தினபுரி | 10,218 | 4,059 | 39.7 | 4,333 | 42.4 | 1826 |
| கேகாலை | 30,151 | 10,154 | 33·7 | 18,982 | 63.0 | 1015 |

அட்டவணை 8 மூலம்:– 1971 ஆம் ஆண்டு தரவுகளின் அடிப்படையில் கணிக்கப்பட்டுள்ளது.

*Donated By*

# AL-HAJ-C. L. M. ABUL HASSEN

21. STADIUM ROAD.

CHINA FORT,

BERUWALA.

# பாவா
## ரெக்ஸ்ரைல்ஸ்

பலவகைப் பிடவை வகைகளும்
ரெடிமேட் உடுப்புகளும்
சூட்டிங், சேட்டிங் வகைகளுக்கு
எங்களிடம் விஜயம் செய்யுங்கள்.

குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள
சிறந்த இடம்.

**BAWA TEXTILES**
63, Main Street,
KALMUNAI

**EVEREST TEXTILES**
எவெரெஸ்ட் ரெக்ஸ்ரைல்ஸ்

உங்களுக்குத் தேவையான
சகலவிதமான பிடவைத் தினிசுகள்
கூறைச் சேலை வகைகள்
றெடிமேட் உடைகள்
குறைந்த விலையில்
கிடைக்கும் இடம்

EVEREST TEXTILES
75, Main Street,
KALMUNAI

*VISIT* *Phone :* **286**

- LOVELY
- LIVELY
- **FASHION JEWELLERY**

# K.T.M.JEWELLERS
67, Kannathiddy,
**JAFFNA.**

# COME, LET US CHANGE THE WORLD

by A. M. AMIRUDIN, M. Sc., M. Tech;
*( Research Officer, C. I. S I. R.)*

A glance at the newspaper will inform us how chaotic todays world is. Terrosism, poverty persecution, nervous breakdown, nudism, suicide etc. are the order of the day People are unhappy the world over and Sri Lanka is no exception Recently, we were witnesses to two bloodletting incidents–the post election violence and the communal riots–in the Island. Some questions naturally arise within us when we observe such distressing events. What is the cause of all such calamities? Are the cause one or many? Are the causes same all over the world or different? How to cure the world of these maladies? I intend to answer these questions with the following illustration.

Let us assume that a university obtains a computer from a firm for its engineering faculty. It is obvious that the firm which manufactures it will send an instructiou manual along with the computer to explain how it should be fitted up and made use of. If the computer is a very complex instrument then the firm will send along one of its engineers, in order to show the university authorities the method of its operation. If the university authorities are prudent enough, they will observe how the engineer operates it and after his departure (for the firm cannot loan the engineer for an indefinite time) closely adhere to the instruction manual. Now, if the professor of engineering claims that neither the engineer nor the manual is needed to operate the computer, and starts meddling with it, the outcome is obvious. The computer, costing millions, will go out of order in no time causing the univesrity a severe loss. The professor may be a Nobel laureate but, still for all, he will be an utter failure if he tries to operate the computer. The engineer and the instruction manual are the sources to which the professor should turn to, because only the firm which manufactured the instrument knows the in and out of it.

Even in actual practice we see our lecturers and professors first turning to the instruction manual on receiving a scientific instrument whether it be a computer, a spectrophotometer or an electron microscope. This is so because these learned people know their limitations.

Unfortunately, this realisation has not dawned upon Man in the matter of formulating a Way of Life. In this world the computer takes the role of The Way of Life, the firm that of God, the university that of Man, the engineer that of the Holy Prophet and the instruction manual that of the Book of God (Divine Guidance). Here, Man thinks that he is all wise, and with his meagre knowledge and biased mind, tries to chalk out a Way Life. He discards Divine Guidance and forget. the actions of the Messenger of Gods He experiments with his life. As a natural coonsequence of this foolishness disasters and calamities have appeared on the earth as will be the case with the computer if misused.

But, unfortunately, Man has not learnt a lesson. If he fails with one man-made system of life he jumps to

another. Consider the Capitalist countries like France and Italy. In such nations people are disgusted with Capitalism and incline towards Communism. On the other hand, Communist countries such as Hungary and Czechoslovakia, edge towards Capitalism till they are forcibly prevented by extraneous forces. It seems that Man has taken the role of a pendulum, swinging left and right, and searching for truth.

Let me summarise my arguments in a few lines The world is thoroughly sick and should be saved. The only remedy for this sickness is Divine Guidance. A corollary of the above-mentioned two points is that it is the duty of every citizen of this earth to strive and establish Divine Guidance as The Way of Life.

It is towards this duty I invite you. But you must know what you take on if you accept my invitation, whether you seek to quarrel with anyone or not the whole world will come and quarrel with you. Your family, friends, community and society will all turn against you. As soon as you raise the cry "to Divine Guidance" you will feel as if all of a sudden the earth and the heavens has turned your enemies and on all sides you will find yourselves encircled by hostile elements. This very state of affairs confronted all the messengers of God. This will happen to you once you start walking on this path–the path of sweat, blood tears ; the path of truth ; and to be precise, the path of God.

Striving in this path will be amply rewarded by the Almighty and failure to do so will earn severe punishment, "And there may spring from you a nation who invite to goodness, and enjoin right conduct and forbid indecency. Such are they who are successful".

Al Quran 3 – 104

If you have made up your mind to travel on this arduous path, then the first act of yours is to study the D vine Guidance. Here, I recomend the translation of the Holy Quran by M. M. Pickthall, which can be obtained free. The second book I recomend is Seyed Qutb's "Milestones". Each chapter in this book is a milestone in the path of the Mujaddid (that is, one who strives in the way of God). The third book I wish to recomend is Maryam Jameela's "Islam in Theory and in Practice" which gives the biography of various reformative movements whose ideology was the Quran.

One word of caution. There are two classes of leaders in The Community of whom you must be aware of. These are the enemies within, who stab in the back. They are the Madrasa-educated Maulvis and the college-educated pseudo-intellectuals–pseudo intellectuals because their intellect is mortgaged to the West. Both these groups have the masses hoodwinked and will resist all efforts of Quranic revival. They have reduced dynamic Islam to a static one by the simple process of selecting a few sentences of the Quran and neglecting all other verses. The present concept of Islam which emphasises mere rituals is the handiwork of these leaders. So, beware of them !

And so, shall we rise to the occasion and strive in Allah's path ? Or shall we not ?

# A. K. S. & SONS

வண்ண, வண்ண டிசைன்களில்

## அழகிய தங்கப்பவுண் நகைகளை

நம்பிக்கையாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய
சிறந்த ஸ்தாபனம்

## A. K. S. & SONS

68, KANNATHIDDY,
JAFFNA.

*With Best Compliments of*

## NAFEELA'S

Dealers in Oilman
Fancy Goods

43, Perakumba Street,
KURUNEGALA.
T.P. 6155

*Visit for*

MODEL AND HIGH CLASS

## Tailoring

TO

## JAWAD SONS

47, Perakumba Street,
KURUNEGALA
Tele : 6281

With Best Compliments of

# C·A·R·E·E·M·S

91, Main Street,

MATALE.

PHONE:- 434

**Dealers in Textiles**

*With Best Combliments*

*from*

# NOUHAR SOAP INDUSTRIES

**China Fort, Beruwala.**

---

## ஜெமீனா ரெக்ஸ்ரைல்ஸ்

* பலவகைப் பிடவைகளும்,
* றெடிமேட் உடுப்புக்களும்
* சில்லறையாகவும்
* மொத்தமாகவும்

பெற்றுக்கொள்ள
சிறந்த இடம்

## JAMINA TEXTILES

SAINTHAMARUTHU-4

KALMUNAI.

---

*Donated by*

## T. M. M. MOHIDEEN
## ABDUL CADER & BROS.

KALMUNAI.

*Phone:* 229 *Grams:* THAMEEM

*Dealers in:*

Drugs, Groceries,
Hardware, Food Stuffs Etc,

*Colombo Office:*

116/4, PRINCE STREET,
PETTAH.

*Phone:* 24739

**With Best Compliments**

**from**

# MEEYANA KAWANA SONS

AL-HAJ. C. M. ABDUL CAFOOR, J.P.

( PARTNER )

## GEM MERCHANT & EXPORTER

OFFICE :

**GEM MINERS & DEALERS IN PRECIOUS STONES**

**3, ZAVIA ROAD,**
**RATNAPURA.**

BRANCHES :

**Res. Phone : 802**
**"Dar-Ul-Naseehe"**
**45/5, China Fort,**
**BERUWALA.**
**(Sri Lanka)**

**320, Galle Road,**
**COLOMBO-3**

**Phone : 20774**

# Development of Islam in Sri Lanka

*BY*

**M. I. M. NALIR** B.A. (Hons) (Ceylon) C.A.S.

Sri Lanka, till recently known as Ceylon and better known to the Arab World as 'Serendib' or 'Saylan'' has been described as the Pearl of the East. In fact, the clinging of the Pearl bearing oysters to the beautiful cerals adorn her shoreline like an ornamental necklace in the neck of Mother Lanka.

A short distance away from the shoreline, stands the lofty hills of the Central highlands. The penetration of the maritime winds has a tempering effect on the highland region and the land on the windward side. The long coastline, extending from North to South has made the maritime influence more effective.

The country is situated within the tropics. Yet our geologically ancient country forming part of the ancient "Gondavanaland" is in a favoured position, climatically. The lattitudinal position, with altitudes rising up to 9000 feet from the coast within a short distance of approximately 150 miles and influenced by the effect of the martime winds has brought about this favoured climatic condition, providing sufficient sunshine, high rainfall and fluctuation of temperatures, facilitating the production of a wide range of food crops, agricultural and industrial raw material and marine products. This advantageous position, along with the very fine harbour facilities available in the country, has made us the envy of many nations and attracted many nations to our land, primarily, for purposes of trade and commerce. This event is also the cause of the infiltration of different cultures into our country, historically.

Sri Lanka was ruled by the great Sinhala Kings till the arrival of the Portuguese, Dutch and the British. During the period of the rule of the great Sinhala Kings and thereafter, the Arabs visited our country frequently for purposes of trade and some of them even settled down here; and continued to have regular contacts with the Arab world. Consequently, Islam began to spread in this country and several Islamic Religious Institutions inclusive of Mosques and Madarasas get established, essentially in the coastal towns. The Arabs who came to Sri Lanka for purposes of trade, made remarkable contributions to the economic development of the country.

During the period of foreign rule, the foreign rulers were more concerned about the collection of revenue, marketing of manufactured goods of foreign countries and the collecting of raw material for the industries of the home country. The presence of foreign personnel, of authority, in our country brought about a change in the traditional culture that prevailed in our country. The traditional culture began to feel the iufuence of Western culture by the infiltration of foreign cultures brought by the foreigners. The development of Islam too had a set back during this period for various reasons.

Muslims from other countries, especially India, also visited Sri Lanka

at different times for purposes of trade, and trade took them to all parts of the country. They were also instrumental in establishing Islamic Religious Institutions wherever they established trading centres and thus contributed to the religious development of the Muslims in Sri Lanka.

The advent of Islam in Sri Lanka is attributable to the presence of the Arabs in our country They pursued the development of Islam with leaving came and provided nourishment to its growth by providing facilities for religious observances and religious education With the assistance rendered by the Arabs, who visited our country regularly, the Indian Muslims and others, Islam reached its zenith and occupied a pride of place among other religions of tne country. Muslims lived a life of practising Muslim according to Islamic Shariath Law and the Almighty Al ah gave them what they deserved. Now it is our lot to safeguard and preserve the position that Islam and Muslims occupied.

Today, we Muslims of Sri Lanka, form a minority group accounting for only seven percent of the total population. This small percentage is distributed all over the island. There are approximately 1,400 Mosques, 500 Quran Madarasas and 25 Arabic Colleges. catering for the religious needs of the Muslim population of the country. A large number of these institutions are situated in remote villages The economic condition of the villagers living in such areas does not permit them to provide the necessary resources for maintaining or providing the basic needs of such institutions and to provide facilities for religious observances and religious education.

The Muslims living in such areas have the religious fervour and are enthusiastic to establish facilities for the religious needs and for the religious education of the children. Given the opportunity, a rapid religious development and re-awakening among the Muslim community is certainly possible "INSHA ALLAH."

The enactment of the Wakfs Act in 1956 and the establishment of the Department of Mosques and Muslim Charitable Trusts is a land mark in the history of Islamic religious development in Sri Lanka. This event assisted the Muslim Community to understand the conditions of the Islamic religious institutions, know its needs and arrange to provide the needs for the upliftment of each and every institution. The programme of religious development that is being implemented by the Wakfs Board through the medium of the Muslim Charities Fund has made it possible to assist the development of as much as 500 Quran Madrarasas for the benefit of the Muslim children living in remote villages. In fact, it is really heartening to observe the religious development that is taking place in the remote villages, as a result.

Villages which did not have Quran Madarasas have now established same or the benefit of the poor children. Quran Madarasas which taught Quran have now began to teach Quran according to Thajweed Lawa and are producing "HAFILS" in Such Madara as Arabic Madarasas are coaching the children to understand the Holy Quran and are also imparting religious knowledge.

We also see the development of institutions imparting secular and religious education simultaneously. The Jamiah Naleemiah at Chinafort, Beruwala the Ahadiya Academy at Kuliyapitiya and the Muslim Ladies, Arabic College, Kal-Eliya, may be mentioned as some institutions providing such education.

Yet we have to do a lot more for the religious development of the Muslims of Sri Lanka. Many more Madarasas to teach Quran, Arabic Colleges to impart religious knowledge and institutions providing facilities for secular and religious education simultaneously, are very necessary and should be established very urgently for the benefit of the growing Muslim children, who do not have such facilities at present.

The present trend of events and the activities of the youth movements spotlight the urgent necessity to establish religious institutions rapidly for the benefit of the growing children to enable the re-orientation of their thinking, in the correct perspective, on a religious basis, for the betterment of humanity.

The assistance of Muslims at large is very necessary for the successful implementation of the ambitious programme of religious development and assistance in this cause of "SADAKATHUL JHARIYA" awaits great rewards with the Almighty Allah."

In conclusion, the Muslims of Sri Lanka pray to the Almighty Allah for his benevolence of sending the Arabs and Muslims from other countries to our country which made us to be born as Muslims with our faith as Islam, in conformity with the Quranic injunction of "INNAD DHEENA INTHALLAHIL ISLAM" and we are very thankful for this event, "ALHAMDU LILLAA".

May Allah help us to lead the life of Muslims according to "SHARIATH" Laws and guide our children to grow up as Muslims live as Muslims and depart as Muslims in conformity with the other Quranic injunction of "WALATHAMOOTHUNNA ILLA-WA-ANTHUM MUSLIMOON" – AMEEN!

---

The Holy Prophet said —

"There are two Codes to remember God, which are very easy to speak, very dear to Allah, and very heavy in the scales on the Day of Judgment. They are as follows.—

(1) God is free from all evils, and I am thankful to Him for His boons.

(2) God is free from all evils, and He is Great. Sublime. Glorified.

– (*Bokhari and Muslim*)

# "இஸ்லாம் கூறும் தனித்துவமும் வரலாற்றுப் பின்னணியும்"

அல்ஹாஜ் எம். எம். அப்துல் காதர்
(உயர் நீதிமன்ற நீதிபதி)

இஸ்லாமிய தனித்துவம் எவ்விதம் உருவாகியது என்பதை முதலில் ஆராய்வோம். பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்களைத் தன் திருத்தூதராகத் தேர்ந்தெடுத்து திருக்குர்ஆன எனும் வேதத்தைக் கொடுத்து அதன் அடிப்படையிலே மக்களுக்கு நல்லவழியான வாழ்க்கை முறையைப் போதித்தும், நடந்தும் காட்டுமாறு அல்லாஹ் அமைத்தான். அவ்விதமே அவர்கள் ஒரு சமுகத்தை இவ்விதமான சிறந்த அடிப்படையில் உருவாக்கினார்கள். இந்த சமுகத்தின் குணாதிசயங்களைப் பற்றிப் பலவிடங்களிலே இறைவன் திருக்குர்ஆனில் விமர்சித்திருக்கின்றான். இவைகளில் ஒன்றை மட்டும் நான் இங்கு தருகின்றேன். முஹம்மதை பின்தொடர்ந்தோர் நம்பிக்கையற்றவர்களுக்கெதிராகவும், அவர்கள் பழக்கவழக்கங்களுக்கெதிராகவும், பலமாகவும், எச்சரிக்கையாகவும் இருப்பார்கள். தமக்குள் ஒருவருக்கொருவர் பரோபகாரமாக இருப்பார்கள். அல்லாஹ்வின் அருளையும் உதவியையும் நாடி அவர்கள் அவனுக்கு அடிபணிவார்கள். அப்படியாக அவர்கள் தலைபணிந்து வணங்கும் அடையாளங்களை அவர்களுடைய முகங்களில் காணலாம். பெருமானார் (ஸல்) அவர்களை முன்மாதிரியான வாழ்க்கைப் புருஷராக எப்பொழுது நாம் ஏற்றுக்கொண்டோமோ அப்பொழுதே அவர்களுடைய வாழ்க்கை முறையை முஸ்லிம்கள் ஆகிய நாம் கடைப்பிடிக்க கடமைப்பட்டோம். எனவே அவர்கள் பின்பற்றிய உணவு, உடை, குடும்ப, சமுக உறவு முறைகள், தொழில், வியாபார, போராட்ட, அரசாங்க முறை யாவும் மதத்தில் ஒரு பங்காகவே ஆகிவிட்டது. எனவே வணக்க முறைகள் மாத்திரமன்றி முழு வாழ்க்கை முறைகளும் இஸ்லாத்தின் அம்சங்களாக அமைந்தன. இதுவே இஸ்லாத்தின் தனித்துவம்.

இப்பொழுது இந்த தனித்துவத்தை ஆராய்ந்து பார்ப்போம். இஸ்லாமிய தனித்துவம் ஊற்றெடுத்தது. அல்லாஹ்வின் வேதத்திலும் இறைவனால் தேர்ந்தெடுத்து வழிகாட்டப்பட்ட ஒரு மனிதப் புனிதரின் சொல்லிலும், செயலிலும் என்று கண்டோம். எனவே இஸ்லாமிய தனித்துவம் இறைவன் தூதிலேயே அமைந்திருக்கின்றது. எனவே அதுவானது தூய்மையானதும், எதுவித குறைவற்றதுமாகும். இந்த அடிப்படையில் இஸ்லாம் வளர்ந்த காரணத்தால் தான், மிகவும் கீழ் நிலையான அநாச்சாரத்தில் இருந்த அரபிகள் 50 வருட கால எல்லைக்குள் உலகை ஆளும் சமுகமாகவும் உலகுக்கே நாகரிகத்தைக் கற்பிக்கும் தீபமாகவும் மாறினார்கள். பெருமானார் மறைந்து 1400 ஆண்டுகள் சென்றும் உலகிற்கு விமோசனம் வேண்டுமானால் பெருமானாரின் வாழ்க்கை முறையை மீண்டும் உலகில் ஸ்தாபித்தால் தான் பெறமுடியுமென்று பல அறிஞர்கள் கூறியிருக்கின்றனர்; கூறிக்கொண்டும் இருக்கின்றார்கள். இதுவே இஸ்லாமிய தனித்துவம்.

வரலாற்றின் பின்னணியில் இந்தத் தனித்துவத்திற்கு ஏது நடந்தது என்று இப்போது கவனிப்போம். முஸ்லிம்கள் ஈரான் என்று கூறப்படும் பேர்ஷியாவை கைப்பற்றினார்கள். அங்கு ஒரு பழைய நாகரிகத்தைக் கண்டார்கள். அந்த நாகரீகத்தின் மோதலினால் இஸ்லாமிய தனித்துவம் தாக்கப்பட்டு இஸ்லாத்துக்குப் புறம்பான பல கருத்துக்கள் உள்ளிட்டன. முக்கியமாக தலைவிதி என்ற ஒரு நவீன கருத்து உள்ளிட்டது. இதன் பின் அப்பாஸியாக்களின் ஆட்சிக்காலத்தில் கிரேக்க, உரோம, ஹிந்து வேதாந்த கிரந்தங்கள் படிப்பிக்கப்பட்டு இவைகளில் நிரம்பியிருந்த இஸ்லாத்திற்கு விரோதமான பல கருத்துக்கள் மோதத் தொடங்கின. இறைவனின் திருப்தியையும், உகப்பையும் பெற்றுக்கொள்ளும் ஒரே நோக்கில் அமைந்த இஸ்லாமிய வாழ்க்கை முறை திசை தவறி உலோகாயுத சுகம், பொருளாதார சேமம், துறவறம்போன்ற பல நவீன அடிப்படைகளில் திருப்பப்பட்டு குர்ஆனையும் ஹதீதையும் அவ்வடிப்படைகளில் ஆராய முஸ்லிம்கள் முன்வந்தார்கள். கிடைத்த பலாபலன் என்னவென்றால் வெளிப்படை

யாக ஒருசில நூற்றாண்டுகளுக்கு கீர்த்தி
யும் புகழும் கிடைத்தாலும், உண்மையில்
உள்ளூராக இஸ்லாமிய தனித்துவம் உளுக்
கத் தொடங்கியது. இறுதியில் ஹுலக்
கான் போன்ற தார்தார் மக்களால் இஸ்
லாமிய சாம்ராஜ்ஜியம் தகர்த்தெறியப்
பட்டது. என்ஹும் சில காலத்துள் அதே
தார்தார்கள் இஸ்லாத்தைத் தழுவி இஸ்
லாத்தின் தனித்துவத்தின் பாதுகாவல
ராக மாறினார்கள்.

இது போன்று இஸ்லாம் பரவிய ஸ்பெ
யின் தேசத்திலும், இந்தியாவிலும் உயர்
வும் தாழ்வும ஏற்பட்டது. இந்தியாவில்
சக்கரவர்த்தி அக்பர் 1000 ஆண்டுகள்
ஆகிவிட்டதால் திருக்குர்ஆனின் வலிமை
நீங்கிவிட்டது என்று தீனே இலாஹி என்ற
புதுதான ஒரு மார்க்கத்தை உருவாக்க
எத்தனித்து படுதோல்வி அடைந்தார்.

சரித்திரத்தில் நெருங்கிய காலத்திற்கு
வந்தால் ஐரோப்பாவின் பொருளாதார
முன்னேற்றத்தைப் பார்த்து அதனால்
உந்தப்பட்ட முஸ்லீம்கள் ஐரோப்பிய மக்
களின் வாழ்க்கை முறைகளைப் பின்பற்றி
னால் அந்த வழியில் வாழ்க்கையில் வெற்றி
பெறலாமென்று கருதி கமால் அத்தாதுர்க்
போன்றோர் இஸ்லாமிய வாழ்க்கை முறை
யை நிராகரித்து ஐரோப்பிய வாழ்க்கை
முறையைமுற்றுமுற்றாக ஏற்றுக்கொண்டார்
கள். எவ்வளவு தூரம் கமால் அத்தாதுர்க்
இஸ்லாமிய வாழ்க்கை முறையை
நிராகரித்தார் என்றால் இஸ்லாத்தின்
தாய்ப்பாஷை ஆகிய அரபியையே நிரா
கரித்ததுமன்றி இஸ்லாமிய கடமைகள்
பலதிற்கும் முற்றுப்புள்ளி வைத்தார். வேறு
பலர், மேல்நாட்டு நாகரிகத்தின் கூற்றுக்க
ளின் அடிப்படையில் இஸ்லாமிய கொள்கை
களுக்கு விளக்கங்கொடுக்கத் துவங்கினார்
கள். எனவே தெய்வதூதில் அமைந்த
ஒரு வாழ்க்கை முறைக்கு மனித புத்திக்கு
ஒத்திருக்க வேண்டுமென்ற நோக்குடன்
புதுப், புதுக் கருத்துக்களையும் சில சந்தர்ப்
பங்களில் இஸ்லாத்திற்கு முரணான கருத்
துக்களையெல்லாம் வெளிப்படுத்தினார்கள்.
இஸ்லாமிய தனித்துவம் இவர்கள் கையில்
சிக்கித்தவிக்குங் காலத்தில் அல்லாமா,
இக்பால் போன்றோர் தோன்றி உரிய வழி
யில் இஸ்லாமிய சிந்தனைகளை வழி நடாத்
தினார்கள்.

வேறு ஒரு துறையில் இருந்தும் இஸ்
லாமிய தனித்துவத்திற்கு ஆபத்து ஏற்
பட்டு இன்னும் தொலைந்தபாடில்லை.
இதுவானது (கப்ர்) புதைகுழி வணக்க
மும் அதைச் சார்ந்த அனுச்சரியங்.
ஆதிகால மக்களிடையே பரவலாக
இருந்து வந்த இந்தப் பழக்கவழக்
கங்கள் இஸ்லாத்தை அவர்கள் ஏற்றுக்
கொண்ட பின்னரும் பார்ஷியா, இந்தியா
போன்ற பிரதேசங்களில் முற்றிலும் கை
விடப்படவில்லை. இஸ்லாமிய தனித்து
வத்திற்கு ஆணிவேராகிய ஷரீஅத்துடைய
வாழ்க்கைக்கு உறுதுணையாக பெரியோர்
களால் அன்புடன் இயற்றப்பெற்ற ரூதிபு,
மௌலிது போன்ற முயற்சிகள் பிரசடங்
குகளால் மூழ்கடிக்கப் பட்டு அல்லாஹ்
வினால் முற்றும் சபிக்கப்பட்ட துறைக
ளிலே சிலர் கையில் இஸ்லாம் போய்க்
கொண்டிருக்கின்றது. ரூதிபும் மௌலி
தும் போதுமானது, பெருமானார் போன்
றுக போற்றி வளர்த்துவிட்டுச் சென்ற
ஷரீஅத்தின் வாழ்க்கை தேவையில்லை
யென்பது ஒரு கோஷ்டி. இவை தேவை
யில்லை என்று சொல்லாவிட்டாலும் ரூதிபு
களையும் மௌலிதையுமே கொண்டாடிக்
கொண்டு ஷரீஅத்தை புறக்கணிப்போர்
ஒரு கோஷ்டி. எந்தப் படைப்பினங்களுக்
கும் நபியும் றசூலும் குத்பும் அவ்லியாவும்
உட்பட, எதுவித சக்தியும் இல்லை. அல்லா
ஹ் நாடினால் அன்றி என்றும், தேவைகள்
யாவற்றையும் என்னிடம் நேரில் கேட்டுப்
பெற்றுக்கொள்ளுங்கள் என்று ஏகபரா
பரனை அல்லாஹ் கட்டளையிட்டுடிருக்கும்
போது அவ்லியாக்களிடம் தேவைகளைக்
கேட்டுக்கொண்டிருப்போர் ஒரு கோஷ்டி.
கப்றிக்களை ஆண்கள் மட்டும் தரிசிக்க
லாம். அங்கு அடங்கியிருப்பவருக்குமாக
வும் நமக்காகவும் அல்லாஹ்விடத்தில்
பிரார்த்திக்குமாறு பெருமானார் சொல்லி
யிருக்கும்போது, அவ்லியாக்களுக்கு இலஞ்
சம் கொடுப்பது போன்று உண்டியலில்
பணத்தைப் போட்டுவிட்டு அவ்லியாக்க
ளிடத்தில் உதவிகோருவோர் ஒரு கூட்
டம்; ஏன் கள்ளக்கடத்தல் போன்ற இஸ்
லாத்திற்கு மாறான செயல்களைச் செய்வோ
ரும் கூட அவ்லியாக்களிடம் உதவி தேடு
கின்றார்கள் கப்றுகளிலே வியாபார
நோக்கோடு பகிரப்படும் சாம்புராணிச் சாம்
பல், சந்தனம், பூ, எண்ணெய் போன்ற
வற்றிற்கு ஏதோ சக்தியிருக்
கிறது என்று நம்பி இவைகளைப்
பணங்கொடுத்து வாங்கி பக்தியுடன் பூசிப்
போர் பலர். கொடியேற்றம், கப்புறுக்கு
சந்தனம் பூசல் என்றெல்லாம் எத்தனையோ
அநாச்சாரங்கள். இவைகளுக்கெல்லாம்
சடங்கும் செலவும் மௌலிதுகளும் ரூதிபு

களும் இன்று சாப்பாட்டுக் கலரிகளாக மாறிவிட்டன. மௌலிதுகளிலுள்ள பக்திப் பரவசமான பாடல்கள் இன்று டப்பா சங்கீதம் பாடுவதற்கு வாகனங்களாக மாறியுள்ளன இப்படி இப்படிப் பல.

ஒரு முஸ்லிமின் நாளாந்த வாழ்க்கை இரம்ப இலேசானதும், சிக்கனமானதும் தான் இஸ்லாமிய முறை. ஆனால் ஒவ்வொன்றுக்கும் ஒரு செலவை ஏற்படுத்தும் சடங்கையேற்படுத்தி, வாழ்க்கையே பிரச்சனையாகிவிட்டது. பிள்ளை பெற்றால் பின்ளைக்கு பாங்கு இகாமத் ஓதி பெயர் விட்டு தலைமுடி களைவது தான் தேவையான செயல்கள். இவைகளுக்கு எதுவித செலவும் ஏற்படத் தேவையில்லை. ஆனால் இவைகளைச் செய்து முடிக்க எத்தனை சாப்பாடுகள். ஆனால் மறுபுறத்தல் வசதியுள்ளோர் செய்யவேண்டிய அகீகா என்னும் நன்கொடை அதிகமாகக் கைவிடப்பட்டுவிட்டது. அதன் பின்னர் கத்னா எனும் விருத்த சேதனம் எடுக்கும்போது நாசிவனுடைய செலவுதான் தேவை. ஆனால் இதற்கும் ஒரு பெரிய சாப்பாடு. பெண்பிள்ளை பராயமடைந்தால் மறைத்து வைக்க வேண்டியதை விளம்பரப்படுத்தி ஓர் பெரும் விழாவும் சாப்பாடும். விவாகம் நடப்பதென்றால் பெண்பார்க்கச் சாப்பாடு, பதிலுக்குப் போனதற்குச் சாப்பாடு, பொன்கொடுக்கச் சாப்பாடு, பெண்ணுருக்கச் சாப்பாடு. கலியாணச் சாப்பாடு. பெண்கூட்டிவரும் சாப்பாடு. மாப்பிள்ளைச் சாப்பாடு அப்பப்பா இப்படி எத்தனை சாப்பாடுகள். அதுவும் எவ்வளவு பணச் செலவில். இவைகளிலெல்லாம் இஸ்லாம் அனுமதிப்பது வலீமா என்ற ஒரேயொரு சாப்பாட்டைத்தான். இது மட்டுமா ஆண், பெண்ணுக்கு தனது தகுதிக்கேற்ப குறைந்த தொகையில் மஹர் எனும் சீதனம் கொடுக்க கட்டளையிட்டிருக்கும் போது, பதிலாக ஆண், பெண்ணிடம் பல ஆயிரக்கணக்காக சீதனம் கேட்டுவாங்கும் கேவலநிலை. கலியாணத்தன்று நடக்கும் ஆடம்பர வீண்செலவுகள், பெண்ணின் பல உறுப்புக்களை வடிவுடன் துலக்கும் உடைகள், அவைகளைப் பிரகாசப்படுத்தி அன்னியர் கண்ணுக்குக் கவர்ச்சி கொடுக்க மின்சார தீபங்கள். அன்னிய ஆடவரை பெண் காணமுடியாது என்றிருந்தும் அவளைச் சோடித்து சிம்மாசனம் ஏற்றி விளம்பரப்படுத்தி அறிமுகப்படுத்தல் பல கோணங்களில் இருந்தும். படமெடுத்தால் ஆணுக்குப் பொன் ஹறாமாக இருந்தும், மாப்பிள்ளை, வீட்டு, வாசலில் வந்தவுடன் பறகத்தாக (அல்லது முசீபத்தாகவா) அவருக்கு அணிவிக்கும் பவுண் மோதிரம் அல்லது சங்கிலி இப்படி அனந்தம். இவைகள் எல்லாம் இஸ்லாமிய தனித்துவத்தை உருக்குலையச் செய்து கொண்டிருக்கின்றன

இக்பால் பாடினார்:

"வலிமை இல்லாக் கைகளுடன்
மதமே இல்லா இருதயமும்
உவகில் உங்கள் வாழ்க்கை தனை
உதவாக் கரையாய் ஆக்கினவே
நலஞ்செய் என்றன் தாருக்கு
நாளும் நும்மில் பல்லோரும்
பலவாறாக அவமதிப்பைப்
பாரில் தேடி கொணர்பவரே"

அந்நிய பழக்கவழக்கங்களினால் மோகங் கொண்டு குட்டிச்சுவராய்ப் போய்க்கொண்டிருக்கும் சமுதாயத்தில் இறைவனருளால் இன்று விழிப்புணர்ச்சியேற்பட்டுக் கொண்டிருக்கின்றது. மூடக்கொள்கைகளினால் மூழ்கிக்கிடக்கும் தம் பெற்றோர்க்கே உற்ற மதிகூற இளைஞர்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றார்கள்.

※ செலவு செய்வதில் சிக்கனமாயிருப்பது சம்பாத்தியத்தில் சரிபாதி மக்களுடன் கூடிப்பழகி அளவளாவி வாழ்வது புத்தியில்பாதி அழகுபட கேள்விகள் கேட்டு மதிவிளக்கம் பெறுதல் அறிவில் நேர்பாதி. (மிஷ்காத்)

*With*

*best*

*Compliments*

Phone :- 29637

*From*

**J. M. M. RAJI**

44, Cameron Place,

COLOMBO-3

*Cable:-* **"IRUMBU"** *Telephone:-* **443 (Ext.)**

# M. M. ABDUL CADER & Bro.

Direct Importers & Dealers
in Hardwares & Brassware Goods.

Wholesale & Retail Merchants.

*Bankers :*

**The Commercial Bank of Ceylon Ltd., Jaffna.**

*Stores :-*

**14, Stanley Road,**
**JAFFNA.**

**No, 97. K. K. S. Road,**
**JAFFNA.**

## பாலைநிலப் பசுந்தரையில் பலஸ்தீனம் மலரட்டும்.....

ஐ. எல். ஏ. ஜப்பார்,
விஞ்ஞான பீடம்,

செந்தமிழிற் கவியொன்று செப்பிடவே விழைந்தேன்
செம்மையுறச் சிலபொழுது சிந்தித்ததாலே
எந்தனுயிர் தோழர்களே! இயக்கத்தின் சிங்கங்களே!!
எம்மினத்தின் துயர்துடைக்க ஏனிந்த தயக்கம்?

ஓரிறைவன், அவன்தூதர் போதித்த தென்ன?
அதனிடையே சாதித்த சாதனைகள் என்ன?
''வியர்வைதான் உலருமுன்னே கொடுத்திடுங்கள் கூலி-
மேலதிகச் சொத்துக்கள் ஹறாம் - புவியில்
அனைவருமே சோதரர்கள் உயர்வு தாழ்வு இல்லை;
அயலான் பசித்திருக்க நீ உண்டால் நஞ்சு
விருந்தென்றால் ஏழைகட்கே அதனை நீ அளிப்பாய்''
என்றெல்லாம் எப்பொழுதோ கூறிய சன்மார்க்கம்-
சோசலிச சமுதாயம் படைத்தளித்த இஸ்லாம்-
சொன்னவற்றை ஏன்மறந்தாய்? சோம்பேறி மனிதா!

எம்மினத்தின் சோதரர்கள் பலஸ்தீன மக்கள்
நாடின்றி நாற்புறமும் அகதிகளாயுள்ளார்-
சாத்வீகம், சமாதானம் பயனில்லை யென்று
பாய்கின்றார் தம்முயிரைத் துச்சமாய் நினைத்து-
ஏ! எம் அராபிய உலகே!
ஏன் பிரிந்துநிற்கின்றாய் வல்லரசின் வலைக்குள்
உன் நாட்டு நிலநெய்யை உறிஞ்சித்-
தன்நாட்டை ஒய்யாரமாக்கிவிட்டு - உன்னாட்டிற்கே
கோடாரிக் காம்பாக மாறிக் கருவறுக்கும்
ஒற்றர்செயல் உனக்கின்னுமேன் புரியவில்லை?

குழந்தைதனை 'ஆராரோ' என்று ஆட்டிவிட்டு
கொடுநகத்தால் அழும்வண்ணம் குத்திவிட்டு - நிற்கும்
வல்லரசுப் பகைவர்களை அடையாளம் கண்டு
ஒன்றுபட்டு நீ நின்றால் தெரியுமோர் முடிவு -
அதுவேதான் உன் இனத்தின் விடிவு-
தயக்கமென்ன தோழா?

(ஹறாம் - விலக்கப்பட்டது)

# Muslim Embassies And Islam

By

A. M. AMEEN – Former D.J. Director – Islamic Secretariat)

All over the world. unlike in the past, thinkers are giving birth to many ideas. The main reason, one presumes, for the output of ideas is the consciousness of the many problems World Societies are facing and the failure hitherto of proper solutions to them. It is also the opinion of many that the degree of exaclation of these problems in the world may ultimately lead to a global catastrophy.

When one discusses the current situations, therefore, he does not do so for the mere fun of discussion or to draw some personal satisfaction thereof, but rather with a grave sense of urgency.

In the context of the foregoing observations the question naturally arises as to what contribution the Islamic World is making for the guidance of World Societies and for the resolution of the current problems. Muslims claim that on account of their being heirs to the Holy Quran, the words of God, they have the necessary guidance for putting things into order. Neither in numbers nor in resources the Muslim World lacks the potentiality to highlight that guidance to the notice of mankind and the establishment of harmony in the World.

Upto World War II almost all the Muslim countries were directly or indirectly under western colonial powers. After World War II even thuogh the Muslim countries regained political independence. they continue to remain subject to western thought as a result of the long and effective process of de–Islamisation that took place in Muslim countries when the entire world was under the hegemony of the West. In the result in every Muslim country whether they were old colonies, mandated territories or even independent countries, despite the recovery of their freedom, power and influence are weilded by men who are acquainted only with western ideas, thoughts, concepts and practices. In addition to this still powerful western media are inflicting their thoughts on these countries promoting the continued loyalty of Muslims to those concepts. The Muslim world, therefore, suffering under these influences and their vision blurred by the system with which they have got acquainted, is unable to find a way of contributing anything original or anything of their own to the thought of the World. This is a serious crisis we are facing. We are in possession of valid ideas for the proper working of human society. We are obliged to project those ideas for the benefit of mankind; but due to the aforesaid historical tragedy we experienced, we have lost touch with those ideas and have become camp followers of propagandists of thoughts and systems which are inimical for the well being of mankind.

Happily, there is, especially among many thinkers in the Muslim World, a growing consciouness that the duty of proclaiming our ideas and the function of illustrating them cannot any longer be delayed. Hence meaningful steps in this connection are taking place in almost all the countries of the Muslim world as well as in countries where Muslims are in a minority and not–withstanding the apathy, indifference and at times hostility of the Muslim ruling classes, to give life to Islamic ideas that are born of the words of God and His Propert (P.B.U.H.) In other words, the seeds of re-

volutionary change in Muslim Societies are being sown to transform them to fulfil the function of guiding the world. In this task many obstacles have to be met with and success depends upon the dedication, moral courage and understanding to promote the movement to save humanity.

When one considers matters in the above context the very useful part Muslim Ambassadors could play in the affairs of the world come to light. On account of the large number of sovereign Muslim countries in the world today one finds that in almost all countries there are large number of Muslim Embassies and Muslim Diplomats. In a small country like Sri Lanka (Ceylon) for example, there are nearly ten Ambassadors of Muslim countries. They have, their own well established Embassies with necessary and responsible staff, A Muslim Diplomat's life, however. has become rather a difficult one. On account of the supremacy the western world enjoyed for so many centuries and which they are still enjoying, all govermental institutions have been fashioned in that western pattern following ideas, customs, methods which they introduced and evolved. All instiutions inclusive of Ambassadorial ones in their Modus Operandi are, therefore, following these patterns. On assuming an Ambassadorial post, a Muslim, sensitive to the principles and veritics of Islam, finds that he is torn between two loyalties. He knows very well that most of the practices he is called upon to observe on account of their long usage, have neither moral, social or ethical basis. He is unable to breakaway from that system and follow his own valid system for fear of being marked as one who is not following the accepted conventions. Similarily affected are the Muslim members of the Embassies of Muslim countries. They are more averse to breaking away from diplomatic conventions and practices which are highly obnoxious to the rules of Islam. It is quite evident that as long as this attitude continues no positive contribution to the well being of the world or opportunities to promote ideas in the correct direction would be available to Muslim Diplomats. On the other hand, if Ambassadorial posts of Muslim countries are filled by men with a sense of Islamic mission they would easily transform their respective Embassies from wescesn institutions to Islamic institutions making positive and valuable contribution to thought, whereever they may be serving. Such a transformation is urgently called for in the context of developments that are taking place. In a country, espceially where Muslims are in a minority they look up to Muslim Ambassadors and Ambassadorial staff for guidance and direction as they are from Muslim countries. When they, however. find that some Muslim Ambassadors and their staff are highly indifferent to Islamic ways of life, not only are they damaging the image of their own countries but also causing grave dissappointment to the Muslims'

If it is felt that one or two Muslim Ambassadors in a country, inspired by and anxious to highlight Islamic values through their Embassies are unable to do so because other representatives of Muslim countries are not falling in line with them, one believes this would be a matter to be taken up at the level of the Islamic Conference or at the level of Islamic Foreign Ministers conference for proper direction to all the Muslim Ambassadors all over the world. One also feels that much depends on the Government of Muslim countries in the matter of selecting suitable representatives who are capable of upholding Islam whereever they go and in every aspect of their diplomatic functions.

The world needs such a courageous change of outlook !

# இஸ்லாமிய அரசியல் கோட்பாடு

ஜனாப் எம். ஏ. எம். சுக்ரி B. A. (Hons.) (Cey) Ph. D. (Edin)
(சிரேஷ்ட விரிவுரையாளர், வித்தியலங்கார வளாகம்)

இஸ்லாம் சில நம்பிக்கைகளையும், வணக்க முறைகளையும் சடங்குகள் சம்பிரதாயங்களையும் உள்ளடக்கிய மதமன்று. அது மனிதனின் தனிப்பட்ட வாழ்வையும் பொது வாழ்வையும், அரசியலையும் பொருளியலையும், கலை இலக்கிய முயற்சிகள் அனைத்தையும் ஒன்றிணைக்கும் ஒரு பரிபூரண வாழ்க்கைத் திட்டமாகும். எனவே இஸ்லாமிய அரசியல் சிந்தனையும் ஆட்சி முறையும், அரசியல் சித்தாந்தமும் இஸ்லாமிய இலட்சிய வாதத்தின் அடிப்படையிலே எழுதப்பட்டுள்ளன. சுருங்கக் கூறின் இஸ்லாமிய அரசியல் சிந்தனையும் ஆட்சிமுறையும், மனிதனின் சிந்தனையினதும் ஆராய்ச்சி முயற்சிகளினதும் முடிவன்று. அது மனிதனுக்கு அவனின் இயற்கைத் தன்மைகளையும் பண்புகளையும் குறை நிறைகளையும் நன்கு உணர்த்தவல்ல அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட ஒரு திட்டமாகும். எனவே, வல்ல அல்லாஹ்வின் வழிகாட்டுதலின் அடிப்படையில் எழுதப்பட்ட சரீஅத்தின் அடித்தளத்திலேயே இஸ்லாமிய அரசியல் கோட்பாடும் எழுதப்பட்டுள்ளது. சரீஅத் சமுதாய நன்மையையும் முன்னேற்றத்தையும் அடிப்படையாகக் கொண்டே செயலாற்றுகின்றது. எனவே இஸ்லாமிய அரசியல் தத்துவமும் ஆட்சி முறையும் சமுதாய நலனை மையமாகக் கொண்டே எழுதப்பட்டுள்ளது சமுதாயத்தின் ஒழுங்கு பாதுகாப்பு முன்னேற்றம் ஆகியவற்றை நோக்கமாகக்கொண்டே உண்மையான இஸ்லாமிய ஆட்சி செயலாற்றும். எனவே தனிமனிதனின் உரிமைகள். கடமைகளைப் பேணிப் பாதுகாக்கும் முயற்சியில் இஸ்லாமிய ஆட்சி முக்கிய கவனம் செலுத்தினும் சமுதாயத்தின் பொது நன்மைகளைப் பாதிக்கும் வகையில் அவன் தொழிற்பட அது அனுமதிப்பதில்லை. இஸ்லாமிய ஆட்சி முறையினதும் அரசியல் சித்தாந்தத்தினதும் இன்னொரு பண்பு அது கால வளர்ச்சிக்கேற்ப நிகழும் கருத்து வளர்ச்சியையும் சமுதாய மாற்றங்களையும் கருத்தில் கொண்டு செயல்படும் தன்மையாகும். இஸ்லாமிய சரீஅத், இஸ்லாமிய ஆட்சி முறையின் அடிப்படைப் பண்புகள் தன்மைகள் செயற்பாடு பற்றிய அடிப்படை விதி முறைகளை மட்டுமே ஏற்படுத்தியுள்ளது. எனவே கால வளர்ச்சிக்கேற்ப சமுதாய, பொருளியல் சூழ்நிலைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப அவ்வக்காலத்தில் திருக்குர்ஆனையும், ஹதீஸையும் 'உஸூல்' என்னும் சன்மார்க்கச் சட்டக் கலையின் மூலாதார அடிப்படைகளையும் ஆழ்ந்து கற்ற அறிஞர்கள் சரீஅத்தின் கட்டுக்கோப்புக்கமைய சட்டங்களை உருவாக்கும் உரிமையை இஸ்லாம் வழங்கியுள்ளது. இதுவே இஸ்லாமிய சட்ட அறிஞர்களின் பரிபாஷையில் 'இஜ்திஹாத்' என அழைக்கப்படுகின்றது. இந்த இஜ்திஹாத் பற்றிய கோட்பாடே இஸ்லாமிய அரசியல் சிந்தனையாளர்களுக்கு அவர்களது கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் கால வளர்ச்சிக்கேற்ப வளர்த்துச் செல்லத் துணைபுரிந்தது. எனவே இதன் காரணமாக இஸ்லாமிய வரலாற்றில் பல்வேறு கால கட்டங்களிலும் கால மாற்றங்களையும், சமுதாய வளர்ச்சியையும் மையமாகக்கொண்டு பல்வேறு அரசியல் தத்துவங்களும் சித்தாந்தங்களும் தோன்றி வளர்ந்திருப்பதைக் காண முடிகின்றது. சித்தாந்தங்க்ள் அவற்றின் விரிவான விளக்கங்களைப் பொறுத்தளவில் பரஸ்பரம் வித்தியாசப்பட்டாலும் அச்சித்தாந்தங்கள் அனைத்துக்கும் சரீஅத்தே அடிப்படையாக விளங்குகின்றது உதாரணமாக இஸ்லாமிய கிலாபத் பல்வேறு அரசியல் சித்தாந்தவாதிகளால் பல்வேறு கண்ணோட்டங்களில் அணுகி நோக்கப்பட்டு விளக்கப்பட்டுள்ளதை இங்கு நாம் குறிப்பிடலாம். இஸ்லாமிய அரசியல் சித்தாந்தத்தினதும் ஆட்சி முறையினதும் இன்னொரு முக்கிய பண்பு அரசியல் தத்துவத்தை இஸ்லாமிய இலட்சியவாதத்திலிருந்தும் ஏனைய இஸ்லாமிய கலைகளிலிருந்தும் பிரிந்து நோக்காமல் அவற்றோடு இணைந்து நோக்குவதாகும். இஸ்லாமிய கலைகளிலிருந்து மட்டுமல்லாமல் மனித சமுதாயத்துக்கே பொதுவான கலைகளான வரலாறு. சமூகவியல் சட்டம் தத்துவம் ஆகியவற்றிலிருந்தும் அதனைப் பிரித்து இஸ்லாம் நோக்கவில்லை. இஸ்லாம் வாழ்வை அரசியல் வேறு ஆன்மீகம் வேறு என்று கூறுபோடாமல் வாழ்க்கையை முழுமையாக நோக்குவது இதற்குக் காரணமாகும். எனவே இஸ்லாமிய அரசியல் கோட்பாடும் ஆட்சி முறையும் இஸ்லாம் போதிக்கும் அறக்கோட்பாடுகளின் அடிப்படையிலேயே எழுப்பப்பட்டுள்ளன. இந்த

அறக் கோட்பாடுகள்தான் நன்மையைத் தீமையிலிருந்தும் சரியானதைப் பிழையானதிலிருந்தும், நீதியை அநீதியிலிருந்தும் பிரித்தறியும் வாய்ப்பினை மனிதனுக்களிக்கின்றன. எனவே அரசியலை Ethics' என்னும் அறக்கோட்பாட்டிலிருந்து அரசியலை அறிவோடும் ஆன்மீகத்தோடும் இணைந்து நோக்கும் பண்பு இஸ்லாமிய அரசியல் சித்தாந்தத்தின் சிறப்பியல்களுள் ஒன்றென E. Rosentha Poltical Thought in Medical Islam (P. 88) என்னும் நூலில் குறிப்பிடுகின்றான். இஸ்லாம் அதன் அறப்போதனைகள் மூலமாக வழங்கியுள்ள நன்மை தீமையிலிருந்தும் நீதி அநீதியிலிருந்தும் பிரித்தறியத் துணைபுரியும். இந்த அறிவின் மூலமாகவே ஒரு ஆட்சியின் மிகுந்த இலட்சியமான சமுதாயத்தின் முன்னேற்றமும் மகிழ்ச்சியும் சாத்தியமாகும். இத்தகைய அறப்போதனைகளின் அறிவின் அடிப்படையில் எழுப்பப்படாத அரசியல் மனித நாகரீகத்தின் அழிவையே தோற்றுவிக்கும். ஏனெனில் ஒரு உன்னதமான இலட்சியத்தை அடைய உன்னதமான வழிமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும் என்பதே இஸ்லாமிய ஆட்சி முறையின் அடிப்படையாகும் ஒரு உன்னதமான இலட்சியத்தை அடைய எத்தகைய இழிவான வழிமுறைகளையும் பின்பற்றலாம் என்ற அரசியற் தத்துவத்தை இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை.

இஸ்லாம் என்பது நாம் ஏற்கெனவே நோக்கியவாறு சில வணக்கங்களையும் சடங்குகளையும் கொண்ட மதமன்று மனிதனின் வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் வழிகாட்ட வந்த பரிபூரண வாழ்க்கைத் திட்டமாகும். எனவே இஸ்லாமிய இலட்சியமும் வாழ்க்கை முறையும் செயல்படுவதற்கு ஒரு இஸ்லாமிய சமுதாய அமைப்பும் ஆட்சி முறையும் அவசியமாகும். எனவேதான் பெருமானார் (ஸல்) இஸ்லாமிய இலட்சிய வாதத்தினதும் வாழ்க்கை முறையினதும் அடிப்படையிலேயே ஒரு சமுதாயத்தையும் ஆட்சியையும் கட்டி எழுப்புவதை இறுதி இலட்சியமாகக் கொண்டு தொழிற்பட்டார்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்தின் பின்னர் இஸ்லாமிய இலட்சிய வாதத்தின் அடிப்படையில் பெருமானார் (ஸல்) மதீனாவில் ஒரு இஸ்லாமிய சமுதாய அமைப்பையும் ஆட்சி முறையையும் கட்டி எழுப்பினார்கள். இந்தச் சமுதாய அரசியல் அமைப்பு அல்குர் ஆனையும் ஹதீஸையும் அடிப்படையாகக்கொண்டு தோற்றுவிக்கப்பட்டது. இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பையும் ஆட்சித் தலைவருக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பையும் ஆட்சியாளருக்கும் பிரஜைக்கும் உள்ள தொடர்பையும் ஆட்சியின் கீழ் உள்ள பல்வேறு பிரஜைகளினதும் இனத்தினரதும் பரஸ்பரத் தொடர்பினையும் வரையறுத்துக் கூறும் இஸ்லாமிய அரசியல் அமைப்பின் அடிப்படையை விளக்கும் ஒரு அற்புதமான அரசியல் சாசனத்தை பெருமானார் (ஸல்) மதீனாவில் தீட்டினார்கள். மதீனாவின் இஸ்லாமிய ஆட்சியின் தன்மைகளை விளக்கும் இந்த சாசனமே இஸ்லாமிய அரசியல் வரலாற்றின் முதலில் தோன்றிய அரசியல் பிரகடனமாகும். இஸ்லாமிய ஆட்சி முறையில் சட்டமியற்றும் உரிமை பற்றிய கோட்பாட்டை நாம் இந்த மதீனா சாசனத்தின் பண்புகளிலிருந்து புரிந்து கொள்ள முடிகின்றது. இஸ்லாமிய ஆட்சியில் சட்டமாக்கும் உரிமை இறைவனுக்கே உரியது இதன் கருத்து இஸ்லாமிய ஆட்சி முறையில் அனைத்துச் சட்டங்களும் இறைவனாலே ஆக்கப்படும் இத்துறையில் மனிதனுக்கு எத்தகைய பங்கும் இல்லை என்பதன்று ஆனால் இஸ்லாமிய ஆட்சி அமைப்பில் ஆக்கப்படும் அனைத்துச் சட்டங்களும் திருக்குர் ஆனினதும் புனித ஹதீஸினதும் அடிப்படையில் அவற்றிற்கு முரணில்லாத வகையில் ஆக்கப்படல் வேண்டும் என்பதே இதன் பொருளாகும், இஸ்லாமிய ஆட்சியில் சட்டமாக்கும் துறையில் ஒரு குறிப்பிட்ட கட்டுப்பாட்டுக்குட்பட்ட உரிமையையே மக்கள் அனுபவிக்கின்றனர், அனைத்துலகுக்கும் பொதுவான விதிமுறைகளை உள்ளடக்கிய தெய்வீக நூலான திருக்குர் ஆனுக்கு முரணான வகையில் எத்தகைய சட்டத்தையும் ஆக்கும் உரிமை அவர்கட்கில்லை, இவ்வகையில பார்க்குமிடத்து சட்டத்தை ஆக்கும் மச்கள் யதார்த்தத்தில் சட்டத்தை உருவாக்கவில்லை. என்பதையும் அவர்களில் எவரும் சட்டத்தின் கட்டுப்பாடுகளுக்கு அப்பால் செயலாற்றும் உரிமை பெற்றிருக்கவில்லை என்பதனையும் நாம் அறிந்து கொள்கின்றோம், சட்டத்தை ஆக்கும் மக்கள் உண்மையில் பார்க்குமிடத்து சட்டத்தைச் செயல்படுத்தும் உரிமையினையே இஸ்லாமிய ஆட்சியில் பெறுகின்றனர். எனவே இஸ்லாமிய ஆட்சி முறையில் இறைவனின் பூரண அதிகாரத்தின்கீழ் கட்டுப்படுத்தப்பட்ட ஆட்சி உரிமையே விசுவாசிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய ஆட்சி அமைப்பு எல்லோருக்கும் பொதுவாகவும் சமமாகவும் அமைந்த சரீஅத்தின் அடிப்படையில் எழுப்பப்பட்டுள்ளதால் இத்தகைய

ஆட்சியின் உடனடியான விளைவாகத் தோன்றும் பண்பு சமத்துவமாகும். இந்த சமத்துவப் பண்புக்குச் சான்றான எண்ணற்ற சரித்திரச் சம்பவங்கள் இஸ்லாமிய வரலாற்றில் பரந்து காணப்படுகின்றன சிந்தனைச் சுதந்திரமும் கருத்துச் சுதந்திரமும் இஸ்லாமிய ஆட்சிமுறையின் இரு முக்கிய அடித்தளங்களாகும். ஒரு சாதாரண பிரஜை ஆட்சியாளனின் தவறுகளுக்கெதிராகக் குரலெழுப்பும் சுதந்திரத்தை இஸ்லாம் வழங்கியுள்ளது. அனைவருக்கும் சமமான பாரபட்சமற்ற நீதி வழங்கும் பண்பு இவ்வாட்சிமுறையில் சிறப்பிடம் பெறுகின்றது. 'The King Can do no Wrong' அரசன் தவறு செய்யும் இயல்பற்றவன் என்ற கோட்பாட்டுக்கு இஸ்லாமிய ஆட்சிமுறை இடமளிக்கவில்லை. நாட்டில் அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதும் அநீதிக்கும கொடுமைகளுக்கும் எதிராக பலவீனர்களைப் பாதுகாப்பதும் பல்வேறு மக்களிடையே நல்லுறவை நிலைக்கச் செய்வதும் இஸ்லாமிய ஆட்சித் தலைவனின் அடிப்படைக் கடமைகளாகும், இஸ்லாமிய ஆட்சிமுறை சகிப்புத்தன்மையை அடிப்படையாகக் கொண்டது. இஸ்லாமிய ஆட்சியின்கீழ் வாழும் முஸ்லிம் அல்லாத பிரஜைகளை தம் மக்களாக ஆட்சியின் பாதுகாவலர்களாக இஸ்லாம் மதிக்கின்றது. அவர்களுக்குச் சிந்தனை சுதந்திரத்தை வழங்குவதோடு அவர்களது உயிர் உடைமைகள் மத சுதந்திரம் ஆகியவற்றை வழங்குவதோடு அவர்களது விவகாரங்களை அவர்களது சட்டங்கள் சம்பிரதாயங்களுக்கு ஏற்ப நடத்திச் செல்லும் உரிமையையும் அது வழங்குகின்றது. இஸ்லாமிய ஆட்சிமுறையின் சிறப்பியல்புகளில் ஒன்று நாட்டின் பரிபாலனம் பரஸ்பர கலந்தாலோசனையின் அடிப்படையில் அமைவதாகும். எனவே இஸ்லாமிய ஆட்சியில் கலீபாவுக்கு ஆலோசனை வழங்குவதற்கு ஒரு ஆலோசனை மன்றம் எப்போதும் இயங்குதல் வேண்டும் என்ற விதியை இஸ்லாமிய அரசியல் சிந்தனையாளர் விதித்துள்ளனர். இந்த ஆலோசனை சபையின் ஆலோசனைக்கேற்ப திருமறையினதும் பெருமானாரினதும் போதனைகளின் அடியொற்றி ஆட்சிபுரியும் ஆட்சித் தலைவருக்குப் பதவியிலிருக்கும் உரிமை உண்டு. ஆனால் எக்கணம் ஆட்சித் தலைவர் இறைவனின் சட்டங்களை புறக்கணித்து ஆட்சிபுரியத் தலைப்படுகின்றாரோ அக்கணம முதல் அந்த உரிமையை இழந்துவிடுகிறார். எனவே இஸ்லாமிய ஆட்சி என்பது மத்தியகாலப் பிரிவில் ஐரோப்பாவில் நிலவிய என அழைக்கப்படும் மத குருமார்களின் ஆட்சியன்று அது மதக்கோட்பாடுகளின் அடிப்படையில் இறைவனின் சட்டத்தை உலகில் நிலைக்கச் செய்யும் மக்களாட்சியாகும்.

இஸ்லாமிய அரசியல் சிந்தனையின் வளர்ச்சிக்குப் பணிபுரிந்தவர்களுள் அல் பராபி இமாம் அல் கஸ்ஸாலி, இப்னு ஜமாஅ, இப்னு கல்தூன். அல்மவர்தி, இப்னு தைமியா, சாஹ்வலியுள்ளார் ஆகியோர் சிறப்பிடம் பெறுகின்றார்கள். ஆட்சியின் தோற்றம் பற்றிய பல நவீன சிந்தனையாளர்களின் கோட்பாடுகளில் இஸ்லாமிய அரசியல் சிந்தனையின் தாக்கத்தை நாம் அவதானிக்க முடிகின்றது ஆட்சி எவ்வாறு தோன்றியது என்பது பற்றிய கோட்பாட்டினை பல முஸ்லிம் சிந்தனையாளர்கள் ஆராய்ந்துள்ளார்கள். இத்துறையில் அல் பராபி தனது 'அல் மதீனதுல் பாஸிலா' என்னும் நூலில் குறிப்பிடும் கருத்துக்கள் ஈண்டு கவனிக்கத்தக்கதாகும். ஆரம்பகாலப் பிரிவில் பரஸ்பரம் பயத்திலும் அச்சத்திலும் வாழ்ந்த மனித இனம் தனது பாதுகாவலையும் நல்வாழ்வையும் கருதி தனது சில உரிமைகளையும் அதிகாரங்களையும் ஒரு தலைவனுக்கு விட்டுக்கொடுத்து அவனைத் தலைவனாக ஏற்று நடக்கச் சித்தமாகிய சூழ்நிலையே ஆட்சி தோன்றியது என அல் பராபி குறிப்பிடுகின்றார் எனவே ஆட்சி என்பது மக்களுக்கும் ஆட்சித் தலைவனுக்குமிடையில் ஏற்பட்ட பரஸ்பர ஒப்பந்தத்தின் பேரிலேயே தோன்றியது என்பது அல் பராபியின் கருத்தாகும், இஸ்லாமிய கிலாபத்தின் தோற்றத்தின் செல்வாக்கினை அல் பராபியின் இக்கருத்துக்களில் காண முடிகின்றது. அல் பராபியின் மறைவின் ஏழு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் தோன்றிய ஆங்கிலேய சிந்தனையாளரான Hobbes இன் ஆட்சியின் தோற்றம் பற்றிய கோட்பாடும் அல் பராபியின் கருத்துக்களின் அடிப்படையிலே எழுப்பப்பட்டுள்ளது. இமாம் கஸ்ஸாலியின் அரசியல் சிந்தனைகள் அவர்களது இஹ்யா உலூமுத்தீன் என்னும் பெருநூலில் பரவலாகக் காணப்படுகின்றன மனிதன் இயற்கையாகவே தனது தேவைகளுக்குப் பிறரில் தங்கியிருக்கும் வகையில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளான். உலகின் இயக்கமும் தொழிற்பாடும்கூட மக்களின் பரஸ்பரக் கூட்டு முயற்சிகளில் தான் தங்கியுள்ளது ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு தொழிலையும் உற்பத்தி முயற்சிகளையும் மேற்கொள்ளும்பொழுது சமுதாயத்தின் பொதுவான மொத்தத் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படுகின்றன சமுதாயத்தின் இயக்கமும் பாதுகாவலும் புதுத் தொழிலையும் உற்பத்தி முயற்சி

களையும் வேண்டி நிற்பதுபோல சமுதாயத்தின் ஒவ்வொரு தனிமனிதனையும் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருவதற்கு சட்டத்தையும் ஆட்சியையும் வேண்டி நிற்கின்றது. இங்குதான் ஆட்சியின் தோற்றம் நிகழ்கின்றது. ஐரோப்பாவில் Spencer, Huxley ஆகியோர் இந்தச் சித்தாந்தத்தை நிறுவ ஏறக்குறைய 8 நூற்றாண்டுகளுக்கு முன்னர் இமாம் கஸ்ஸாலி அவர்கள் இந்தக் கோட்பாட்டினை அரசியல் சிந்தனைக்கு அறிமுகப்படுத்தினார்கள். இதனை Hsherwari என்னும் அறிஞர் தனது Studies in Muslim Political Thought என்னும் நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். Ghazali was perhaps the First Political Theorist who applied these theory Politics Eight Centuries Before it was in Europe by Spencer and Huxley. இஸ்லாமிய அரசியல் சிந்தனையின் வளர்ச்சிக்கு இப்னு ஜமாஅவும் ஒருவராவர் "தஹ்ரீருல் அஹ்காம்" இவரது நூலில் இஸ்லாமிய அரசியல் தத்துவம் பற்றிய இவரது கோட்பாடுகள் விளக்கப்படுகின்றன. ஆட்சியின் தோற்றம்பற்றிய கோட்பாட்டினை மிக ஆழ்ந்த ரீதியில் சமூகவியல் அரசியல் கண்ணோட்டத்தில் விளக்கிய பெருமை இப்னு கல்தூனைச் சாருகின்றது. இப்னு கல்தூன் ஆட்சியின் தோற்றத்தினை சமுதாயத்தோடு தொடர்புபடுத்தி ஆராய்கின்றார். மனிதன் ஏனையோரோடு இணைந்து ஒரு குழுவின் அங்கமாகவே வாழ முடியுமன்றி அவன் தனித்து சூனியமாக வாழ முடியாது எனவே மனித வாழ்வு இயற்கையாகவே ஒரு சமூக அமைப்பை வேண்டி நிற்கின்றது. ஒரு சமூக அமைப்பு தோன்றியதும் அங்கு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவும் வாழ்க்கையை ஒழுங்குபடுத்தவும் தேவை ஏற்படுகின்றது இத்தகைய சூழ்நிலையே தான் ஆட்சிமுறையின் தோற்றமும் ஆட்சித்தலைவனின் தோற்றமும் நிகழ்கின்றதென இப்னு கல்தூன் தனது "முகத்திமா" என்னும் பெருநூலில் குறிப்பிடுகின்றார் ஒரு சடப்பொருளுக்கு அமைப்பும் தோற்றமும் இருப்பதுபோல சமூகத்தின் தோற்றமாகவும் அமைப்பாகவும் ஆட்சி விளங்குகின்றதென்பது இப்னு கல தூனின் கருத்தாகும் முஸ்லிம் அரசியல் சிந்தனையாளர்களுள் அல்மவர்தி தனது அல் அஹ்காமுஸ்ஸுல்தானியா என்னும் நூலில் ஆட்சியாளருக்கும் பிரசைகளுக்கும் இடையே உள்ள தொடர்பைச் சிறப்பாக ஆராய்கின்றார் ஆட்சியாளனின் பொறுப்புக்கள் பற்றி மிகச் சிறந்த நீண்ட விளக்கத்தை அல் மவர்தி இந்நூலில் அளிக்கின்றார்.

இஸ்லாமிய அரசியல் கோட்பாட்டின் முக்கிய அடிப்படை அம்சமான 'சூரா' பற்றிய கோட்பாட்டை இப்னு தைமியா தனது அஸ்ஸியாஸஷரஷரீஆ என்னும் நூலில் விரிவாக ஆராய்ந்துள்ளார். முஸ்லிம சிந்தனையாளர்கள் ஆட்சியின் தோற்றம வளர்ச்சி பற்றிய கோட்பாடுகளில் மட்டுமன்றி ஆட்சியின் செயல்பாட்டு முறைகள் பற்றியும் விரிவாக ஆராய்ந்துள்ளார்கள். இத்துறையில் நிஸாமுல் முலக்தூஸி சிறப்பிடம் பெறுகின்றார்கள். இவர் தனது ஸியாஸத்நாமா என்னும் பாரசிக நூலை ஸெல்ஜூக் கலீபா மலிக்காஹ்வின் கட்டளையின் பேரில் எழுதினார் இந்நூலினால் பெரிதும் கவரப்பட்ட மலிக்காஹ் அதனைத் தனது ஆட்சியின் அரசியல் சட்டமாகப் பிரகடனப்படுத்தும்படி பணித்தார். ஸியாஸத் நாமா எனில் ஆட்சிபற்றி நூல் எனப் பாரசீக மொழியில் பொருள்படும்.

இந்நூலில் மக்களின் நல்வாழ்வு கருதி ஆட்சியைப் பரிபாலனம் செய்யும் முறைகள்பற்றி மிக விரிவாக அவர் விளக்கியுள்ளார். நிஸாமுல்முலக் ஒரு வெறும் சித்தாந்த வாதியாகவும் சிந்தனையாளராகவும் மட்டும் விளங்கவில்லை. ஆட்சி நிறுவாகத்தில் அனுபவம்பெற்ற சிறந்த பரிபாலராகவும் விளங்கினார். எனவே அரசியல் தத்துவம் சித்தாந்தம் ஆகியவற்றைவிட நடைமுறை அரசியலிலே கூடிய ஆர்வம் செலுத்தினார். உலகின் உண்மையான யதார்த்தமான பரிபாலகன் இறைவனே. உலகில் ஆட்சியாளர்களை அவன்தான் நியமிக்கின்றான். எனவே திருக்குர்ஆனின் அடிப்படையில் நெறி பிறழா ஆட்சி நடத்தல் ஆட்சியாளரின் அடிப்படைக் கடமை என்பதை நிஸாமுல் முலக் குறிப்பிடுகின்றார் நிஸாமுல் முல்கின் ஆட்சிப்பரிபாலனம் பற்றிய சில கருத்துக்கள் அவரது ஆழ்ந்த அரசியல் ஞானத்தையும் அனுபவத்தையும் பிரதிபலிக்கின்றன நாட்டின் அரசியலின் பாதுகாவலுக்கும் இஸ்திரத்துக்கும் நிலையான நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட உளவறியும்முறை அவசியம் என்பதை வலியுறுத்தும் அவர் ஒரு நாட்டின் தூதுவராக பிற நாட்டுக்கு அனுப்பப்படும் தூதுவருக்கு அமைய வேண்டிய தகுதிகள் பற்றி ஏறக்குறைய ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முன்னர் விளக்கியுள்ள கருத்துக்கள் இன்றும் மிகப் பொருத்தமாக உள்ளன. ஒரு நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்த பிற நாட்டுக்கு அனுப்பப்படும் தூதுவருக்கு இருக்க வேண்டிய தகுதிகளாக பரந்த அறிவு பிரயாண அனுபவப்

துணிவோடும் மிதமாகவும் பேசுந்தன்மை தூரதிருஷ்ட நினைவாற்றல் கவர்ச்சிமிக்க தோற்றம் முதிர்ச்சி ஆழ்ந்த ஞானம் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றனர். இஸ்லாமிய அரசியல் சிந்தனையின் பண்புகளையும் சிறப்பியல்புகளையும் விளக்கி அச்சிந்தனை வளர்ச்சிக்கு பல்வேறு இஸ்லாமிய அரசியல் சிந்தனையாளர்கள் ஆற்றிய பணிகள்பற்றியும் ஆராய்ந்தோம். இறுதியாக இஸ்லாமிய அரசியல் சிந்தனைபற்றிய ஒரு முக்கிய குறிப்பை ஈண்டு குறிப்பிடல் அவசியமாகும். இஸ்லாமிய சிந்தனையை பல நவீனத்துவங்களோடு இணைத்தும் ஒப்பிட்டும் நோக்குவது தவறாகும். அது மேற்கத்திய ஜனநாயகத்தின் சில பண்புகளையும் சமதர்மக் கோட்பாட்டின் சில தன்மைகளையும் பெற்றிருப்பதனால் இஸ்லாமிய அரசியல் சிந்தனையை இக்கோட்பாடுகளோடு இணைத்து நோக்கல் பொருத்தமற்றதாகும். இஸ்லாமிய அரசியல் சிந்தனையும் கோட்பாடும் செயல்பாடும் முற்றிலும் இஸ்லாமிய இலட்சிய வாதத்தை அடிப்படையாக வைத்தே எழுப்பப்பட்டது. அது கிழக்கையோ மேற்கையோ சேர்ந்ததன்று. ஆன்மீகம் லோகாயம் என்றும் அரசியல் பொருளியல் என்றும் வாழ்வைக் கூறுபோடாமல் வாழ்வு முழுவதையும் ஆன்மீகத் தார்மீகக் கண்ணோட்டத்தில் அது நோக்குகின்றது. ஆட்சியாளனுக்கு இருக்கவேண்டிய அடிப்படைத் தகுதியாக இறையச்சத்தையும் உயர் பண்புகளையும் அது வேண்டி நிற்கின்றது, மனித வாழ்வின் நிர்வாகத்திற்கான சட்டங்களை ஆக்கும் உரிமை இறைவனுக்கே உரியது என அது வலியுறுத்துகின்றது. மக்களுக்கு சுதந்திரத்தை வழங்கும் அதே நேரத்தில் அவர்கள் சரீஅத்தின் கட்டுக்கோப்புக்கு இணைய இயங்கவேண்டும் என விதித்து அவர்களது சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகின்றது. சுருங்கக்கூறின் இஸ்லாமிய அரசியல் சிந்தனை என்பது இஸ்லாமிய இலட்சியங்களினதும் பாரம்பரியங்களினதும் அடிப்படையில் எழுப்பப்பட்ட தத்துவமாகும். இறைவனின் சட்டத்தின் அடிப்படையில் மனித வாழ்வுக்கு சுதந்திரம் சமூகநீதி ஆகியவற்றை வழங்குவதோடு மனிதனை மறுமை வாழ்வுக்கு ஆயத்தப்படுத்தும் மகத்தான பணியையும் அது சாதிக்கின்றது. இம்மையும் மறுமையும் இணைந்து செயல்புரியும் இறைவன் வழங்கிய அற்புதத்திட்டமே இஸ்லாமிய அரசியல் கோட்பாடாகும்.

---

卐 உடலுக்கு உறுதி தருவது உணவு. உள்ளத்துக்கு உறுதி தருவது இறை வணக்கம். உடலுக்கு உறுதி தருவது சுதந்திரம். உய்வுக்கு உறுதி தருவது கல்வி.

(வில்லியம் ஜேம்ஸ்)

卐 ஆடாய் நூறாண்டு வாழ்வதைவிட அறியாய் ஒரு கணம் வாழ்வது மேல்.

(அறிஞர் இக்பால்)

卐 பெருமையை பணிவினால் அழகுபடுத்து. பேராசையைப் போதுமென்ற மனத்தால் அழகுபடுத்து. பொறுமையை நல்லெண்ணத்தினால் அழகுறச் செய்.

(மாலிக் இப்னுதீனார்—ரஹ்)

*With best*
*Compliments*
*from :*

Phone: 354

## Colombo Drapery Stores

24, Main Street,
**KALMUNAI**

*Visit :*

உங்களுக்குத் தேவையான
உத்தரவாதமுள்ள தங்க
நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்

Phone: 310

**கமால் தங்க நகை மாளிகை**
*58, பிரதான வீதி,*
கல்முனை.

## Kamal Jewellery House,

58, Main Street,
**KALMUNAI.**

*Grams:* 'ENEMES' *Phone:* 531

# N. M. Sultan Mohideen Hadjiar & Bro.,

*Dealers in :*

- SUNDRIES
- FANCY GOODS
- PRESENTATION ARTICLES
- STAINLESS STEEL WARES
- GLASS
- ENAMEL & ALUMINIUM WARES
- STATIONERY, GROCERIES
- OILMANS Etc... Etc...

**No. 2, NEW MARKET,**
**HOSPITAL ROAD,**
**JAFFNA.**

**123, 125, 143, K. K. S. Road,**
**JAFFNA.**

# NEW PILAUS

5, 6, MODERN MARKET, JAFFNA.

சுவையான சிற்றுண்டி வகைகள்

- மட்டன் ரோல்
- பற்றீஸ்
- சுவைமிகுந்த ரீ
- கட்லட்
- சுவீற்ஸ்
- கோப்பி

## குளிர்பான வகைகளுக்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்

# நியூ பிளவ்ஸ்

56, மக்கள் நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

# கண் துயிலும் என் செல்வா......!

செல்வி. சித்தி பாக்கியா காலிதீன்
மனிதப் பண்பியல் பீடம் — 2ம் வருடம்

வெண் பஞ்சுப் பொதியாய் — நீ
என் நெஞ்சில் தலைசாய்த்து
கண் துயிலும் என் செல்வா !
உனை மறந்து துயில்கின்றாய் — இந்த
உலகை மறந்து துயில்கின்றாய்.

காந்தள் மென்மலராய் - நீயென்
கூந்தல்தனைப் பற்றி - குவளை விழிமூடி
கண்துயிலும் காட்சியிலே எனை மறந்தேன்
கவின் முகத்தில் ஆயிரம் கதைபடித்தேன் - கண்ணேயுன்
கனிப்பினிலே எனையிழந்தேன்.

இளம் பிறையாய் இமைதளிரும் இளமகனே !
வளர் பிறையாய் எழில் நிலவாய் மிளிர்ந்தாலும்
தலை நிமிர்ந்து காலூன்றி நின்றாலும்
பரம்பொருளை பாடித்துதித்திட மறவாதே
தனி நிற்கும் மறையோனை வணங்கிட மறவாதே

கண்மூடிக் களைப்பாறும் என்மைந்தா ! நீவளர்ந்து ஐங்
கலிமாத் தொழுகையுடன் நோன்பை நோற்று
ஹஜ்ஜை நீ செய்வதுடன் ஈகையால் ஏழைகளுக்கிரங்கி
இறை சொல்லும் போதனைகள் ஆறினையும் உறுதி செய்து
மறைகாட்டும் வாழ்விற்கோர் இலக்கணமாய் அமைந்திடுவாய்.

கவினுருவாய் கண்ணுறங்கும் கண்மணியே - நீ
கரைகாணா அறிவுலகில் நுழைந்துவிடு
திரைகடலாய்ப் பெருங்கல்வி பெற்றுவிடு
கறைபடிந்த இவ்வுலகை மாற்றிவிடு
மறைகாட்டும் மாண்பை நீ வளர்த்துவிடு.

துயர்தெரியா துயில்கொள்ளும் என் மைந்தா !
துயிலின்றி துணைநின்று உனை வளர்ப்பேன்
துயர் கண்டு துவளாமல் உனை அமைப்பேன்
துயர்துடைக்கும் அருமருந்தாய் நீ வளர்வாய்
துணைநின்ற களிப்புடனே நான் கண்ணயர்வேன்.

# இரத்தச் சிவப்புமிழும் புத்தம்புது மலர்கள்......

வை. எம். இஸ்மாயில்
மனிதப்பண்பியல்பீடம்

என்னருமை பலஸ்தீன வாலிபரே
அன்னையரே தந்தையரே
அறிவறிந்த மங்கையரே
தன்னுயிரைக் காப்பதுபோல்
தாயகமாம் பாலஸ்தீன்
வென்றெடுக்க முன்னையிலும்
வேகமாய்ப் போரிடுவீர்.

அரபியரின் குருதிநுகர்
அமெரிக்கக் கொடும்பேயே
தாய்மையைச் சிதைத்துரத்தத்
தாகத்தைத் தீர்க்கின்றாய்
உன்னையுமோர் தாய்தானா
உலகத்தில் ஈன்றெடுத்தாள்?

பருவமலர் மங்கையரை
பச்சைக் குழந்தைகளை
நச்சுப்புகையதனால்
நரபலி நீ புரிகின்றாய்
நாம் செய்த குற்றமென்ன?

எங்கள் வியர்வையால்
இனிதுயர்ந்த எம்நாட்டு
ஈத்தம்பழத் தோப்புகளும்
எண்ணெய் ஊற்றுகளும்
நீண்ட நெடும் சாலைகளுந்
நாசமுறச் செய்தவனே
நாமினியும் பொறுத்திடவோ?

கொலைகாரா உந்தனது
குண்டுகளால் பாழாகி
சுடுகாடாய் மாறிவிட்ட
கோலான் குன்றுகளில்
ஜோர்தான் நதிக்கரையில்
ரத்தச் சிவப்புமிழும்
புத்தம் புது மலர்கள்
நிச்சயமாய்ப் பூத்துவரும்!

எங்கள் தந்தையர்கள்
இனிதமைத்த ஆலயமாம்
பைத்துல் முகத்தஸிலும்
பாவியரின் பாட்டிசையா?

பணநாயகம் காட்டும்
ஜனநாயகம் என்னும்
முகமூடி தாங்கிவரும்
மூர்க்கனே உன்முடிவு
நிச்சயமாய் வந்துவிடும்!

வியட்நாமின் வீரர்கள்
வென்றெடுத்த வழியதனில்
உயர்த்திடுவீர் பதாகை
பாலஸ்தீன வீரர்களே!

நிச்சயமாய்ப் பூத்துவரும்

# பல்கலைக்கழக அனுமதியில் நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

**எம். எஸ். எம். அஸ்லஹ்**
**இரண்டாம் வருடம், விஞ்ஞான பீடம்**

ஒரு நாட்டின் உயர்கல்வி பீடமாகத் திகழ்ந்து கொண்டிருப்பது அந்நாட்டின் பல்கலைக் கழகமே. ஆனால் அந்த உயர் கல்வி பீடத்தில் நுழையக் கிடைப்பது இன்றைய நிலையில் பெரிய பிரச்சினையாகவே உள்ளது. ஒவ்வொரு வருடமும் அரசாங்கம் புதுப்புது உத்திகளைக் கையாண்டு மாணவர்களைப் பல்கலைக் கழகத்திற்கு அனுமதிப்பதனால் மாணவர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். குறிப்பாக தமிழ் மொழி மூலம் பயிலும் மாணவர்கள் மிகவும் பிரச்சினைக்குரிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். திறமையான சித்திகள் பெற்ற சிலருக்கு பல்கலைக் கழக அனுமதி கிடைக்காதிருக்கும் அதே வேளையில் ஓரளவு சித்திபெற்ற மாணவர்கள் அனுமதி பெற்றுக் கொள்கின்றனர். இது எங்ஙனம் நடைபெறுகிறது?

1970 ஆம் ஆண்டுக்கு முன் பிரச்சினைகள் எதுவுமின்றி பல்கலைக்கழக அனுமதிகள் ஒழுங்காக நடைபெற்று வந்தன. 1970 ஆம் ஆண்டில் திறமைக்கு மதிப்புக் கொடுக்காமல்மொழி அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது பிரச்சினைக்குரிய இம்முறை சிங்கள மாணவர்களிடம் புகழ் பெற்றுவிட்டது. இதனை நடைமுறைப்படுத்திய அரசாங்கம், இதனை மறந்து விடுவோம் எனப் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் கூறியது. இம்முறை மாற்றப்பட்டு இதற்குப் பதிலாக புள்ளிகளைத் தரப்படுத்துதல் மூலம், நியாயமான நேர்மையான முறையில் பல்கலைக் கழக அனுமதி வழங்கப்படும் என வாக்குறுதியளிக்கப்பட்டது.

புதிய தரப்படுத்தல் முறையில் சிறு மாற்றம் இருப்பினும் 1970ஆம் ஆண்டின் நிலைதான் தொடர்ந்தும் இருந்து வந்தது தரப்படுத்தல் தொடர்பான பூரண விளக்கத்தை இன்னும் அரசாங்கம் மக்களுக்கு வெளியிடவில்லை இதனால் ஏற்பட்ட ஐயப்பாடு இன்னும் தீர்க்கப்படவில்லை இன்று வரை நடைமுறையில் இருந்துவந்த தரப்படுத்தல் பற்றி அரசாங்கம் பின்வருமாறு மேல்வாரியாகக் கூறுகிறது.

"The Method used for Standardisationwas the application of a standard statistical formula, this did not either favourably or adversely affect any student of irrespective medium. The only advantage of applying such a statistical device is that the weightage given to each subjects becomes uniform and comparison between the performances of any two students becomes easier. The total aggregate was calculated from the standardized scores."

இவ்வாறு குறிப்பிட்டிருப்பினும் மொழி இன அடிப்படைத் தேர்வே தொடர்ந்தும் கடைபிடிக்கப்படுகின்றது என்பது வெளிப்படை. இம்முறையில் நடைபெற்று வந்த தரப்படுத்தல் 1915ம் ஆண்டு தொடக்கம் வேறு திசைக்கு மாற்றப்பட்டது. அதாவது 1975 இல் தரப்படுத்தலோடு, முழுவதாக மாவட்ட கோட்டா முறை அமுலாக்கப்பட்டது. இதனால் பல திறமையான மாணவர்கள் வீட்டில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனைப் பல கல்விமான்களும், பல அரசியல் வாதிகளும் சுட்டிக் காட்ட முன்னைய அரசாங்கம் "செனமன்" தலைமையில் இதுபற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஒரு குழுவை நியமித்தது. அக்குழு மொழிவாரித் தரப்படுத்தலை நீக்கும்படி அரசுக்கு ஆலோசனை கூறியது. சிங்கள மாணவர்களின் எதிர்ப்புக்கு அஞ்சி அரசு இவ்வறிக்கையை குப்பைத் தொட்டியில் போட்டது. பின் 1976 - 977 ஆம் ஆண்டு அனுமதியில் 70% திறமைக்கும் 30% மாவட்ட கோட்டா முறைக்கும் இடம் கொடுக்கப்பட்டது 1975 ஆம் வருட அனுமதியில் மாணவர்கள் பிறந்த இடமே அவர்களின்

மாவட்டமாக கணிக்கப்பட்டது. 1976 அனுமதியில் பரீட்சை எழுதிய இடமே மாவட்டமாக கணிக்கப்பட்டது. இதனை எதிர்க்கவே மீண்டும் 1977 ஆம் வருட அனுமதியில் பிறந்த இடம் படித்த பாட சாலை என்பனவற்றை அறிந்து மாவட்டம் கணிக்கப்பட்டது. அரசாங்கம் உடனுக் குடன் மாற்றும் இவ்விதத் திட்டங்களினால் மாணவர்கள் பல்கலைக் கழக அனுமதி பெறமுடியாத நிலையில் தவித்துக் கொண் டிருக்கின்றனர்.

இலங்கையில் சுமார் 10 இலட்சம் முஸ்லிம்கள் வாழுகின்றனர். இவர்களில் 1/3 பங்கினர் இலங்கையின் கிழக்கு மாகாணத்திலும் 2/3 பங்கினர் இலங்கையின் மற்ற எல்லாப் பகுதிகளிலும் சிங்களவர் வர்களுடன் கலந்து பரந்து வாழ்கின் றனர். முஸ்லிம்கள் செறிந்து வாழும் ஒரே ஒரு மாவட்டம் அம்பாறை மாவட்டமாகும். பல்கலைக் கழக அனு மதியில் மாவட்ட கோட்டா, மொழிவாரித் தரப்படுத்தல் போன்ற செயல்கள் கார ணமாக சிங்களப் பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் மாணவர்கள் கடந்த சில வரு டங்களாக பல்கலைக்கழக அனுமதியில் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். திற மையான மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டிய அனுமதிகள் கிடைப்பதில்லை. எந்த அடிப்படையில் தெரிவு நடப்பதால் இவர்கள் புறக்கணிக்கப் படுகின்றார்கள் என்பது இன்னும் புதிராகவே இருக்கி றது. திறமை அடிப்படையைக் கருதும் போது தரப்படுத்தல் காரணமாக தமிழ் மொழி பரீட்சார்த்திகளின் புள்ளிகளில் மாற்றம் செய்யப்படுவதால் திறமையின் மூலம் கிடைப்பதும் இல்லை மாவட்ட அடிப்படையை நோக்கும்போது இங்கு முஸ்லிம்களின் சனத்தொகை ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைவாகையால் இம் முறையில் அனுமதிகிடைப்பதும் இல்லை. எது எப்படியாயினும் நன்றாக சித்தி எய் திய ஒரு தமிழ் மொழி மூல மாணவன் வீட்டில் தவம் கிடக்க, குறைந்தளவு சித்திபெற்ற ஒரே மாவட்டத்தைச் சேர்ந்த ஒரே இடத்தைச் சேர்ந்த ஒரு சிங்கள மொழி மூல மாணவன் பல்கலைக் கழகத் தில் குஷியாக தனது உயர் கல்வியைத் தொடர்ந்து கொண்டிருப்பான். அல்லது கார்த்திராப் பிரகாரமாக ஒரு தமிழ் மொழி மாணவருக்கு அனுமதி கிடைத் தால் அவருக்குக் கிடைக்கும் பீடம் இய ற்கை விஞ்ஞானமாயின் சிங்கள மொழி மூல மாணவனுக்குக் கிடைப்பது பொறி யியல் அல்லது மருத்துவப் பீடமாகும்.

மாவட்ட கோட்டா முறையையும், மொழிவாரித் தரப்படுத்தலையும் அரசாங் கம் அமுல் செய்ததற்கு, அரசாங்கம் பல விளக்கங்களைத் தருகிறது:

(i) சிங்கள மொழி மூலம் கற்பிக்கும் விஞ்ஞான ஆசிரியர்கள் குறைவு.

(ii) சிங்களப் பிரதேசம் கிராமப் புறம் கல்வி வசதி வாய்ப்பில்லை. வரு மானக் குறைவு. எனவே கிராமப் பிர தேசத்து 50 வீதமானவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டிய நிலை.

(iii) கிராமப்புறப் பாடசாலைகள் பின் தங்கியிருப்பதால் அங்கிருந்து வரும் மாண வர்கள் பல குறைபாடுகளைக் கொண் டிருக்கலாம். அத்தகைய குறைபாடுகளைப் போக்கி எம்மாணவர்களும் வெற்றிகரமான முறையில் கல்வியை மேற்கொள்ள வழி வகுப்பது.

மேற்கூறப்பட்ட காரணங்கள் முஸ் லிம் மாணவர்களைப் பொறுத்தவரையி லும் செல்லுபடியாகக் கூடியது. இப்படி இருந்தும் அனுமதிக்கான புள்ளிகள் ஒரு இன மக்களுக்கு ஒன்றாகவும் மற்ற இன மக்களுக்கு வேறொன்றாகவும் இருப்பதைக் காண்கிறோம். ஏனெனில் திறமையான புள்ளிகள் பெற்ற ஒரு குறிக்கப்கப்பட்ட இன மாணவர்கள் ஏன் அனுமதிக்கப் படவில்லை என்ற கேள்வி எழுகிறது.

முன்பு குறிக்கப்பட்ட முறையில் தெரிவு நடைபெறுவதாலேயே முஸ்லிம் மாணவர் களின் எண்ணிக்கை குறைகின்றது கிரா மப்புற, கல்வி, பொருளாதார வசதியற்ற நிலையைக் கருத்தில் கொண்டால் சிங்கள மொழிக்குக் குறைந்த புள்ளி வழங்குவது நியாயமாக இருக்கலாம். ஆனால் அதே நியதிப்படி முஸ்லிம் மாணவர்களினது தெரிவுக்கான புள்ளி சிங்கள மொழி மாணவர்களிலும் குறைவானதாகவே இருக்க வேண்டும். ஏனெனில் தரம் வாய்ந்த கல்வி, வாய்ப்புள்ள யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டுமல்ல தமிழ் மாண வர்கள் படிப்பது. பிறமாவட்டங்களில் குறிப்பாக முஸ்லிம் மாணவர்களும், மலை நாட்டுத் தமிழரும் வதியும் மாவட்டங் களில் சிங்களப் பாடசாலைகளின் தரத் தைவிடக் கீழான பாடசாலைகளும், குறை ந்த கல்வி வாய்ப்பும், தகுதியான ஆசிரி யர்கள் இப்பாடசாலைக்கு வராமையும், பிற்போக்கான பொருளாதாரமும், பல் கலைக் கழகத்திற்கு மாணவர்களைத் தெரி

யும் குழுவின் கண்களுக்குத் தெரியாமல் போன காரணம்தான் என்ன?

பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களைத் தெரியும் குழு இலங்கையில் உள்ள மாவட்டங்களை கல்வி வசதி குறைந்த, கல்வி வசதி கூடிய மாவட்டங்களாகத் தரம் பிரித்துள்ளது. வசதி கூடிய மாவட்டத்தில் இருந்து அனுமதி பெறும் மாணவன் கூடிய புள்ளிகளையும், வசதி குறைந்த மாவட்டத்திலிருந்து அனுமதி பெறும் மாணவன் குறைந்த புள்ளிகளையும், பெற்று பல்கலைக்கழக அனுமதியைப் பெறலாம். வசதி கூடிய வசதி குறைந்த மாவட்டங்கள் எந்த அடிப்படையில் வகுக்கப்பட்டது என்பது ஒரு பிரச்சினைக்குரிய வினாவாக அமைகிறது. ஒரு மாவட்டம் கல்வி வசதி கூடியது என்று கூறும்போது அங்கு உயர் கல்விக்கான சகல வசதிகளும் மும் மொழிகளிலும் இருக்க வேண்டும். ஆனால் தற்போதுள்ள மாவட்டப் பிரிப்பு. ஒரு மொழியினருக்கு வசதி கூடியதாகவும் இன்னொரு மொழியினருக்கு வசதி குறைந்ததாகவும் இருக்கிறது முஸ்லிம்கள் வாழும் சில மாவட்டங்களை நோக்கும்போது அங்கு சிங்கள மொழி மூலம் சிறந்த பாடசாலைகள் உள. ஆனால் தமிழ் மொழி மூலம் சகல வசதிகளுமுள்ள பாடசாலைகள் இல்லை. உதாரணமாக காலி, மாத்தறை, கேகாலை போன்ற மாவட்டங்கள் வசதி கூடிய மாவட்டங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஆனால் இங்கு சிங்கள மாணவர்களுக்கு சகல வசதிகளுடன் பொருந்திய பல பாடசாலைகள் உள இப்பாடசாலைகளில் இருந்து அதிக மாணவர்கள் ஒவ்வொரு வருடமும் பல்கலைக் கழக அனுமதி பெறுகின்றனர். ஆனால் இம் மாவட்டங்களில் பூரண வசதிகளுடன் பொருந்திய தமிழ் மொழி பாடசாலைகள் இல்லை காலி மாவட்டத்தில் விஞ்ஞான உயர் கல்வி தமிழ் மொழி மூலம் பெற ஒரு பாடசாலையும் இல்லை. மாத்தறை, கேகாலை மாவட்டத்தில் அரைகுறையாக ஒவ்வொரு பாடசாலைகளே உள. எனினும் இங்கு தேவையான பட்டதாரி ஆசிரியர்களைப் பெறுவது மிகக் கஷ்டம். ஆசிரியர்கள் அடிக்கடி மாற்றம் பெற்றுச் செல்வதைக் காணக் கூடியதாக இருக்கும். இவ்வாறாக இருந்தும் இம் மாவட்டம் வசதியுள்ள மாவட்டமாகக் கருதப்படுவதால், இதிலுள்ள முஸ்லிம் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெறுவது மிகமிகக் குறைவு. காரணம் இது வசதியுள்ள மாவட்டமாகக் கருதப்படுவதால் மற்ற மாணவர்களிலும் அதிக புள்ளி எடுக்க வேண்டியுள்ளது. எனவே மாவட்டங்களைத் தரம் பிரிக்கும் போது அது மொழி அடிப்படையில் நடைபெற வேண்டும். ஒரு மாவட்டம் சிங்கள மாணவர்களுக்கு வசதியானதாகவும், அதே மாவட்டம் முஸ்லிம் மாணவர்களுக்கு வசதியில்லாமலும் இருக்கலாம் ஆனால் கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி மாவட்டங்கள் மும் மொழி மாணவர்களுக்கும் வசதியானது. அதேபோல அம்பந்தோட்டை மொனராகலை மாவட்டங்கள் மும் மொழிகளுக்கும் வசதியற்றது. எனவே மாவட்டத்தரப் பிரிப்பு மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும.

1975 இல் 100 வீதமும் மாவட்ட முறையின் படியே பல்கலைக் கழக அனுமதி நடைபெற்றது இவ்வருடம் தான் சிங்களப் பகுதியில் வாழும் முஸ்லிம்களுக்கு பலத்த அடி விழுந்தது. இங்கு நாம் உதாரணமாக மாத்தறை மாவட்டத்தை எடுப்போம். 1974 ஏப்பிரலில் நடைபெற்ற க. பொ. த (உயர்தர) பரீட்சையில் இம்மாவட்டத்தில் 3 மாணவர்கள் மட்டுமே விஞ்ஞானப் பிரிவில் சித்தியடைந்தனர். அதில் ஆகக்கூடிய பெறுபேறு BCSS ஆனால் இம்மாணவனுக்கு அனுமதி மறுக்கப்பட்டது அதாவது 1975 இல் இம் மாவட்டத்தில் இருந்து ஒரு மாணவனுக்கும் அனுமதி கிடைக்கவில்லை. ஆனால் அதேவேளையில் இங்கு 4S எடுத்த சிங்கள மொழிமூல மாணவர்களுக்கு அனுமதி கிடைத்தது இதை ஒப்பிட்டு நோக்கும் போது, இது சிங்கள மாணவர்களுக்கு வசதியான மாவட்டம் என்று கருதினாலும், முஸ்லிம் மாணவர்கள் வசதியற்ற பாடசாலைகளில் படித்து அவர்களிலும் சிறந்த பெறுபேறுகள் பெற்றும் அனுமதியில்லாமல் தவிக்க வேண்டியுள்ளது அல்லது மொழிவாரித் தரப்படுத்தலினால் எமது புள்ளிகள் குறைக்கப்பட்டனவா? இதே மாவட்டத்தில் BCCS எடுத்த கலைப்பிரிவைச் சேர்ந்த ஒரு மாணவனுக்கும் அனுமதி மறுக்கப்பட்டு இதிலும் குறைந்த சிங்கள மொழி மாணவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. இவைபற்றி அவ்வப்போது அரசாங்க உயர் அதிகாரிகள், அரசியல் தலைவர்கள். அமைச்சர்கள், தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்கள் ஆகியோரின் கவனத்திற்குப் பல முறை கொண்டுவரப்பட்டன. ஆனால் இவைபற்றி எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இவ்வாறான நிகழ்ச்சிகள் முஸ்லிம்கள் வாழும் பல மாவட்டங்களில் நடந்துள்ளன. இது தொடர்

பாகக் கலந்துரையாட பலர் தயங்குவது ஏனோ ?

1976ம் ஆண்டு அனுமதியிலும் பல தில்லு முல்லுகள் இடம் பெற்றன. இவ்வாண்டு அனுமதியில் பரீட்சை எழுதிய இடமே (1975 ஏப்ரல்) அவரவரின் மாவட்டமாகக் கணிக்கப்பட்டது அம்பாறை மாவட்ட ஒருவர், தனது வசதிக்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் பரீட்சை எழுதி BCSS என்ற பெறுபேறு பெற்றும் அனுமதி கிடைக்கவில்லை ஏனெனில் மட்டக்களப்பு மாவட்டம் வசதியுடைய பிரதேசமாகக் கருதப்படுபவதால் ஆகும் இவ்விதம் அரசாங்கம் அனுமதி முறைகளை அடிக்கடி மாற்றுவதால் அனேக வசதி குறைந்த மாவட்ட மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். இதனால் அரசாங்கத்தின் ''வசதி குறைந்த கிராமப்புற மாணவர்களுக்கு சலுகை அளித்தல்'' என்ற கொள்கை சரியான முறையில் அமுல் செய்யப்படாமல் அல்லது நிறைவேற்றப்படாமல் வீணாக்கப்படுகிறது எனலாம். அதாவது பயன்பெற வேண்டிய மாணவர்கள் பயன் பெற முடியாமல் இருக்கின்றனர்.

1977 ஆம் வருட அனுமதியில் யாரும் எதிர் கொள்ளாத பிரச்சினைகளை நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இவற்றைப் பலரது கவனத்திற்குக் கொண்டு வந்தும் எமக்கு சரியான தீர்வுகள் கிடைக்கவில்லை. இவ்வாறான நிலை நீடித்தால் எதிர்கால முஸ்லிம் மாணவர்களின் உயர் கல்வி எவ்வாறு அமையும் என்பதை சிந்திக்கப் பயமாக இருக்கிறது. இம்முறை பல்கலைக் கழக அனுமதியில் 90% சிங்களவர்களுக்கும் 8 வீதம் தமிழர்களுக்கும் 2 வீதம் முஸ்லிம்களுக்கும் கிடைத்துள்ளது. சிங்களவர்கள் தமது சனத் தொகை விகிதசாரத்திலும் கூடிவிட்டனர். இனி அவர்கள் ஒருபோதும் சனத்தொகை விகிதாசாரப்படி பல்கலைக்கழக அனுமதி கொடுக்கப்படுவதை விரும்ப மாட்டார்கள். நாமும் விகிதாசாரத்தைப் பற்றி கேட்கவில்லை. தகுதியும் திறமையும் உள்ள எமது முஸ்லிம் மாணவர்களுக்கு அனுமதி கொடுக்கும்படியே வலியுறுத்துகிறோம். 1977 ஆம் ஆண்டு அனுமதியில் விஞ்ஞானப் பிரிவில் ஒரே பாடசாலையில் BBCS எடுத்த ஒரு முஸ்லிம் மாணவன் புறக்கணிக்கப்பட்டு, சிங்கள மொழிமூலம் CSSS பெறுபேறு உள்ள ஒரு மாணவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். தமிழ் மொழியில் வசதியான பாடசாலைகள் இல்லாத வசதி குறைந்த மாத்தறை மாவட்டத்தில் உள்ள ஒரு மாணவன் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் CCCS எடுத்து வீட்டில் இருக்க, மிகவும் வசதி கூடியது என்று எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட யாழ் மாவட்டத்தில் இருந்து தமிழ் மொழி மூலமே அதே பெறுபேறுள்ள ஒருவர் அனுமதி பெறுகிறார். இவ்வாறான சீர்கேடுகளை யாரிடம் கூறுவது? வசதியில்லாத இடங்களில் இருந்தே சிறந்த பெறுபேறுகள் பெற்றும் அனுமதி கிடைக்காத நிலையைக் கண்டு மாணவர்கள் விரக்தி நிலையில் உள்ளனர். இவ்வாறான நிலைமை தொடர்ந்தும் நீடித்தால் மாணவர்கள் தமது படிப்பில் கவனம் செலுத்துவார்களா?

பல மாவட்டங்களில் தமிழ் மொழி மூலம் சிறந்த பாடசாலைகள் இல்லாமையினால் வசதி கூடிய இடத்திலுள்ள ஒரு பாடசாலையில் சேர்ந்து படித்துப் பரீட்சை எடுக்கின்றனர். இவ்வாறு வசதி குறைந்த மாவட்டத்தில் இருந்து வசதிகூடிய மாவட்டப் பாடசாலைக்குப் போய் BBCS எடுத்த ஒரு மாணவனுக்கு 1977ல் அனுமதி கிடைக்கவில்லை. இதே போல் கல்வி வசதி குறைந்த மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு மாணவன் யாழ் மாவட்டப் பாடசாலையில் கற்று ACCS எடுத்தும் அனுமதி கிடைக்கவில்லை ஏனெனில் 1975 ஆம் ஆண்டு அனுமதியில் எப்பாடசாலையில் கற்றாலும் அவர்கள் வதியும் மாவட்டமே அவர்களைத் தெரிவதற்கான மாவட்டமாகக் கருதப்பட்டது. ஆனால் 197 ஆம் ஆண்டு அனுமதியில் மாணவர்கள் கற்கும் பாடசாலையின் மாவட்டமே, மாணவரின் மாவட்டமாகக் கருதப்பட்டதால், சிறந்த பாடசாலையை நாடிவந்த பின்தங்கிய மாவட்ட முஸ்லிம் மாணவர்கள் பாதிக்கப்பட்டனர். அவர்களது சொந்த மாவட்டத்திலே உயர் கல்வி கற்கப் போதிய வாய்ப்பில்லை. ஒருவாறு அம்மாவட்டத்தில் படித்து சித்தி எய்தினாலும், அம்மாவட்டத்தில் உள்ள வசதியான பாடசாலைகளில் கற்ற சிங்கள மாணவர்களோடு அல்லது பிற மாவட்டங்களோடு போட்டியிடும் நிலை. சிறந்த முறையில் சித்தியடைய சிறந்த ஒரு சாலையை நோக்கிச் சென்றாலும் அப்பாடசாலையின் மாவட்ட அடிப்படையில் கணிக்கும் நிலை எந்தத் திசையிலும் எமது மாணவர்களின் கல்விக்குப் பாதகமே.

இவை போல் இன்னும் சில சீர்கேடு களைக் குறிப்பிடலாம். மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த ABBS எடுத்த ஒருவரும், குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த BBBS எடுத்த ஒருவரும் 1977 ஆம் வருட அனுமதியில் பௌதிக விஞ்ஞானப் பிரிவுக்கே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆனால் இதே மாவட்டங்களில் உள்ள சிங்கள மாணவர்கள் இதைவிடக் குறைந்த பெறுபேறுகள் பெற்றாலும் பொறியியல் பிரிவுக்குத் தெரிவு செய்யப்படுவது உறுதி. இது தொடர்பாக செனட் அகத்தில் விசாரித்துப் பார்த்தால் எமது மொத்தப் புள்ளி (Total Agrregate) குறைவாகவும் அவர்களது மொத்தப் புள்ளி கூடியதாகவும் இருக்கலாம் என்று கூறி ஏமாற்றிவிடுவார்கள்.

எனவே இவைகளைத் தொகுத்து நோக்கும்போது பல்கலைக் கழகப் பிரவேசத் தெரிவுக்குக் கையாளப்படுகின்ற முறை ஒரு மர்மமாகவும் அதிருப்தியூட்டக்கூடியதாகவும் இருக்கின்றது என்று மட்டும் புலனாகின்றது. போதிய கல்வி வசதியற்ற மாவட்டங்களில் பயிலும் மாணவர்களின் நலன் கருதி அம்மாவட்டங்களில் மாணவர்கள் குறைந்த மட்டப்புள்ளில் தெரிவு செய்யப்படுகின்றனர் என சிலர் கருதுகின்றனர். அவ்வாறாயின் முஸ்லிம் மாணவர்கள் மேலும் கூடுதலாகத் தெரிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் பொதுவாக எம் மாவட்டத்திலும் முஸ்லிம் மாணவர்களுக்குக் கல்வி வாய்ப்புக்கள் குறைவாக உள்ளன. ஆகவே மாவட்டப் புள்ளி மட்டம், மாவட்டக் கல்வி வசதிக்கேற்பவும், மொழிவாரிக் கேற்பவும் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

ஒரு மாவட்டத்தில் சிங்களத்தைப் போதனா மொழியாகக் கொண்ட மாணவன் குறைந்த புள்ளி மட்டத்தில் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட, அதே மாவட்டத்தைச் சேர்ந்த தமிழைப் போதனா மொழியாகக் கொண்ட மாணவன் கூடிய புள்ளி மட்டத்திலேயே தெரிவு செய்யப்படுகிறான் என்று முன்பு நான் குறிப்பிட்டேன். இதற்கு பின்வரும் தரவு சான்று பகர்கின்றது. 1970 ஆம் ஆண்டு அனுமதியில் மொழியடிப்படையில் புள்ளிகள் விதிக்கப்பட்டன.

---

உசாத் துணை நூல்கள்:

(i) Ferguson's Ceylon Derectory

(ii) Hansard volume 83 B 0514 to 518 (6/1/71)

அவை வருமாறு:—

| பீடம் | சிங்கள மொழிக்கு இழிவுப் புள்ளி | தமிழ் மொழிக்கு இழிவுப் புள்ளி |
|---|---|---|
| பொறியியல் (பேராதனை) | 227 | 250 |
| பொறியியல் (கட்டுப்பெத்தை) | 212 | 232 |
| மருத்துவம் | 229 | 250 |
| பௌதிக விஞ்ஞானம் | 183 | 204 |
| உயிரியல் விஞ்ஞானம் விவசாயம். மிருக வைத்தியம் | 175 | 184 |
| கட்டிடக் கலை | 180 | 194 |

மேற்காட்டியவாறு மொழியடிப்படையில் தெரிவதினாலே முஸ்லிம் மாணவர்கள் குறைவாகத் தெரிவாகியுள்ளனர். எனவே எவ்வடிப்படையில் தெரிவு செய்யப்பட்டாலும் தற்போதய தெரிவு முறை கல்வியில் பிற்போக்கான நிலைமையிலுள்ள முஸ்லிம் சமூகத்தைப் பாதிக்கும் வண்ணம் அமைந்துள்ளது என்பது தெளிவு.

எனவே இன்றைய நிலையில் நாம் பிரச்சினைப்படும் பல்கலைக் கழகப் பிரவேச முறை மாற்றப்பட்டு, திறமைக்கு இடம் கொடுக்கக் கூடியதாகவும், வசதி குறைந்த மாவட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கு இடம் கொடுக்கக் கூடியதாகவும் உள்ள ஒரு சிறந்த முறையை நாம் விரும்பி எதிர்பார்க்கிறோம். தற்போதய தரப்படுத்தல் முறையினால் நகர்ப் புறத்தில் வதியும் மாணவர்கள் பாதிக்கப்படுவதாகப் பலர் சுட்டிக் காட்டியதன் காரணமாக பதவி ஏற்றுள்ள புதிய அரசாங்கம் தரப்படுத்தலை ஒழித்துள்ளது. ஆனால் இதற்கு எதிர்ப்புக்களும் தற்போது கிளம்பியுள்ளன. எனினும், இம்முறை 1978 ஆம் ஆண்டு அனுமதியில் கையாளப்பட்ட புதிய முறை எல்லோரையும் திருப்திப்படுத்துவதாக இல்லை. அத்தோடு வசதி குறைந்த மாவட்டங்களில் வாழும் பல மாணவர்களுக்கு இம்முறை அனுமதி கிடைக்கவில்லை. சிங்கள மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக பல சிங்கள கல்விமான்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இதன் காரணமாக 1979 ஆம் ஆண்டுக்குரிய அனுமதிபற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க உபவேந்தர் மற்றும் பலரை உள்ளடக்கி ஒரு குழுவினை உயர் கல்வி அமைச்சின் செயலாளர் நியமித்துள்ளார். இக்குழுவினர்களுக்கு நாம் எதிர்நோக்கும் பிரச்சனைகளைச் சுட்டிக்காட்டி அதிலிருந்து நிவாரணம் பெற வழிபார்ப்போம். ❁

*With Best*
*Compliments of*

**M. S. A. SAYEDHASSAN**
**MOWLANA & CO.**

40, Main Street,
KALMUNAI.

*With Best*
*Compliments of*

**TRANSPORT AGENT**

**S. M. MEERAN SAHIB**

117, Manipay Road,
JAFFNA.

**FITTEXT**

*With Best Compliments*
*From*

**FITTEXT**
9 (18) Grand Bazaar,
JAFFNA

*With Best Compliments*
*From*

**ROYAL**
**RESTAURANT**

PETTAH
MANNAR

*Best Compliments*
*from*

# BABUJEES ICE CREAM

43, Main Street,
**KALMUNAI**

*With best Compliments*
*from*

# KOYA BEEDI COMPANY

215, Kandy Road,
MAWANELLA.

கல்முனையில்

* நவீன அப்பலோ மெசின் கட் நகைகளா?
* மனதிற்குகந்த அசல் தங்கப் பவுண் நகைகளா?

இவற்றிற்கு
பிரசித்தி பெற்ற ஸ்தாபனம்

## KALMUNAI JEWELLERY

## கல்முனை ஜுவலரி

*(பஸ் நிலையத்திற்கு அருகாமையில்)*

Phone: **276**

* பழைய நகைகள் கூடிய விலைக்கு கொள்வனவு செய்யப்படும்,
* ஓடர் நகைகள் உத்தரவாதத்துடன் குறித்த காலத்தில் செய்து தரப்படும்.

உங்களுக்குத் தேவையான சகல வித
மோட்டார் உதிரிப்பாகங்களினதும்
உத்தரவாதமிக்க விற்பனையாளர்

## துரை (THURAI)

ஆர்.ஜி. பில்டிங்ஸ்
**66, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
Phone: **7750**

போக்குவரத்து சேவையின் முன்னோடிகள்
உண்மையான பாதுகாப்பு
உத்தரவாதமிக்க கவனம்,
உங்கள் பொருட்களை நம்பிக்கையுடன்
எவ்விடத்திற்காயினும் அனுப்ப நாட
சிறந்த இடம்

## இராசகுமாரி
## போக்கு வரத்துச் சேவை

**83 2, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,**
**யாழ்ப்பாணம்.**
**Phone: 7565**

*Space Donated By*

## SALAMS TRANSPORTERS

COLOMBO TO JAFFNA

95, K. K. S. Road,
**JAFFNA.**
Telephone: 697

65, Dam Street,
**COLOMBO-12**
Telephone: 35509

## தாஜ்மஹால் ஸ்டோர்ஸ்

எங்களிடம்
சில்லறைச் சாமான்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

**TAJMAHAL STORES**
134, Rest House Road,
KALMUNAI

## AMEER TEX

**LEADING TAILORS**
**IN**
**SRI LANKA**

AMEER TEX

Specialist For Ready made
Clothes

24 a, Grand Bazaar,
JAFFNA

உங்களுக்குத் தேவையான

- மொட் சேட்டுகள்
- சூட்டிங்குகள்
- சேட்டிங்குகள்
- சாரிகள்

யாவும் மலிவாகக் கிடைக்கும்
சிறந்த இடம்

**MUBEETHA TEXTILES**

250, Main Street,
KALMUNAI



# NIZAR TRADING COMPANY

Wholesale and
Retail Dealers in

★ TRACTOR SPARE PARTS
★ AGRO CHEMICALS Etc.

**நிஸார் ரேடிங் கொம்பனி**

Nizar Building,
Main Street,
SAINTHAMARUTHU – 4



*With best Compliments From*

**Ceylon Jewellers**

JEWELLERY MARCHANT,
65, Main Street,
KALMUNAI.

**Ceylon House**

TEXTILES & FANCY GOODS
213, Main Street,
KALMUNAI

SUBRAYAN ... NSM LIBRARY ... JAFFNA

# இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றுப் பாரம்பரியங்கள்

மௌலவி, கே. எம். எச். காலிதீன், பீ. ஏ. (சிறப்பு) இலங்கை
(உதவி விரிவுரையாளர்)
அறபு இஸ்லாமிய நாகரிகத்துறை

தென்கிழக்காசியாவில் இந்திய உப கண்டத்தின் தென்பால் அமைந்து 25,533 சதுரமைல்கள் பரப்புடைய இயற்கை வனப்பு மிக்க அழகிய தீவே இலங்கை. மேற்கே அரபிக்கடலும், தெற்கே இந்து சமுத்திரமும், வடக்கேயும் கிழக்கேயும் வங்காள விரிகுடாவும் இதைச் சூழ்ந்துள்ளன. கரைப்பிரதேசங்கள் சமதரையாகவும், மத்திய பிரதேசம் மலைநாடாகவும் விளங்கும் எழில்மிக்க இத்தீவு மேற்கு நாடுகளையும், கிழக்கு நாடுகளையும் இணைக்கும் சந்தியாகவும், தென்கிழக்காசியாவில் சிறந்த இயற்கைத்துறைமுகத்தை உடையதாகவும் அமைந்திருப்பது சிறப்பம்சமாகும். முற்காலத்தில் ஸரந்தீப், ஸீலான், இரத்தினதுவீபம், ஈழம், இலங்கை எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டு இப்பொழுது ஸ்ரீலங்கா என நாமம் இடப்பட்டுள்ளது. ஒரு குடியரசாக விளங்கும் இத்தீவு ஒன்பது மாகாணங்களையும், இருபத்திரண்டு மாவட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது

மாகாணப்பிரிவுகள் முறையே வடமாகாணம், வடமத்திய மாகாணம், வடமேல் மாகாணம், கிழக்கு மாகாணம், மத்திய மாகாணம், ஊவா மாகாணம், மேல் மாகாணம், சப்பிரகமுவ மாகாணம், தென் மாகாணம் என அழைக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், அநுராதபுரம், திருகோணமலை, புத்தளம், பொலனறுவை, குருநாகல், மாத்தளை, மட்டக்களப்பு, அம்பாறை, கேகாலை, கண்டி, பதுளை, கொழும்பு, நுவரெலியா, களுத்துறை, இரத்தினபுரி, மொனறாகலை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகியன மாவட்டப்பிரிவுகளாகும்.

1971ம் ஆண்டில் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி இலங்கையின் மொத்தச்சனத்தொகை 1,27,11,143 ஆகும். மத அடிப்படையில் பௌத்தர்கள் 85,67,570, இந்துக்கள் 22,39,310, முஸ்லிம்கள் 9,09,941 கிறிஸ்தவர்கள் 9,86,687, ஏனையோர் 7,635 எனக்கணக்கிடப்பட்டுள்ளது.(*1)

இன அடிப்படையில் கீழ்நாட்டுச் சிங்களவர் 54,45,706, கண்டியன் சிங்களவர் 37,00,973, இலங்கைத்தமிழர் 14,15,567, இலங்கை முஸ்லிம்கள் 8,24,291 எனவும் வகுக்கப்பட்டுள்ளது. இலங்கை முஸ்லிம்களதும், இந்திய முஸ்லிம்களதும், மலாய முஸ்லிம்களதும் கூட்டுத்தொகை 8,95,332 ஆகவும் மிகுதி 14,609 பேர் ஏனைய இனங்களிலிருந்து இஸ்லாத்தைத் தழுவியவர்களாகவும் கணக்கிடப்பட்டுள்ளனர்.

இக்கணக்கெடுப்பின்படி இலங்கை முஸ்லிம்கள் 8,24,291, இந்திய முஸ்லிம்கள் 29,415, மலாய முஸ்லிம்கள் 41,625 எனவும். இத்தொகை மொத்தச்சனத்தொகையின் 7·1% ஆகவுள்ளது. விகிதாசார அடிப்படையில் நோக்கும்போது இலங்கை முஸ்லிம்கள் 90·6% ஆகவும் இந்திய முஸ்லிம்கள் 3·2% ஆகவும், மலாய முஸ்லிம்கள் 4.6% ஆகவும் உள்ளனர். மிகுதி ஏனையோராவர்.

இலங்கை முஸ்லிம்களின் பரம்பலை நுணுக்கமாக நோக்கின் கொழும்பில் 17·9%, திருகோணமலை 7·4%, அம்பாறை 15%, கண்டி 11·8%, மட்டக்களப்பு 7·8%, களுத்துறை 5·9%, குருநாகல் 5·5%, புத்தளம் 4.5%, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், வவுனியா, மொனராகலை, பொலனறுவை, இரத்தினபுரி உட்பட ஏனைய மாவட்டங்களிலும் 25% ஆன முஸ்லிம்கள் வாழுகின்றனர்.(*2)

(*1) 1971—ம் ஆண்டு குடிசன மதிப்பீடு.
(*2) கலாநிதி பொ. பாலசுந்தரம்பிள்ளை (முஸ்லிம் மஜ்லிஸ் வெளியீடு)

இலங்கை முஸ்லிம்களது வரலாறுபற்றி இதுகாலவரை பூரணமான வரலாற்று நூலொன்றும் எழுதப்படவில்லை. கி. பி. 1888ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ம் திகதி ஆசியக்கழகத்தின் (இலங்கைக் கிளை) முன்னிலையில் கௌரவ சேர். பொன் இராமநாதன் இலங்கைச்சோனகர் இனவரலாறு எனும் பொருளில் சமர்ப்பித்த ஆய்வுக்கட்டுரைக்கு திறனாய்வு ஒன்றை இலங்கைச் சோனகர் சங்கத்தலைவர் ஐ. எல். எம். அப்துல் அஸீஸ் (1900) அவர்கள் வெளியிட்டார். இத்திறனாய்வு ஒன்றுதான் ஓரளவு இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை மேலோட்டமாகத் தொட்டுள்ளது. அறிஞர் ஏ எம். ஏ. அஸீஸ் அவர்களது "இலங்கையில் இஸ்லாம்" என்னும் நூலிலும் சில குறிப்புகள் காணப்படுகின்றன. இன்னும் சிலர் இவ்வாய்வினைச் செய்வதற்கு முயன்றாலும் அவைகள் முற்றுப் பெற்றதாகத் தெரியவில்லை. இதனால் இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவர்களது வரலாற்றுப் பாரம்பரியங்கள் பற்றிய முழுமையான ஆய்வு அவசியமாகின்றது. இத்துறையில் இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாக அரபு இஸ்லாமிய நாகரிகத் துறை மேற்கொண்ட முயற்சிகளைத் தொடர்ந்து வித்தியலங்கார வளாக முஸ்லிம் மஜ்லிஸ் உறுப்பினர்களும் விரிவுரையாளர்களும் முஸ்லிம் அறிஞர்களும் ஆர்வமெடுத்திருப்பது வரவேற்கத்தக்கது. இவ்வாய்வினை மேற்கொள்வோருக்கு இவ்வாய்வுக்கட்டுரை முன்னோடியாக அமையலாமென்பதற்காக உங்கள் முன் இதனைச் சமர்ப்பிக்கின்றேன். குறுகிய காலத்தில் இலங்கை முஸ்லிம்களின் முழு வரலாற்றையும் விளக்கமாக ஆய்வு செய்ய முடியாது எனினும் மேலோட்டமாகவே இக்கட்டுரை சில முக்கிய தகவல்களை மேற்கோளாக வைத்து உங்கள்முன் சமர்ப்பிக்கப்படுகின்றது.

## ஆரம்ப வரலாறு:

இலங்கை முஸ்லிம்களின் குடியேற்றம் கி. பி. 7ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்டாலும் இதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே அரேபியாவுக்கும் இலங்கைக்கும் இடையே வர்த்தகத்தொடர்புகள் இருந்து வந்துள்ளதை வரலாற்றுச்சான்றுகள் நன்கு விளக்குகின்றன. அரபு நாடுகளுக்கும் இலங்கைக்கும் ஏற்பட்ட மிக நெருங்கிய தொடர்புக்கு இன்னும் ஒரு முக்கிய காரணம் ஆதிபிதா, ஆதம் (அலை) தரிபட்ட ஆதம்மலை என்று அழைக்கப்படும் பிரசித்தம் வாய்ந்த புனிததலம் இலங்கையின் மலைநாட்டுப்பிரதேசத்தில் அமைந்திருப்பதாகும். இப்பிரதேசம் இலங்கையில் வாழும் பௌத்தர்களினதும், இந்துக்களினதும், முஸ்லிம்களினதும், கிறிஸ்தவர்களினதும் புனித யாத்திரைத்தலமாக விளங்குகின்றது. மிக நீண்டகாலத்திற்கு முன்பிருந்தே இந்தப்பிரதேசம் பற்றிய செய்திகள் அறபு மக்கள் மத்தியில் பிரசித்தம் பெற்றிருந்தது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே வர்த்தகத்துறையில் கிரேக்கர்களும், ரோமர்களும், அறேபியர்களும் மிகச் செல்வாக்குப் பெற்றிருந்தனர்.

இவர்கள் தங்களது வர்த்தகத்தின் கேந்திர நிலையமாக இலங்கையை பாவித்தனர். கீழைத்தேசங்கட்கும் மேலைத்தேசங்கட்கும் மத்தியில் இலங்கை அமைந்திருந்தமையால் இலங்கையில் அவர்கள் தரித்துச்செல்வதற்கு வாய்ப்பாக இருந்தது. இலங்கை வரலாற்றை விளக்கும் ஆரம்பகால நூல்களில் ஒன்றான மகாவம்சம் கி. மு 4ம் நூற்றாண்டளவில் அநுராதபுரத்து மேற்கு வாசலில் யோனகர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த இடம்பற்றிக் குறிப்பிடுகின்றது. தமிழ் இலக்கியங்களிலும் இவர்களை யவனர்களென்று குறிப்பிடப்படுகின்றது. தொலமியின் உலகப்படத்தில் இலங்கையைப்பற்றிக் குறிப்பிடும்போது (கி. மு. 327--326) யோனர் வாழும் பகுதியும் யோனர் ஆறும் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

கி. மு. 4ம் நூற்றாண்டளவில் சுலைமான் (அலை) அவர்களது ஆட்சிக்காலத்தில் இலங்கையின் இரத்தினக்கற்களும், முத்துக்களும் தமது மனைவி பல்கீஸ் அவர்களுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டதாக வரலாற்று மரபுக்கதைகள் கூறுகின்றன. சுலைமான் (அலை) அவர்கள் மிகப்பரந்த சாம்ராச்சியத்தை ஆட்சி புரிந்தார்கள் என்பது வரலாற்று உண்மையாகும். இவர்களுக்கு இறைவனின் படைப்பினங்கள் அனைத்தும் உதவி அளித்தன என்பதும் இங்கு அவதானிக்கத்தக்கதாகும். மிகப் பெரிய சாம்ராச்சியத்தை ஆண்ட இரு நபிமார்களில் மிகப்பிரபல்யம் பெற்றவர் சுலைமான் (அலை) அவர்களாகும். இவர்களது ஆட்சிக்காலத்திலேயே இலங்கையின் புகழ் மத்திய கிழக்கில் பரவியிருந்தது.

அரேபிய வர்த்தகர்களுக்கும் சீனவுக்கும் இடையே வர்த்தகத்தொடர்புகள் இடம்பெற்று இருந்ததை ஆராய்ச்சியா

ளர்கள் எடுத்து விளக்குகின்றனர். இவ்வகையில் இடம்பெற்ற வர்த்தகம் கடல்மார்க்கமாக நடைபெற்றபொழுது ரோமர்களுக்கும் அரேபியர்களுக்குமிடையே வர்த்தகப்போட்டிகளும் இடம்பெற்றன. மிகப்பலம் பெற்றிருந்த ரோமராச்சியத்தின் வர்த்தகத்தை முறியடிக்கும் அளவிற்கு கி.மு 4ம் நூற்றாண்டிலேயே அரேபிய வர்த்தகர்கள் பலம் பெற்றிருந்தனர் என்பதை இவை விளக்குகின்றன. இந்த நூற்றாண்டில் ரோமர்களைத் தோற்கடித்து இலங்கையின் வர்த்தகம் முழுவதையும் அரேபியர் கைப்பற்றினர் (*1) மலாயா, யாவா உட்பட கீழைத்தேசத்தின் பலபகுதிகளிலும் அரேபியர் மேற்கொண்ட வர்த்தகம் இலங்கையின் ஊடாக இடம்பெற்றிருப்பதை இவை விளக்குகின்றன. இலங்கையைப்பற்றி இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்கு முன்னரே அரேபியர்கள் அறிந்திருந்தனர் என்பதும் இதன்மூலம் தெளிவாகின்றது. பெரிப்பலிஸின் ஆசிரியர் அரேபியர்களை இலங்கையில் கி பி 1ம் நூற்றாண்டிலும் கொஸ்மஸ் இன்டிகோ ஆசிரியர் பிலியஸ்டிஸ் என்பார் கி. பி. 6ம் நூற்றாண்டிலும் கண்டனர். (*2) கி. பி 6ம் நூற்றாண்டில் சீனவுக்கும் அறபுநாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட வர்த்தக உறவுகளும் தொடர்புகளும் மிகப் பிரசித்தம் வாய்ந்தவையாகும்.

கி பி. 7ம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் இவ்வர்த்தகத் தொடர்புகள் மேலும் விரிவடைந்து பாரசீகத்திறகும் பரவியது. பாரசீகக்குடா அரேபியர்களின் பிரதான வர்த்தகப்பாதையாக மாறிற்று. கி பி 618–907 சீனவில் ''தாங்க்'' பரம்பரையின் ஆட்சி நடைபெற்றபோது அரேபிய பாரசீக சீன வர்த்தக உறவுகள் மேலும் விரிவும் வலுவும் பெற்றன.

கி பி 7ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இஸ்லாம் அரேபிய தீபகற்பத்தில் மலர்ச்சி பெற்றபொழுது இஸ்லாத்தைப் பின்பற்றிய ஸஹாபாக்கள் சீனவோடு வர்த்தக உறவுகளை மேற்கொண்டனர். அவர்கள் சீனவில் பெரும் செல்வர்களாகக் கணிக்கப்பட்டனர் சீன அரசாங்கமும் அவர்களுக்கு சீனத்தலைநகரில் வர்த்தக விருத்திகளுக்கு இடமளித்திருந்தது. (1) சீனவுடன் ஆன தொடர்புகள் பற்றி நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அறிந்திருந்தார்கள். கன்சூல் உம்மால் நூலில்வருகின்ற ஹதீஸ் ''சீன சென்றாயினும் கல்வியைத் தேடுங்கள்'' என்பது இதற்கு ஆதாரமாகும். இந்த ஹதீஸை கல்வியைப்பற்றிக் கூறுகின்ற முஸ்லிம் அறிஞர்கள் பலரும் எடுத்தாள்வது குறிப்பிடத்தக்கதாகும். தாங்க் பரம்பரையினரின் ஆட்சிக்காலத்தில் சீனவுக்கு வந்த முஸ்லிம்கள் முற்றும் இஸ்லாமிய வாழ்க்கை முறையினைக் கைக்கொண்டவர்களாக இருந்தனர் இவர்கள் மிகவும் செல்வந்தர்கள். தங்களுக்குள் தங்கள் தலைவரைத் தெரிவு செய்தனர். ஹாய் ஹாய் என இவர்கள் அழைக்கப்பட்டனர். சீனவுக்குச் சென்ற இவர்கள் கி பி. 7ம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் இலங்கையின் ஊடாகவே சென்றனர் என்பதும் நாம் அவதானிக்க வேண்டிய முக்கிய அம்சமாகும் இலங்கையை இவர்கள் 'ஜஸீதுல்யாகூத்தி (மரகதத்துவீபம்)என அழைத்தனர். இலங்கையில் காணப்பட்ட பெறுமதி வாய்ந்த மாணிக்கக் கற்களுக்காகவே இப்பெயர் அவர்களால் இடப்பட்டது.

## இலங்கையுடன் முஸ்லிம்களின் தொடர்புகள்

நபிகள் நாயகம் முகம்மது (ஸல்) அவர்கள் மக்கா வெற்றிக்குப் பின்னர் ரோம பாரசீகத் தலைவர்களுக்கும் ஏனைய முக்கியத்துவம் வாய்ந்த தலைவர்களுக்கும் நாடுகளின் அரசர்களுக்கும் இஸ்லாத்தின் மகிமைபற்றியும் அவர்களை இஸ்லாத்தில் சேர்ந்து கொள்ளுமாறும் நிருபங்கள் அனுப்பினார்கள். அத்தோடு இஸ்லாமிய போதனைகளுக்காக வேண்டி ஸகாபாக்கள் பல நாடுகளுக்கும் அனுப்பப்பட்டனர். இவ்வகையில் முஆத் (றலி) அவர்களுக்கு நபிகள் நாயகம் இஸ்லாத்தின் மகிமைபற்றி மற்றையோருக்கு விளக்க வேண்டும் என்பதை விளக்கியவிதம் பிரசித்தம் வாய்ந்ததாகும். இதே காலப்பகுதியில் இஸ்லாத்தைப்பற்றியும் முகம்மது (ஸல்) அவர்களைப்பற்றியும் இலங்கை மன்னர்களும் அறிந்திருந்தார்கள். இலங்கை மன்னர் ஒருவர் இங்கிருந்து இரண்டு தூதுவர்களை மதீனாவிற்கு அனுப்பியதாகவும் இத்தூதுவர்களில் ஒருவர் பிரயாணத்தின்போது மரணமடைய மற்றவரே கலீபா உமர் இப்னு ஹத்தாப்(றலி) அவர்களது ஆட்சிக் காலத்தில் மதீனாவை அடைந்தார் என்றும் பேராசிரியர் எஸ். ஏ. இமாம் அவர்கள்

(*1) The Preaching of Islam By T. W. Arnold p. 363
(*2) History of Ceylon, Vol. 1 page 63

குறிப்பிட்டுள்ளார். இதன்மூலம் கி. பி. 7ம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே இலங்கைக்கும் அரபு முஸ்லிம்களுக்கும் இடையே தொடர்புகள் ஏற்பட்டு விட்டதை எடுத்துக்காட்டுகின்றது.

கி. பி. 712ம் ஆண்டில் இந்தியாமீது முகம்மதுபின் காஸீம் என்பவர் படையெடுப்பதற்கு மூலகாரணம் அரேபிய வர்த்தகர்களை இந்திய கடற்கொள்ளைக்காரர்கள் கொள்ளையிட்டமையாகும். இந்த அரேபிய முஸ்லிம் வர்த்தகர்கள் தங்களது தாய்நாட்டுக்கு இலங்கையிலிருந்து செல்லுகின்றபொழுது இந்தியக் கடற் கொள்ளைக்காரர்களினால் கொள்ளை அடிக்கப்பட்டனர். தங்களது கலீபாவான வலீத் பின் அப்துல்மலிக் என்பவரிடம் முறையிட இந்திய மன்னன் தாகிர் என்பவருக்கு இது பற்றிக் கவனிக்குமாறு கலீபா நிருபம் அனுப்பினார். கடற்கொள்ளைகள் முறியடிக்கக்கூடிய சக்தி அரசருக்கில்லாத காரணத்தினால் முகம்மதுபின் காசிம் தலைமையில் இந்தியாமீது படையொன்று அனுப்பப்பட்டு கடற்கொள்ளைக்காரர்கள் அடக்கப்பட்டதோடு இந்தியாவின் சில பகுதிகளும் முகம்மதுபின் காசிம் அவர்களின் நிர்வாகத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டது. (*1) இதில் இருந்தும் அரேபிய வர்த்தகர்கள் கி. பி. 7ம் நூற்றாண்டிலேயே இலங்கையோடு வர்த்தகத் தொடர்புகளை வைத்திருந்தார்கள் என்பது நன்கு விளங்குகின்றது. இவர்கள் தனியாக மட்டுமன்றி குடும்பங்களாகவும் இங்கு வாழ்ந்துள்ளனர்.

உமைய்யா பரம்பரையினர் ஆட்சி செய்த கி. பி. 8ம் நூற்றாண்டின் காலப்பகுதியில் இஸ்லாமிய சாம்ராச்சியம் விரிவுபட்ட காலப்பகுதியாகும். அத்திலாந்திக் சமுத்திரம் முதல் இந்துசமுத்திரம் வரையும் ஐரோப்பாவில் பிறனீஸ் மலை வரையிலும் இஸ்லாமிய சாம்ராச்சியம் விரிவுபட்டிருந்தது. வர்த்தகத்தொடர்புகளால் மட்டுமன்றி சமயத்தொடர்புகளாலும் இச்சாம்ராச்சியத்தை அமைத்தவர்கள் சிறப்பிடம் பெறுகின்றனர். செல்வமும் செல்வாக்கும் இருந்த காலப்பகுதியில் இவர்களது வளர்ச்சி சகல துறைகளிலும் மேன்மை பெற்றிருந்தது. உமைய்யாக்கள் பரம்பரையினர் குறுகிய காலம் ஆட்சி செய்தாலும் உமர்பின் அப்துல்அஸீஸ் அவர்களது ஆட்சியில் இஸ்லாமிய பிரச்சாரங்கள் பரவலாக்கப்பட்டன. வர்த்தகர்கள் வர்த்தக நோக்கத்துக்காக மட்டுமன்றி இஸ்லாமிய பிரச்சாரங்களிலும் ஈடுபாடு காட்டினர். இலங்கையிலும் இவர்கள் சமயப்பிரசாரங்களில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதற்கு போதிய ஆதாரங்கள் இருக்கின்றன. ஆரம்பத்தில் குடும்பங்களோடு வந்து குடியேறிய அறபு முஸ்லிம்கள் காலப்போக்கில் இலங்கையிலிருந்த பல இனப்பெண்களையும் விவாகம் செய்துள்ளனர். இதைவைத்துக்கொண்டே சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் அரச ஆசியக்கழகத்தில் சமர்ப்பித்த இலங்கைச் சோனக இனவரலாறு என்னும் ஆய்வுக்கட்டுரையில் இலங்கை முஸ்லிம்கள் தமிழ்ப்பரம்பரையினரே என்பதை நிரூபிக்க முயன்றார். இக்கட்டுரைக்குத் திறனாய்வு செய்த இலங்கைச் சோனகர் சங்கத் தலைவராக இருந்த ஐ. எல். எம். அப்துல் அஸீஸ் அவர்கள் "பிரித்தானிய அரசாங்க சட்டசபைக்கு ஒரு முஸ்லிம் உறுப்பினரைத் தெரிவு செய்ய எண்ணம் கொண்டிருப்பதை அறிந்தே முஸ்லிம்கள் தனியினம் அல்ல என்பதைக் காட்டுவதற்கு அவர் முனைந்தார். இதன்மூலம் முஸ்லிம் ஒருவரை சட்டசபைக்கு தெரிவு செய்யாமல் ஆக்குவது அவரது உள்நோக்கமாக இருந்தது" (*2) எனக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை முஸ்லிம்கள் உமைய்யா வம்சத்தால் நாடுகடத்தப்பட்ட ஹாஸிம் பரம்பரையினர் என்றும் அவர்கள் இலங்கையில் திருகோணமலை, மாதோட்டம், யாழ்ப்பாணம், மன்னார், கொட்டாறுமுல்லை, புத்தளம், கொழும்பு, பேருவலை ஆகிய பிரதேசங்களில் குடியேறினர் என்பதும் கௌரவ சேர். பொன் இராமநாதனின் கருத்தாகும். இக்கருத்தை முஸ்லிம் அறிஞர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராகவில்லை. ஏனெனில் உமைய்யா வம்சத்தின் ஆட்சி ஆரம்பமாவதற்குமுன்னரே இலங்கையில் அரேபிய முஸ்லிம் வர்த்தகர்கள் குடியேறியிருந்தார்கள். இந்தியாவின் ஊடாக இலங்கை வந்த அரேபிய முஸ்லிம் வர்த்தகர்கள் இலங்கையின் கரையோரப்பிரதேசங்களில் வர்த்தகத்தை மேற்கொண்டனர். கரையோரப்பிரதேசங்களை ஆட்சி செய்தவர்கள் குறிப்பாக வட, வடமேல் மாகாணங்களை ஆட்சி செய்தவர்கள் தமிழ்

(*1) Story of Islam page, 49.
(*2) சேர் பொன் இராமநாதன் அவர்களது இலங்கைச் சோனகர் இனவரலாறு என்னும் ஆராய்ச்சிக் கட்டுரைக்கான ஒரு திறனாய்வு — ஐ. எல். எம். அப்துல் அஸீஸ்

மன்னர்களாக விளங்கினர்கள். அரேபிய முஸ்லிம்களின் வர்த்தகத்தொடர்பு ஆரம்பத்தில் தமிழ் மக்களோடும், தமிழ் மன்னர்களோடும் ஏற்பட்டதால் அரேபிய முஸ்லிம் வர்த்தகர்கள் தமிழ் மொழியைக் கற்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதற்கு ஆதாரமாக மலபார் பகுதிக்கு வந்த அறபு முஸ்லிம்கள் மலையாள மொழியைக் கற்றனர் காயல் பட்டினம், இலங்கைபோன்ற பிரதேசங்களிற் குடியேறிய அரபு வர்த்தகர்கள் தமிழ் மொழியை கற்றனர் இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்புள்ள முஸ்லிம்களது மொழி வரலாற்றை எடுத்து ஆராய்கின்ற பொழுது அரபுத் தமிழின் செல்வாக்குப் பரவலாக இருப்பதை நாம் காண முடியும்.

கி பி 8ம் நூற்றாண்டில் அரேபிய முஸ்லிம்கள் கொங்கணக்கரையிலும், மாலைதீவிலும், இலங்கையிலும் சிறப்புற்று விளங்கினர் என்பதில் இருந்தும் கி பி 8ம் நூற்றாண்டின் முன்னரேயே அரபு முஸ்லிம்கள் இலங்கைக்கு வந்து விட்டனர் என சேர். அலெக்சான்டர் ஜோன்சன் குறிப்பிடுவது சரியானதாகும்.

உமையா வம்சத்தின் ஆட்சிக்குப் பின்னர் எழுச்சிபெற்ற அப்பாஸிய சாம்ராச்சியம் சுமார் 5 நூற்றாண்டுகள் மத்திய காலப்பிரிவில் மிகப்பிரசித்தம் பெற்ற சாம்ராச்சியமாக விளங்கிற்று. செல்வத்திலும், செல்வாக்கிலும் மிகப் பிரசித்தம் வாய்ந்திருந்த இந்தச் சாம்ராச்சியம் மேற்குலகையும், கிழக்குலகையும் விட பெரும் மகிமையைப் பெற்றிருந்தது. இவர்களது ஆட்சியில் யூப்பிரட்டீஸ், தைகிறிஸ் ஆகிய நதிகளுக்கிடையே இதன் தலைநகரமான பாக்தாத் அமைக்கப்பட்டது. இதன்மூலம் மத்திய கால வர்த்தகம் மிக உன்னத நிலையில் வளர்ச்சி பெற்றது. அப்பாஸிய கால ஆட்சிப்பிரிவில் அறிவியல் துறை வளர்ச்சியும் மிக உன்னத இடத்தைப் பெற்றிருந்தது. அதிகமாக வரலாற்று ஆசிரியர்களும், புவியியல் ஆய்வாளர்களும், கடலோடிகளும் இவர்களது ஆட்சிக்காலப் பிரிவில் பலநாடுகளுக்கும் பிரயாணம் செய்தனர்.

இலங்கையைப்பற்றி ஆரம்பகால வரலாற்றுக் குறிப்புகளை எழுதி வைத்துள்ள நாம் அறியக்கூடிய அரபு வரலாற்று புவியியல் ஆசிரியர்களுள் இப்னுகுர்துபா, அல் மஸ்ஊதி. இஸ்தஹ்ரி இபுனுஹவ்கல், மக்தீஸி, அபூசெய்யித் ஆகியோர்கள் அடங்குவர். இன்னும் பலரின் குறிப்புகள் எமக்குக்கிடைக்காமல் இருக்கலாம். இவை பற்றிய ஆய்வுகள் விரிவாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கையின் கரையோரப் பகுதிகளில் குடியேறிய அரபு முஸ்லிம்கள், காலப்போக்கில் இலங்கையின் உள்நாட்டுப்பிரதேசங்களை நோக்கி தங்களது வர்த்தகத்தையும், சமயப்பிரசாரங்களையும் மேற்கொண்டிருந்தனர் என்பதை அண்மையில் ஹெமாத்துக்கமை என்னும் பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட மிசாங் கல்வெட்டொன்று உறுதிப்படுத்துகின்றது. இப்னுமீரான் என்பவர் ஹிஜிரி 103ல் இங்கு அடக்கம் செய்யப்பட்டதை இம்மிசாங் கல்வெட்டு குறிக்கின்றது. ஆகவே 10ம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதிக்கு முன்னரே முஸ்லிம்கள் மலைநாட்டிலும் குடியேறிவிட்டார்கள் என்பது தெளிவாகின்றது. சிங்கள மக்கள் ஆரம்பகாலத்தில் முஸ்லிங்களை சந்தேகக்கண்கொண்டு நோக்கினாலும் காலப்போக்கில் சிங்களமக்கள் முஸ்லிம்களை மதிப்போடு கௌரவிக்கலாயினர் இதற்குப்பல காரணங்கள் இருந்தன முஸ்லிம்களின் நடை, உடை பாவனைகள், வர்த்தகம், வைத்தியம், சமயத் துறைகளில் அவர்கள் மேற்கொண்டு இருந்தவாழ்க்கை முறைகள் முஸ்லிம்கள் மீது சிங்கள அரசர்களையும்' பொதுமக்களையும் மதிப்புக் கொள்ள வைத்தன. அரசர்கள் முஸ்லிம்களது சேவையைக் கருதி மலைநாட்டுப் பிரதேசங்களில் காணிகளும், கௌரவபட்டங்களும் வழங்கினர். இன்றுப்கூட அவர்கள் வழங்கிய பட்டங்களும் மலைநாட்டில் வாழுகின்ற முஸ்லிம்கள் மத்தியில் வழக்காக இருந்துவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

### இலங்கையில் மலபார் தொடர்புகள்:

அரேபியரின் வர்த்தகம் இந்தியாவோடு நீண்டகாலத் தொடர்பாக இருந்தமையால் மலபாரில் இஸ்லாம் இலகுவில் பரவுவதற்கு காரணமாயிற்று. மலபாரீ முஸ்லிம்கள் வர்த்தகத்துறையில் ஈடுபடுவதற்கு தூண்டிய காரணங்களில் ஒன்று அரேபியத்தொடர்பு என்றுகூறினல் மிகையாகாது. மலபாரில் வாழ்ந்தவர்கள் வீர, தீரச்செயல்களில் பிரசித்திபெற்று விளங்கினர். இது பற்றி சேர் அலெக்சாண்டர் ஜோன்சன் குறிப்பிடும்பொழுது கி பி 7ம் நூற்றூண்டிலிருந்து 11ம் நூற்றூண்டு வரை சுமார் நாநூறு ஆண்டுகள் சிங்கள வரலா

றுகளில் சுதேச மன்னர்களின் அரசியல் திறமைக்கு ஒதுக்கப்பட்ட இடத்தை விட மிகப்பிரதானமான பகுதி மலபாரிகளின் வீரதீர செயல்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றது. பிரதம அமைச்சரின் காரியாலயம் உட்பட எல்லாப்பிரிவுகளிலும் குறிப்பாக அரச பதவிக்கு தகமைபெறும் வேட்பாளர்களை தெரிவுசெய்யும் சக்தியும் இவர்களுக்கு இருந்தது. சிங்கள மன்னர்களால் இவர்களை அநுராதபுர பிரதேசங்களில் இருந்து வெளியேற்ற முடியாமலிருந்தது. மலபாரிகள் தமிழ் பரம்பரையினர்களாகவும், அரபு மலையாள முஸ்லீம்களாகவும் விளங்கினர். சிந்துபாத் என்னும் கடற்பிரயாணி இலங்கைக்கு வந்தபொழுது அவர்களை வரவேற்றவர்கள் மலபாரிகள் என்று குறிப்பிடுகின்றார் மலபாரிகளில் ஒருவருக்கு அரபுமொழி பேசத்தெரிந்திருந்தது என்றும் குறிப்பிடுகின்றனர். அவர்கள் வந்தபோது மலபாரிகள் தங்களது நெற்காணிகளுக்கு நீர் பாய்ச்சிக்கொண்டிருந்தனர். சிந்துபாத்தின் இந்தக்கூற்றின் மூலம் மலபார் முஸ்லிம்கள் இங்கு அதிகமாக வாழ்ந்தனர் என்பதையும் அவர்கள் விவசாயத்துறையிலும் ஈடுபாடுகொண்டிருந்தார்கள் என்பதையும் விளங்கிக்கொள்ள முடிகின்றது.

### இலங்கையும் காயல்பட்டிணத் தொடர்பும்:

தென்இந்தியாவில் காயல்பட்டினமும் முஸ்லிம்களின் பிரதான வர்த்தகப்பிரதேசமாக விளங்கியது. காயல்பட்டினத்திற்கும், அரபுநாடுகளுக்கும் இடையே மிக நீண்ட தொடர்புகள் இருந்து வந்துள்ளன. துருக்கிய பேரரசு எழுச்சிபெற்ற காலத்திலும் முகலாய சாமராச்சியம் சிறப்புப் பெற்றிருந்த காலத்திலும் காயல்பட்டின முஸ்லீம்கள் வர்த்தகத்திலும் சமயப்பிரசாரங்களிலும் அதிக ஈடுபாடு கொண்டு விளங்கினர் அவர்களும் இலங்கையோடு மிக நெருங்கிய வர்த்தகத்தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டனர். வரலாற்று ரீதியாக இத்தொடர்புகளை நாங்கள் நுணுகி ஆராய்கின்ற பொழுது முஸ்லிம்களின் தொடர்புகள் தமிழ்மக்களுடன் இணைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. மலபாரில் இருந்துவந்த முஸ்லிம்களும் தென் இந்தியாவின் காயற்பட்டிணம் உட்பட ஏனைய பிரதேசங்களிலிருந்து வந்தவர்களும் தமிழ் மொழியோடு நெருங்கிய உறவு கொண்டிருந்தமையே முஸ்லிம்களின் தாய் மொழி தமிழ் மொழியாக விளங்கக் காரணமாயிற்று. குறிப்பாக முஸ்லிம்கள் மொழியைவிடவும் இனத்தைவிடவும் சமயத்திற்கு முக்கியத்துவம் அளிக்கின்ற காரணத்தினால் முஸ்லிம்கள் வாழுகின்ற பிரதேசங்களில் உள்ள மொழிகளை இலகுவில் கற்றுக்கொள்ளுவது சுலபமாயிற்று. இதற்கு ஆதாரமாக இந்தியா, மலாயா, இந்தோனேசியா ஆகிய பிரதேசங்களில் குடியேறிய அரபு முஸ்லிம்களின் வரலாற்று சான்றுகளிலிருந்து இதனை நாம் தெரிந்து கொள்ளலாம்.

இலங்கையை ஆண்ட மன்னர்கள் இலங்கையில் அவர்களுடைய அரசசபையில் முஸ்லிம்களுக்கு அளித்துள்ள உயர் பதவிகள் பற்றி அல்இத்ரீஸி என்னும் வரலாற்றுப் புவியியல் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். இலங்கை அரசருக்கு ஆலோசனை கூறும் சபையில் நான்கு முஸ்லிம்கள் இடம் பெற்றிருந்ததாக அவர் குறிப்பிடுகின்றார். கி. பி. 13ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையில் ஆட்சி புரிந்த புவனேகபாகு மன்னன் எகிப்தோடு நெருங்கிய உறவுகளை வைத்திருந்தார், எகிப்துக்கும் இலங்கைக்கும் இடையே நட்புறவை வளர்ப்பதற்கு தூதுவர்களின் பரிமாற்றத்தின்மூலம் இம்மன்னன் வழிவகுத்தான். கி. பி. 1283ம் ஆண்டு இவனால் எகிப்துக்கு அனுப்பப்பட்ட தூதுக்குழு ஒன்று இலங்கையும் எகிப்தும் ஒன்றே என்னும் கருத்தை வலியுறுத்தி நட்புறவின் அவசியத்தை இக்குழு வலியுறுத்தியது. இதன்மூலம் சிங்கள மன்னர்களுக்கும் அரபுநாடுகளுக்கும் இடையே 13ம் நூற்றாண்டுகளுக்கு முன்னரே தொடர்புகள் ஏற்பட்டிருந்ததை மீண்டும் விளங்கிக் கொள்கின்றோம்.

கி. பி. 14ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்த இபுனுபதூதாவின் குறிப்புகள் முக்கியம் பெறுகின்றன. இபுனுபதூதா இலங்கைக்கு வந்தபொழுது கரையோரப்பிரதேசங்களின் ஆட்சி குறிப்பாக இலங்கையில் வடமேற்குப்பிரதேசங்கள் தமிழ் மன்னர்களது ஆணைக்குட்பட்டிருந்தது. இபுனுபதூதா தனது யாத்திரையில் ஆதம் (அலை) அவர்களது பாதம் பதிந்துள்ள ஆதம் மலையைத் தரிசிக்கவும் நாட்டம் கொண்டிருந்தார். ஆரியச்சக்கரவர்த்தி மன்னன் தனக்கு அளித்த ஒத்துழைப்பின்மூலமாக இம்மலையைத் தரிசித்துச் சென்றார். இவரது குறிப்புகள் மூலம் இலங்கையில் பல பாகங்களிலும் முஸ்லிம்களின் குடியேற்றங்கள் காணப்பட்டன. ஆதம் மலைக்குச் செல்லும் பாதைகூட முஸ்லிம் யாத்திரிகர்களால் செப்பனிடப்பட்டிருந்தது. இலங்கையில் பல இடங்களிலும் முஸ்லிம்களின்

புனித ஸ்தலங்கள் இருந்துள்ளன. குருநாகல்போன்ற பகுதிகளில் இரத்தினக்கற்கள் அதிகமாக இருந்தன. சிங்கள மக்கள் முஸ்லிம் யாத்திரிகர்களை அன்போடு உபசரித்துள்ளார்கள். செய்க் அபூ அப்துல்லா ஹஸீராஸி அவர்களின் மகிமை காரணமாக சிங்கள மக்கள் முஸ்லிம்களின்மீது அதிக மரியாதை கொண்டிருந்தார்கள். அத்துடன் சிங்கள மன்னர்கள் கூட செய்க் உதுமான் ஷீராஸி அவர்களின் பள்ளிவாசலை தரிசிக்கும் வழமை கொண்டிருந்தனர். இவரது குறிப்புகளில் இருந்து கரையோரப்பகுதிகளில் மட்டுமன்றி இலங்கையின் மத்திய பிரதேசங்களிலும் முஸ்லிம்கள் பெற்றிருந்த உயர் ஸ்தானத்தை புரிந்து கொள்ளலாம்.

இலங்கையைத் தரிசித்த பிரசித்தம் வாய்ந்த ஆத்மஞானிகளில் ஒருவரான முஹிய்யதின் அப்துல்காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் இலங்கைக்கு சமயப்பிரசார நோக்கமாக வந்து தரித்துச்சென்ற இடமே தப்தர்ஜெய்லானி முஸ்லிம்களால் போற்றப்படுகின்றது. இலங்கையின் பலபகுதிகளிலும் அமைந்து காணப்படும் ஸியாரங்கள் இஸ்லாமிய பிரச்சாரத்தில் ஈடுபட்ட ஆத்மஞானிகளின் மேன்மையினை விளக்குவனவாக அமைந்துள்ளன. இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றுப் பாரம்பரியங்கள் அரசியல், சமய, பொருளாதார, சமூகத்தொடர்புகளோடு தொடர்புபட்டிருப்பது இதன்மூலம் தெளிவாகின்றது.

## இலங்கையில் மலாயத் தொடர்புகள் :

இலங்கை முஸ்லிம்களின் குடிசனத்தொகையில் சுமார் அரைலட்சம் பேர் மலாய முஸ்லிம்களாக உள்ளனர். இவர்கள் கி பி 1247ல் சந்திரபானு இலங்கைமீது மேற்கொண்ட படையெடுப்பின்போது துருக்கிய சாம்ராச்சியம்பலம் பெறுவதற்கு ஒத்துழைத்த மலாய முஸ்லிம்கள் இலங்கைக்கு வருவதோடு ஆரம்பமாகின்றது. இங்கு வந்த மலாயர்கள் ஆரம்பத்தில் படைவீரர்களாக வந்தாலும் காலப்போக்கில் இவர்கள் தங்களது குடும்பங்களோடு இலங்கையில் குடியேறி வாழ்ந்தனர். ஐரோப்பியரின் வருகைக்குப்பின்னரே மலாயர்கள் மலாய, ஜாவா பகுதிகளிலிருந்து இங்கு வந்து குடியேறினர். இலங்கையில் பல பாகங்களிலும் ஏனைய முஸ்லிம்களோடு கலந்து வாழும் இவர்கள் குறிப்பாக படைச்சேவையில கடமையாற்றுகின்றூர்கள். போர்த்துக்கீசர் கண்டியைக் கைப்பற்றுவதற்கு பலதடவைகள் முயன்றும் அவர்களால் முடியாமல் போகவே யானை பிடிப்பதில் வல்லவர்களாக விளங்கிய இவர்களை கண்டியில் நடைபெறும் "பெரஹரா" காலத்தில் அரசனையும் யானைகளையும் பிடிப்பதற்கு போர்த்துக்கீசரால் பணிக்கப்பட்டனர். கண்டிக்குச் சென்ற இப்போர் வீரர்கள் பெரஹரா காலத்தில் அழகிய சிங்களப்பெண்களை மணந்துகொண்டு மலைநாட்டின் வெவ்வேறு பகுதிகட்குச் சென்று வாழ முற்பட்டனர். அம்பாந்தோட்டைப் பகுதிகளிலும் இவர்கள் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் உப்பு எடுத்துச் செல்லும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டனர். நகரங்களில் இவர்களின் பெரும்பகுதியினர் வாழ்ந்தனர். யாஎல, யாவத்த, குருநாகல், கண்டி பதுளை, கின்னியா போன்ற இன்னும் பல இடங்களில் பள்ளி வாசல்களும் இவர்களால் கட்டப்பட்டுள்ளன. தங்களது வீட்டு மொழியாக மலாய மொழியினை இவர்கள் அதிகமாகப் பேசினாலும் தேசிய மொழிகளையும் இவர்கள் பழக்கத்தில கொண்டுள்ளார்கள். படைச்சேவையில் கடமையாற்றுவதால் பலரிடம் மார்க்க அனுஷ்டானங்கள் குறைவாகக் காணப்பட்டாலும் சமயத்துறையில் ஈடுபட்டவர்கள் பலர் ஆத்மஞானிகளாக மாறியிருப்பதையும் குறிப்பிடல் வேண்டும். இவ்வித ஆத்மஞானிகளுள் ஒருவராக விளங்கிய ஆலி அப்பா எனப்பவர் கின்னியாவுக்கு அண்மையில் சினன் வாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை முஸ்லிம்களோடு இணைந்து வாழும் இவர்கள் திருமணத்தொடர்புகள் மூலமாக முஸ்லிம்களோடு இணைந்து வாழுகின்றனர்.

## மேமன் போரா சமூகங்கள் :

கடந்த இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னரே பாகிஸ்தான் இந்தியா உட்பட மத்திய ஆசியாவின் பலபகுதிகளிலுமிருந்து வர்த்தக நோக்கமாக இவ்விரு சமூகத்தினரும் இலங்கையிற் குடியேறினர். கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் போன்ற முக்கியமான நகரங்களிலும் ஏனைய நகரப் பகுதிகளிலுமுள்ள முஸ்லிம்கள் வர்த்தகத் துறையில் ஈடுபட்டனர். பெருந் தொகைத் தொழிற்சாலைகளுக்கும், உற்பத்தி நிறுவனங்களுக்கும், வர்த்தக நிறுவனங்களுக்கும் உரிமையாளர்களாக விளங்கினர். 'பாய் மார்கள்' என இவர்கள் அழைக்கப்பட்டாலும் மேமன் சமூகம் இலங்கை முஸ்லிம்க

ளோடு ஓரளவு தொடர்புகளை வைத்துக் கொண்டுள்ளது. போரா சமூகம் இலங்கை முஸ்லிம்களோடு தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதில் குறைவு காணப்படுகின்றது. இவர்கள் தனிச் சமூகமாகவே வாழ விரும்புகின்றனர்.

இந்திய பாகிஸ்தானிய பிரஜா உரிமைச் சட்டத்தின் கீழ் இவர்களிற் பலர் சொந்த நாட்டிற்குச் சென்று விட்டனர். பிரஜா உரிமை பெற்றவர்கள் இப்பொழுதும் வர்த்தகத்துறையில் ஈடுபட்டு நகரங்களில் வாழ்கின்றனர். நகர ஆக்கங்களில் இவர்களுக்கும் முக்கிய பங்குண்டு.

## நகர ஆக்கங்களும் முஸ்லிம்களும்

நகர ஆக்கங்களில் முஸ்லிம்கள் மேற்கொண்ட பங்கு மிகவும் முக்கியமானவையாகும். கி. பி. 7ம் நூற்றாண்டுக்கும் கி. பி. 15ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கையின் வர்த்தகத்தின் பெரும் பகுதி முஸ்லிம்களின் கைகளிலேயே தங்கி இருந்தது. வர்த்தக நகரங்களை உருவாக்குவதிலும், அழகிய கட்டடங்களை அமைப்பதிலும், தொழிற்சாலைகளை அமைப்பதிலும், தோட்டங்களை உருவாக்குவதிலும், கைத்தொழில்களை வளர்ப்பதிலும் பங்கு கொண்ட முஸ்லிம்கள் விவசாய நிலங்களுக்கும், பெருந்தோட்டங்களுக்கும் உரிமையுடையவர்களாக இருந்தனர்.

போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரின் வருகையின் பின்னர் இலங்கை முஸ்லிம்களின் வர்த்தகத்திலும், கைத்தொழிலிலும், தோட்டச் செய்கையிலும் பாதகமான சூழ்நிலைகள் ஏற்பட்டன. அத்துடன் இவர்களால் மேற்கொள்ளப்பட்ட மதமாற்ற முயற்சிகளுக்கு முஸ்லிம்கள் உட்படாத காரணத்தினால் கல்வித்துறையிலும், பொருளாதாரத்துறையிலும், தொழில்வாய்ப்புகளிலும் ஏனைய சமூகங்களை விட பின் தங்கினர். ஐக்கியம் வாய்ந்த சமூகமாக விளங்கிய காரணத்தினால் தங்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை இறை நப்பிக்கையை முன்வைத்து உறுதியாக வாழ்வதால் ஏனைய சமூகங்கள் மத்தியில் தனித்துவம் வாய்ந்த சமூகமாகவும், ஏனைய இனங்களோடு நல்லுறவோடு வாழும் சமூகமாகவும் வாழுகின்றார்கள்.

இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் தீய விளைவுகளை அகற்றுவதில் பல முஸ்லிம் அறிஞர்கள், சிந்தனையாளர்கள், கல்விமான்கள், பல இயக்கங்கள் ஆகியன ஈடுபட்டுழைக்கின்றன. அத்துடன் இவர்களால் பல சமூக அபிவிருத்தித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டும் வருகின்றன.

இலங்கை முஸ்லிம்களை இலங்கைச் சோனகர், இந்தியச்சோனகர், மலாயர் எனப்பாகுபடுத்தும் அழைப்புமுறை மாற்றப்பட வேண்டியது அவசியம். போர்த்துக்கீசரால் இடப்பட்ட ''மூவர்ஸ்'' என்னும் சொல்லை தொடர்ந்தும் முஸ்லிம் சமூகத்திற்கு பிரயோகித்து வருவது முஸ்லிம்களை பாகுபடுத்தும் அமைப்பாகும். பொதுவாக எல்லோரையும் இலங்கை முஸ்லிம்கள் என்றே அழைக்கப்பட வேண்டுமென பல சிறந்த சிந்தனையாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றுப் பாரம்பரியத்தில் புதிய அத்தியாயம் ஒன்று உருவாக நேர்மையான வரலாறு அவசியமாகின்றது இலங்கையில் வாழும் முஸ்லிம் சமூகம் வரலாறு அற்ற சமூகம் என்ற இழிநிலை மாறவேண்டுமென முஸ்லிம் அறிஞர்கள் சிந்திக்கின்றனர். இத்துறையில் பணியாற்ற 1976ம் ஆண்டு இலங்கைப்பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்ட அறபு இஸ்லாமிய நாகரிகத்துறை ஆக்கபூர்வமான நடவடிக்கையினை மேற்கொண்டு செயற்படுகின்றது. மாகாணரீதியில் முஸ்லிம்களின் வரலாற்றினை ஆராய முற்பட்டுள்ள இத்துறையினர் வடமாகாண முஸ்லிம்களின் வரலாற்றை வெளியிட்டு கருத்தரங்கினை நடாத்தி மேலும்பல மேலதிகத் தகவல்களைச் சேர்த்துள்ளனர். ஏனைய மாகாணங்களைப் பற்றிய ஆய்வுகளையும் வெளியிட்டுகருத்தரங்குகளை நடாத்தி முழுமையாக தகவல்களைப் பெற்றபின்னர் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை தனி நூலாக வெளியிடத் தீர்மானித்துள்ளனர்.

''இவ்வாய்வுக் கட்டுரை 1978ம் ஆண்டு ஜனவரி மாதம் 13, 14, 15ம் திகதிகளில் நடைபெற்ற அகில உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மகாநாட்டுக்கு இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாக அறபு இஸ்லாமிய நாகரீகத்துறையின் சார்பில் மௌலவி கே. எம். எச். காலிதீன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது''

*Donated by*

# P. M. THAIYIB HADJIAR

11, FREDICA ROAD,
**COLOBMO - 3**

# SIFANI JEWELLERS LTD.

DEALERS IN PRECIOUS STONES
AND QUALITY JEWELLERY

**225, Galle Road, Bambalapitiya, Colombo-4**

Phone: **83180** Cables: **Bluestar**

Branches:

* 24, Central Finance Bldg, Dalada Veediya, Kandy. Phone: **3135**
* 371, Galle Road, Hotel Sapphire Bldg. Wellawatte, Phone: **83309**
* Palm Garden Hotel, Beruwala. Phone: **048 – 5263**
* Hotel Lanka Oberol, Colombo – 3 Phone: **20001**
* Confifi Beach Hotel, Beruwala· Phone: **048–5217**

*With Best*

*Wishes and Congratulations*

*From*

# IFHAM GEM TRADERS,

**15A, STADIUM ROAD,**

**BERUWELA.**

*To*

***University***

***Muslim***

***Majlis***

**JAFFNA CAMPUS**

# இன்கிலாப்

இன்கிலாப் என்பது புரட்சி. புரட்சி என்பதற்கு பலர் பலவிதமாகப் பொருள் கொண்டாலும், வழமையான வாழ்க்கைப் போக்கில் இருந்து முழுமையான ஒரு மாற்றத்தினை நிகழ்த்துவதையே புரட்சி எனலாம்.

புரட்சி என்பதனைக் கேட்டவுடனேயே ஆயுதங்களைப் பிரயோகித்து இரத்தத்தினைச் சிந்தி ஒரு இலட்சியத்தினை அடைதல் என்ற எண்ணம் பலருக்கும் எழலாம். ஆனால் இஸ்லாம் தோற்றுவித்த புரட்சியோ அடிப்படையில் ஒரு கருத்துப் புரட்சி. ஆண்டாண்டு காலமாக ஒரு சமுதாயத்தில் ஊறிக் கிடந்த கருத்தை குறிப்பிட்ட சில ஆண்டுகளில் மாற்றியமைத்ததன் மூலம் அம்மக்களின் முழு வாழ்க்கை முறையையுமே இஸ்லாம் மாற்றியமைத்தது.

இஸ்லாம் என்பது ஒரு மதத்தின் பெயரோ, முஸ்லீம்கள் என்பது ஒரு தனி இனத்தின் பெயரோ அல்ல; உண்மையில், இஸ்லாம் ஒரு புரட்சிமயமான சித்தாந்தமும், வாழ்க்கைநெறி நியதியும் ஆகும். அது உலக முழுவதன் "சமூகஅமைப்பை" (Social Order) மாற்றி அமைத்துத் தன்னுடைய சித்தாந்தம், நெறி நியதிக்கேற்ப அதை நிர்மாணிக்க விரும்புகின்றது. தான் விரும்பும் புரட்சித் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதன் பொருட்டு, இஸ்லாம் உருவாக்குகின்ற சர்வதேச புரட்சி இயக்கத்தையே (Internaitonal Revolutionary Movement) முஸ்லிம்கள் என்னும் சொல் குறிக்கின்றது.

இந்த ரீதியில் புரட்சிகரமான திட்டம் அமுல் நடத்தப்படவேண்டும் என்ற கருத்துணர்வை ஏற்படுத்தவே நாம் "இன்கிலாப்" என்பதை எமது முதல் சஞ்சிகையின் பெயராக தெரிவு செய்திருக்கின்றோம். ۞

# INQILAAB

*"INQILAAB" is revolution. Revolution means change for better. However these days when the term revolution is mentioned it tends to create the impression of a change through bloodshed.*

*Islam does not believe in bloody revolutions. The revolution brought about by Islam was basically a change of heart. Through this change it revolutionised the ideas, concepts, thought and action of the people who came into contact with it. This change however was not confined to any particular field of life. Islam being an* **International Revolutionary Movement** *it changed for the better every aspect of life. The Islamic revolution was so unique that it has no parallel in the whole history of the human race.*

*Today man is fed up with method of trial and error. Every man made system has been tried out and proved to be a flop. Man, in his arrogance, has pushed God out of his path of life and rejected the way of life chalked out by God for man. The enevitable result everywhere is chaos and confusion, stress and strain.*

*It is time now for the reenactment of the Islamic revolution, if the world, threatned by a third conflagration, is to be saved from total annihilation. It is with this in view that we have chosen the title, "INQILAAB" for our Magazine. We hope that the material contained in "INQILAAB" will be a source of inspiration.* ۞

சிறுகதை

# சீர்திருத்தவாதிகள்

**P. C. பக்கீர் ஜஃபார்**
பௌதீக விஞ்ஞானம்,
இரண்டாம் வருடம்

அந்த அழகிய சின்னஞ்சிறு பூந்தோட்டத்தில் இருந்து இனிய கீதமொன்று மிதந்துவந்துகொண்டிருந்தது. சிறிய பூந்தோட்டமாக இருந்தாலும் அழகாக வெட்டிவிடப்பட்ட செடிகளும், பூத்துக் குலுங்கும் மலர்களும் அழகுணர்ச்சியுள்ள எவரையும் கவராமல் இருக்கமுடியாது இது ரோஜாப்பூக்கள் பூக்கும் காலம்போலும், ரோஜாக்கள் வகை வகையாகக் கண்சிமிட்டிக் கொண்டிருந்த அந்த அதிகாலைவேளையில் தோட்டமெங்கும் ரோஜாக்களின் மெல்லிய மணம் கமழ்ந்துகொண்டிருந்தது. அத்தோட்டத்தின் மத்தியிலே போடப்பட்டிருந்த சிமந்துக்கட்டின் மீது தன்னை மறந்து கண்களை மூடி தியானத்தில் அமிழ்ந்திருக்கும் முனிவரைப்போன்று. அந்தக் காலைவேளையின் இனிமையை முற்றாக அனுபவித்துக்கொண்டு ஏதோ ஒரு ராகத்தில் பாடிக்கொண்டிருந்தாள் சரிஞ. அப்பூந்தோட்டத்தைத் தொடர்ந்து அழகிய ஒரு கல்வீடு. கதவு திறந்து கிடந்தது. பூந்தோட்டத்தில் இருந்து பார்த்தால் தூரத்தில், வீட்டினுள் மெல்லிய சப்தத்தில் ஓதிக்கொண்டிருக்கும் தம்பி லெப்பை ஹாஜியாரைக் காணலாம். அவர் தமது ஸுபஹுத் தொழுகையைத் தொடர்ந்து வழமையாக ஓதி முடிக்கும் ஒரு 'ஜுஸ்உ' குர்ஆன் இன்னும் ஓதிமுடிக்கவில்லை அவர் அமர்ந்திருந்த விலையுயர்ந்த 'முஸல்லா' வின் மீது சற்றுமுன் அவரின் கையில் இருந்த ''தஸ்பீஹ்'' கோர்வை அனுதரவாகக் கிடந்தது. அவருக்கென்ன? இருப்பதோ போதியஅளவு சொத்து. ஒரே ஒரு மகள் சரிஞ. சரிஞவின் எதிர்காலத்தைப் பற்றி பெரும் திட்டமே போட்டிருந்தார்.

இன்னும் சரியாக விடியாத காலைப் பொழுதில், பனிமூட்டத்தைக் கிழித்துக் கொண்டு ஒரு மெலிந்த உருவம் ஹாஜியாரின் வீட்டை நோக்கிவருகின்றது. அவ்வுருவத்தின் நடையில் இருந்த வேகமும் அவசரமும் ஏதோ முக்கியமான காரியமாகவே வருகின்றது என்பதை வெளிக்காட்டின, இப்பனிப்புகாரின் காலைக்குளிர் அப்பெண் உருவின் உடம்பைத் தாக்கியதாகத் தெரியவில்லை. பனியிலும், வெய்யிலிலும் அடிபட்ட உடம்பு, மரத்துப்போய் விட்ட இச்சதைப்பிண்டம் இந்த மூடுபனியைக் கண்டா நடுங்கப்போகின்றது? இருந்தாலும், முஸ்லிம் பெண்மணிகளுக்கே உரித்தான மூடிமறைத்தலோடு முக்காடிட்டுவந்த அப்பெண்ணுருவம் தோட்டத்தில் பாடிக்கொண்டிருந்த சரிஞவைக் கண்டதும் ஒருகணம் தயங்கி நின்றது மெல்ல இருமிக்கொண்டது தோட்டத்தில் நிரம்பி இருந்த இனியகானம், தந்தியறுந்த வீணை போன்று திடீரென்று நின்றது. சரிஞவின் கண்களில் மண்டிக் கிடந்த அந்த இன்பக்கிறக்கம் திடீர் என்று மறைந்தது அவள் முகத்தில் தோன்றிய அம்மெல்லிய கோணல் அவளின் அதிருப்தியை வெளிக்காட்டியது. வந்த உருவத்தை நிமிர்ந்து பார்த்ததும் அந்தக் கோணல் இன்னும் சற்றுப் பெரிதாகியது. சட்டென்று முகத்தைத் திருப்பிக்கொண்டாள். வந்த பெண் மணியின் முகத்தை உற்று நோக்காமலேயே சரிஞ பேசினுள்.

''மாமி! வாப்பா ஓதிக் கொண்டிருக்காங்க. உங்களுக்கு எத்தனை தரம் சொல்றது? நேற்று நீங்க வந்து செய்த தொந்தரவு பொறுக்க இயலாமல்தான இன்றைக்கு வரச்சொல்லி வாப்பா சொன்ஞங்க. காசெண்டா இவ்வளவு நப்புசு இருக்கப்படாது மாமி! எட்டுமணிக்குப் பிறகு தான் வாப்பா பிச்சைக்காரங்களுக்கென்று 50 ரூபா எண்ணிவைப்பார். ஒருமாதத்துக்கு, வாற பிச்சைக்காரங்களுக்குக் காணும், அதிலதான் பத்து ரூபா தருவம். சுணங்கி வாங்க''.

ஏக்கத்துடன் கேட்டுக் கொண்டிருந்த அப்பெண்ணின் கண்களில் இருந்து கண்ணீர் பொல பொல வென்று வடிகின்றது நிமிர்ந்து நின்ற இந்த உடம்பு சற்றுக் கூனியது போன்ற உணர்வு முள்ளின் மேல் நிற்பது போன்ற வேதனை. நெஞ்சில் மட்டுமல்ல இருதயத்திலும் பாய்ந்து ஊடுருவிக்கொண்டு சென்ற சொல்லம்புகளின் வேதனை தாங்கமாட்டாமல் அப்பெண் புழுவெனத் துடித்தாள். வார்த்தைகள் ஏக்கத்தினிடையே துண்டுதுண்டாக வெளிப்பட்டன.

''அம்மா! போதும்மா என் உடன் பிறப்பின் மகளே! நான் பிச்சைவாங்க வரல்லடிதாயே! கடனுகத்தான் ஒருபத்து ரூபாகேட்டேன். எனக்கு, என்ர ரோசமற்ற தனத்துக்குச் செருப்பாலதான் அடிக்க வேண்டும். உன்ட வாப்பாக்கிட்ட இவ்வளவு காலத்துக்கு ஒரு சதம் கேட்டிருக்க மாட்டேன் ஏதோ, நானும் என்ர மகனும் பிழைக்க என்ர அப்பச்சட்டி போதும். என்ர தலையெழுத்து மகன் அன்வர் ஆறரை மணிபஸ்ஸிலே சோதனையெழுதப் போகவேணும், அதுக்குப் பத்துரூபா உங்கிட்ட கடனுகக் கேட்கவேணும், இப்படி அவமானப் படவேண்டும் எனறெல்லாம் அல்லாஹ்வின் நாட்டம் இருக்கு. உங்கட பிச்சைக் காசு வேண்டாம் என்று வாப்பாக்கிட்ட சொல்லு'' அப்பெண் வந்தவேகத்தில் 'விசுக்'கென்று திரும்பினுள். அதிலும் வேகமாகவீட்டிற்குள் வந்தாள் சரினு. அவளின் கண்களில் கோபாக்கனி கொப்பளித்துக் கொண்டிருந்தது. சற்றுமுன் அம்முகத்தில் காணப்பட்டசாந்தம், குளிர்ச்சி எல்லாமே மாயமாய் மறைந்துவிட்டன. கோபத்தின் அகோரத்தினுல் அவளின் உடம்பு மெல்ல நடுங்கிக்கொண்டிருந்தது ஆத்திரத்துடன் ஹாஜியாரின் அருகே வந்தவள் 'வாபபா!' என்று கீச்சுக்குரலில் கத்தினுள். ஹாஜியார் திடுககிட்டு நிமிர்ந்தார். மகள் நின்ற கோலம் அவரை மேலும் திடுக்கிடவைத்தது. குர்ஆனை வேகமாக முத்தமிட்டு மூடிவைத்தார். முஸல்லாவைச் சுற்றி ஒரு புறம் வைத்துவிட்டு மகளின் அருகேவந்தார்.

''உம்பா சரினு, என்ன நடந்திச்சு? ஏன் இப்படி பேய் அறைஞ்சது போல நிற்கிறே?''

''ஆமாம்பா, பேயில்லே, பிசாசு விடியற் காலத்தில் வந்து அறைஞ்சு போட்டு போகுது''

''என்னம்மா புதிர்போர்றே? விளக்கமாகச் சொல்லேன். எந்தப் பிசாசு வந்து எப்படி அறைஞ்சுபோட்டுப் போகுது'' ஹாஜியார் பதறினுர். இந்த அதிகாலை வேளையில் மகளுக்கு என்னநேர்ந்தது என்பதை அவரால் புரிந்துகொள்ளமுடியவில்லை. அவரைப் பொறுத்தமட்டில் சரினுவின் கண்ணுல்வரும் ஒவ்வொரு துளிக் கண்ணீரும் அவரின் கண்ணுல் வரும் இரத்தத் துளிகள். இருதயததில் இருந்து நேரடியாகக் கொட்டும் செந்நீர் ஆறு.

''நேற்று உங்கட அருமைத் தங்கச்சி வந்திருந்தா. வராதவ வந்திருக்கா என்று நம்முட அந்தஸ்தையும், கௌரவத்தையும் விட்டுப்போட்டு பாயைப்போட்டேன். அவவை வாசலில் வைத்து பேசியனுப்பாததுதான் நான் செய்த பிழை. ஏதோ அவட அருமைப் புத்திரன் அந்தப் பரட்டைத்தலையன் சோதனை எடுக்கவேணுமாம் காசி பத்துருபா கடனுகக் கேட்டா இண்டைக்கு நீங்கதார அந்தப் பிச்சைக் காசில பத்து ரூபா கொடுப்போமெண்டு இண்டைக்கு வரச்சொன்னேன் விடிஞ்சும் விடியாததுமாக வந்து தொந்தரவு பண்ணினு. சுணங்கி வாங்கமாமி என்று சொன்னேன். என்ரஆண்டவனே! அவடவாயால வெடிச்ச கதையை நீங்க கேட்டிருக்க வேணும் ஏதோ ''பன்னீரால வாய்கொப்பளிச்சு, அத்தரில் குளிச்சு, பட்டுப்புடவை உடுத்துப் பவனி''வார மகாராணியாட்டம் பேசிப்போட்டுப் போரு ஒரு நேரம் தின்ருல் மற்றநேரம் இன்கச் சோறு இல்லாதவங்களெல்லாம் இப்ப பேசவந்துட்டாங்க'' பேசிமுடிந்ததும் சரினுவுக்கு மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கியது. அழுகை விம்மலுடன் வெடித்துப் பறந்தது கண்கள் கண்ணீரை மழையெனப் பொழியவாரம்பித்தன.

இதைக் கண்ணுற்ற ஹாஜியாருக்கு உடம்பெல்லாம் ஆத்திரத்தால் படபடத்தது. அப்படியே பக்கத்தில் இருந்த நாற்காலியில் அமர்ந்துவிட்டார். 'யா அல்லாஹ்! இந்தத் தரிந்திரப்பீடையை எனகுத் தங்கையாப் பிறக்கவச்சு என்னை ஏன் சோதிக்கிருய்?'' என்றவாறு ''டப் டப்'' என்று இரண்டுகைகளாலும் தலையில் அடித்துக் கொண்டார்.

''உம்மா சரினு! அவளுக்கு இங்க பச்சைத் தண்ணியும் கொடுக்கப்படாது. அவளுக்கும் எனக்கும் உறவு அற்றுப்போய் எத்தனையோ வருஷங்களாச்சு. எனக்கு இந்த ஊரில் இருக்கிற கௌரவம், மதிப்பு எல்லாத்தையும் கெடுக்கப் பார்க்கிருள். தங்கச்சைக் கவனிக்கிறதில்லே என்று எனக்கு கொஞ்ஞ கவாலிகள் ஏசித்திரியிருங்கள். அவங்கவைக்கிற நெருப்புக்கு இவள் எண்ணை ஊத்துருள் நான் பெற்ற பிள்ளையைச் சீரும் சிறபபுமாக வைக்கவே எனக்கிட்ட இருக்கின்ற சொத்துக்காணுது. எங்க வாப்பா உம்மா பெத்துப் போட்ட பிள்ளைகளையும் கவனிக்கணுமெண்டு'மார்க்கத்தில் சொல்லல்ல''

வார்த்தைகளைப் பொறிகளாகக் கக்கினார் தம்பிலெப்பை ஹாஜியார். அவரின் தொழுகைகள், வணக்கங்கள் எல்லாம் ஊரில் பிரசித்தம் ஆதலினால், யாரும் ஹாஜியாரின் பேச்சைக் கேட்டிருந்தால், இதுதான் 'இஸ்லாம்மார்க்கம்' என்று எண்ணியிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. இன்று ஆட்களின் செயல்களைப் பார்த்து மார்க்கத்தை எடைபோடுகின்றார்களே ஒழிய, மார்க்கத்தைப்பார்த்து ஆட்களை எடைபோடுவது இல்லை.

தந்தையின் சீற்றத்தைக்கண்டு சரீனாவின் உச்சி குளிர்ந்தது. அவளின் கோபம் சூரியனைக் கண்ட பனிபோல மறைந்து விட்டது. தந்தையின்மீது மேலதிக பற்றும் உண்டாகிவிட்டது.

''வாப்பா மணி ஆறரையாகப் போகுது. குளிச்சிட்டுவாங்க சுடுதண்ணி வைத்திருக்கேன்'' என்று அன்புக்கட்டளை இட்டவண்ணம் குசினிப்பக்கம், துள்ளியோடினாள். தம்பிலெப்பை ஹாஜியார் ''அல்லாஹ்அக்பர்''என்று கூறிக்கொண்டே எழுந்தார். இன்னும் சற்று நேரத்தில், கொதிநீரை அரவணைத்த குளிர்நீரும் மென்சூட்டுநீராகி ஹாஜியாரின் உடல்சூட்டைத் தணித்துக்கொண்டிருக்கும். ஆனால் அடுத்தவீட்டில், அடுப்பங்கரைச் சூட்டிலே உழன்றுகொண்டிருக்கும் அவ்வேழைத்தாயாரின் உள்ளம் அனன்று கொண்டிருப்பதைக் கலங்கிய கண்களுடன் பார்த்துக்கொண்டிருக்கும் அன்வரின் இரத்தம் கொதித்துக் கொண்டிருக்கின்றது என்பதை ஹாஜியார் அறிவாரா?

அடுத்த அப்பத்துக்கு மாவைக் கரைத்து, தேங்காப்பாலுடன் கலந்து சட்டியில் ஊற்றினாள் சுலேகா. ''சுரீர்'' என்று சப்தம் உண்டாகி அடங்கிற்று. ஆனால் அதிகாலையில் தான்பெற்றுவந்த வார்த்தைகளினாலான சாட்டையடி ''சுரீர், சுரீர்'' என்று இன்றும் வலித்துக் கொண்டே இருந்தது. கண்களைத் துடைத்துக்கொண்டே அப்பம் சுடுவதில் கண்ணாயிருந்தாள் சுலேகா. எட்டு மணிவரை அவள்சுட்டு அடுக்கும் அப்பக் குவியல்களால்தான் தினம் வயிறுகாயாமல் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்கின்றாள் சுலேகா. அவளைப் பொறுத்தவரை அவளின் அருஞ்செல்வம் ஒரேமகன் அன்வர் தான். அவன் உள்ளக் கொதிப்போடு இருந்தாலும் வார்த்தைகளை அளந்து நிதானமாகப் பேசினான்.

''உம்மா, நான் சொன்னால் கேட்க மாட்டீங்க! காலையில் நீங்கதாற அப்பங்களைச் சாப்பிட்டால் இன்றுமுழுக்கப் பசிக்கவே பசிக்காது. பின்னேரம் பரீட்சை நடக்கும், பகல் சாப்பாட்டிற்கு நான்வர மாட்டேன் என்று சொன்னதுதான்பிழை. அதற்குக் காசு தரத்தானே அருமை மாமா வீட்டுக்குப் போனீங்க. அவரின் அருமை மகளின் வரவேற்புக்கு ஆளாகினீங்க. நாம யாருக்கும் எந்தக் கெடுதலும் செய்தது கிடையாது. அல்லாஹ் நம்மளைக் கைவிட மாட்டான்மா''

தனக்கு ஆறுதல் கூறும் மகனின் முகத்தை ஏறிட்டு நோக்கினாள் சுலேகா. ஒன்றுமே பேசாது எழும்பிச் சென்றுவாழை இலையொன்றைக் கிழித்து வந்தாள். சுட்டு அடுக்கிய அப்பங்களில் பத்து வாழையிலைக்குள் சரண்புகுந்தன. தாளொன்றால் சுற்றிக்கட்டி மகனிடம் கொடுத்தவள் ஏதோ ஒரு நம்பிக்கை ஒளி கண்களில் சுடர்விட ஒரே ஒரு வசனம்தான் மகனிடம் கூறினாள்.

''தெண்டித்தவன் பெற்றுக்கொள்வான் என்று 'ஹதீஸ் இருக்குது மகன்''

பரீட்சை எழுதும் மண்டபத்தை அடையும்வரை அன்வரின் காதில் தாயின் குரல்தான் எதிரொலித்துக் கொண்டிருந்தது ''தெண்டித்தவன் பெற்றுக்கொள்வான்'' என்ற ஹதீஸைக் கேட்ட கணத்தில் இருந்து அவனின் உடம்பில் புதிய இரத்தம் ஓடத்துடங்கியது போன்ற புத்துணர்ச்சி காலையில் நடந்த அசம்பாவிதங்கள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன.

பரீட்சை முழுவதும் உற்சகமாக விடையெழுதினான் அன்வர். சாதாரணமாக வகுப்பிலேயும் முதல் ஆளாகத்தான் அவன் வருவது வழக்கம். இப்பரீட்சைக்கு அவன் தனது பொருளாதார நிலையை உணர்ந்து உண்மையிலே தெண்டித்துப் படித்திருந்தான். ஹதீஸ் ஒருக்காலும் பொய்த்ததில்லை. அவனது பரீட்சை முடிவுகள் வெளிவந்தபோது அவனிலும் உற்சாகமடைந்தவள் தாய் சுலேகாதான். அவன் (G.C.E. A L) பரீட்சையில் திறமையாகச் சித்தியடைந்திருந்தான். பல்கலைக்கழகம் அவனை ''வாவா'' என்று அழைத்து. மாதாந்தம் நூற்றி எண்பது ரூபா ''மாணவர் உயர் கல்விக் கடனாக'' அளிக்க மக்கள் வங்கி தயாராக இருந்தது. ஆனால்...!

மனித வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு திறமை மட்டும்போதாது — இறைவனின் நாட்டமும் வேண்டும் என்பது எவ்வளவு உண்மை என்று அன்வரின் வாழ்க்கையின் சிறந்த முதல் அங்கமான பல்கலைக் கழகப் பிரவேசத்தின் போது நிரூபணமாயிற்று. ஏழ்மையின் அந்தத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் அன்வரால், மக்கள் வங்கிக் கடனைமட்டும் நம்பி பல்கலைக்கழகம் செல்வது முடியாத காரியம். பணத்தையெல்லாம் மூட்டைகளாகக் கட்டிகொண்டுக் அவனின் தாய்மாமன் அடுத்தவீட்டில் சுகபோக வாழ்க்கை நடாத்திக் கொண்டிருக்கின்றார் அதற்கு மார்க்கமும் காட்டுகின்றார். ஊரின் செல்வந்தர்கள் வங்கிகளில் தமது பணத்தை முடக்கி, கொழுத்த வட்டியை நாடி நிற்கின்றார்களே ஒழிய, இந்த ஏழை மாணவனின் கல்விக்காக ஒருசதத்தைத் தானும் ஈந்துவிடத் தயாராக இல்லை அவ்வூரின் ஒவ்வொரு மீலாத் விழாக்களிலும், மற்றும் பகிரங்க மேடைகளிலும்—சமூகத்தின் மாலைகளைக் காணிக்கையாகப் பெற்று ''சமூகமே! விழித்தெழுங்கள் ''என்று தொடங்கி ''இஸ்லாமியர் படிப்பதில் அக்கறை காட்டுவதில்லை என்றெல்லாம் விளாசிவிட்டு ''தாங்கள் பட்டங்கள் பெற்ற சம்பவங்களை'' தொண்டைநோக பறைசாற்றி - குளிர்பானம் ஒன்றையும் களைப்புத்தீர அருந்திவிட்டு ஏதோ சமூகத்தைத் திருத்திவிட்டதாக எண்ணிக்கொண்டு ''பென்ஸ்'' காரில் சொகுசுப் பிரயாணம் செய்யும் ஒரு சில ''முஸ்லிம் சமூகத் தொண்டர்களும்'' வாளாவிருந்துவிட்டார்கள். அன்வரின் விடயத்தில் அவர்களின் பிரசாரங்கள் காற்றோடுபறந்தன. அவர்களின் வாய்கள் முத்திரையிடப்பட்டுவிட்டன.

ஆனால் தமது நிலையை எண்ணி சற்று வருத்தப்பட்டாலும் சுலைகா தனமகனுக்கு ஆறுதல் வார்த்தைகளை அள்ளி வீசுவாள். ''நன்மையும் தீமையும் இறைவன் பக்கறி என்று நம்பியிருக்கின்றோம் மகன். முதலில் 'ஷர்ராக' இருக்கும் விடயங்கள் பிறகு இறைவனுதவியால் ''ஹைறாக'' மாறிவிடும் அல்லாஹ்வை நம்பினோர் ஒருக்காலமும் கைவிடப்படார்'' என்ற கருத்துப் பட தினமும் மகனைத் தேற்றினாள். சுலைகா. அன்வரின் நிலையை எண்ணி அவனின் அருமை நண்பன் றபீக மிகவும் கவலைப்பட்டான் அவனாலும் என்னசெய்ய இயலும். காலம் வேகமாக கரைபுரண்டு ஓடத்தொடங்கிற்று. அன்வரைப் பொறுத்தவரை, தொடர்ந்து தாய்க்குப் பாரமாக இருக்க அவன் விரும்பவில்லை. பேக்கரிகளுக்குச் சென்று; பாண், கேக் போன்ற தின்பண்டங்களை வாங்கிக்கொண்டுபோய் கடைகளுக்கு விநியோகிக்கும் வேலையைக் கடந்த இரண்டு மாதங்களாகச் செய்துகொண்டிருக்கின்றான்.

ஒருநாள் வழமைபோன்று அவன் கடையொன்றில் பாண் விநியோகம் செய்துகொண்டிருந்தபோது பேக்கரி ரேடியோவில் ஒலிபரப்பப்பட்ட செய்தி அவனது கவனததை ஈர்த்தது.

''இலங்கைப் பல்கலைக் கழகத்தின் சகல வளாகங்களும் புதிய மாணவர்களுக்காக நேற்றுத் திறக்கப்பட்டன. பழைய மாணவர்களும், விரிவுரையாளர்களும், புதிய மாணவர்களை வரவேற்றனர். பல்கலைக்கழக வளாகங்களில் வழமையாக நடைபெறும் 'ராக்கிங்' என்ற துன்புறுத்தல்கள் இம்முறை நடைபெறமாட்டாது என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது''

இவ்வாறு தொடர்ந்து அறிவிப்பாளர் வாசித்துக் கொண்டிருந்தார். அன்வர் விறைத்துப்போய், வேதனையின் உச்சக் கட்டத்தை எய்திக் கொண்டிருந்தான். அவனுக்கும் ஓரளவு வசதியிருந்தால் நேற்று அவனும்கூட வரவேற்கப் பட்டிருப்பான் ஆனால் அவனோ கடைகளின் படிகளையும், தலைவாசல்களையும் ஊடறுத்துக் கொண்டிருந்தான். சுருக்கமாகச் சொன்னால் ''கண் இரண்டும் ஒளிபெற்ற குருடன் மீண்டும் குருடனானால்'' எவ்வளவு வேதனையடைவானோ அதிலும் ஒருபடி மேலேதான் அவனின் வேதனை இருந்தது. ''யா அல்லாஹ்'' என்ற பெருமூச்சுடன் தனது நாளாந்தத் தொழிலைத் தொடர்ந்தான். அன்று மாலையில் 5 மணியிருக்கும் றபீக் ஓடிவந்தான். அவனின் முகத்தில் மகிழ்ச்சியின் சாயல் ஓடிக்கொண்டிருந்தது.

''அன்வர்! இன்றைய செசட்பார்த்தையா? யப்பான் ஸ்கொலஷிப் ஒன்றுக்கு 'கோள்'பண்ணியிருக்காங்க. நீதான அட்வான்ஸ் லெவலில நல்லாபாஸ்பண்ணிருக்கே இன்னுமென்ன போக்குவரத்துச் செலவு, படிக்கும் செலவு, வைத்தியக் கட்டணம், மற்றும் புத்தகங்கள், சில்லறைச் செலவுகளுக்குப்பணம், உணவு இருப்பிட இலவசவசதி அப்பப்பா எனக்கென்றால் யப்பானில் படிக்கிறமாதிரித்தான் இருக்கு பயப்படாமல் அப்ளைபண்ணு என்ன! முகத்தை ம். என்று பிடித்துக் கொண்டிருக்காய்?''

''இல்லைறபீக் உண்மையிலே நான் அதிஷ்டமில்லாதகட்டை. 'நேற்று யுனிவர் சிற்றி என்றென்ஸ்' என்றெல்லாம் றேடியோவில் சொல்லக்க, என்னால் அந்தத் துன்பத்தைத் தாங்கிக்கொள்ளவே இயலாமற்போச்சு. திரும்பவும் முத்திரைக் கட்டணம் பத்துப் பதினஞ்சு ரூபா செலவழிச்சு, யப்பான் யுனிவர்சிற்றி ஸ்கொலசிப்புக்கு அப்ளை பண்ணி கிடைக்காமப் போனா நான் வேதனையைத் தாங்கிக் கொள்ளமாட்டேன் ரபீக். வெளிநாட்டு ஸ்கொலஷிப் அனேகமாக, தெரிந்த செல்வாக்குள்ளவங்களுக்குத்தான் கொடுப்பாங்க. நான எந்த எம்பியைப் பிடிப்பேன்? எனக்கு எந்த மந்திரி சிபார்சு செய்வார்'' அன்வருக்குத் தொண்டை அடைத்தது

''போடா பைத்தியம்! இதெல்லாம் 'றிம்மில' பாஸ்பண்ணின ஆட்களுக்குத்தான் நீதான் ஒரு கலக்கு கலக்கியிருக்காய் நான் உனக்கு என் பரிசாக பத்து ரூபா காறன் நீ கட்டாயம் ''அப்ளை பண்ணு'' என்றவாறு தயாராக வைத்திருந்த பத்து ரூபாயைச் 'சடேல்' என்று நீட்டினான் ரபீக்.

அன்வரின் மெய் சிலிர்த்தது. பணத்தை மூட்டையாக வைத்திருக்கும் தாய் மாமனின் வீட்டில் இதே பத்து ரூபாய்க்காகத் தன் தாய்க்குக் கிடைத்த சொல்மாரி அவன் எண்ணத்தில் பளிச்சிட்டது. ரபீக் பணக்காரனல்ல என்றாலும் அன்வரைப்போன்ற ஏழையுமல்ல. ஏதோ அன்வரைப் பொறுத்தவரை அவன் உச்சாணிக் கொப்பில் உயர்ந்து நின்றான். ''உயர்ந்த உள்ளந்தான் மனிதனை உயர்த்துபவை'' என்பதற்கு அவன் ஒரு உதாரணம்.

★

யப்பானின் தலைநகராம் 'டோக்யோ' நகருக்கு அந்த அழகிய விமானம் பறந்து கொண்டிருந்தது. ''இரசாயன பொறியியலில் ஐந்துவருடகாலக் கல்வி நெறியைத் தொடருவதற்கு ஒரு சிறந்த மகனை அனுப்பிவிட்ட எக்களிப்பில் இலங்கைமாதா, கடல் என்றும் மேளத்தில் 'அலை'க்கரங்களால் அடித்து ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தாள். கடந்த இரண்டு கிழமைகளாகத் தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்களும் விருந்துகளும் அன்வரின் கண்முன் நர்த்தனமாடின. விமானத்தின் யன்னலினூடே வெறுமனே அவன் நோக்கிக் கொண்டிருந்தாலும் ஆயிரம்முறை அல்லாஹ், விற்கு நன்றி கூறிக்கொண்டிருந்தான். ''ஆரம்பத்தில் ஷர்ராக இருந்தாலும் அல்லாஹ் 'ஹைறுக்' கித்தருவான் மகன்'' என்றதாயின் பொய்யாமொழி அவனுடலைச் சிலிர்க்க வைத்தது ''பத்து ரூபாய்க்காக தாயை அவமதித்த மாமன்கூட தனக்கு ஒரு 'டின்னர்' தர இருப்பதாக அவரே வந்து, தங்கையிடம் பழையவிடயங்களுக்காக மன்னிப்பு கேட்டு கூறிய போது அன்வர் அயர்ந்தே போய்விட்டான் மரத்தை ஒரு ஏழை விதவைத் தாய் வளர்த்துவிட்டாள். மரமும் பழுக்கப் போகின்றது பட்டுப் போகும் என்றிருந்த ஒருவர்க்கும், பழம் உண்ணக்தான் வட்டமிடுகின்றன என்பதை அன்வரின் கூரிய புத்தி கூறிற்று.

தன் தாயைக் காணுமலிருப்பது அன்வருக்கு என்னவோ போலிருந்தது. இருந்தாலும் புதிய சூழல், புதிய நண்பர்கள, பல்கலைக் கழகத்தின் கவர்ச்சியான வாழ்க்கை என்பன ஓரளவு ஆறுதல் தந்தன அவனும் முன்பு போன்று படிப்பில் ஊக்கமாக இருந்தான். அடிக்கடி தாய்க்குக் கடிதம்போட்டான் முடியுமான அளவு செலவைச் சுருக்கி தாய்க்கு ஒரு சிறுதொகைப் பணமும் அனுப்பிவைப்பான். ரபீக்கும் அடிக்கடி கடிதம் போட்டான் அன்று றபீக்கிடம் இருந்து வந்த கடிதத்தை மீண்டும் ஒருமுறை வாசித்துப் பார்த்தான்.

''அன்பு அன்வர்;

இங்கு நான், உனதுதாய் எல்லோரும் சுகம். உனது சுகத்திற்கு எங்கள் பிரார்த்தனை.

இங்கு நடக்கும் புதினங்களை உடனடியாக உனக்கு எழுதவேண்டும் என்ற வாஞ்சையினாற்றான் இக்கடிதத்தை எழுதுகின்றேன். விபரமாகச் சந்தர்ப்பம் வாய்க்கும்போது கூற இருக்கிறேன். இங்கு சுருக்கமாகவே குறிப்பிடுகின்றேன் மீதியை நீ புரிந்துகொள்வாய் என்பது எனக்குத் தெரியும்.

முதலாவதாக, உனது அன்புமாமா பெரியதொரு பங்களாக் கட்டத்தொடங்கி இருக்கின்றார். ''தங்கச்சி, தங்கச்சி என்று உனது உம்மாவிடம் போய் உயிரை விடுகின்றார்; தனது மருமகன் யப்பானில் இஞ்

சினியருக்குப் படிப்பதாகவும், தனது மகளுக்கென்றே பிறந்து வளர்ந்தவன் என்றும் மார்தட்டிக் கொள்கின்றார். உனது உம்மாவை, உங்களின் குடிசையில் இருந்து, தனது வீட்டுக்குக் கொண்டு செல்லப் பிரயத்தனப் பட்டுக் கொண்டிருக்கின்றார் இதைவிட முக்கியமான ஒருவிடயம் உனது மாமாமகள் சரீனாவுக்கு நமதூர் பாடசாலையில்தான் 'டீசசிங்' கிடைத்திருக்கின்றது. பாடசாலைக்குப் போன முதல்நாள் ஆசிரியைகளிடத்தில் அவவுக்கு ஏகப்பட்ட மரியாதையாம் எனது ராத்தாவும் அங்கேதான் படிப்பிக்கின்றார் என்பது உனக்குத் தெரியும் உனக்கு என்னம்மா நீ ஜப்பானில் படித்த எஞ்சினியரின் எதிர்கால மனைவி'' என்று சக ஆசிரியைகள் கேலி பண்ணியபோது பெருமையுடன் சிரித்துக் கொண்டாவாம். அன்று ஒரு வெளிநாட்டுப் பேனையொன்று பாடசாலைக்குக் கொண்டு வந்தாவாம். ஏதோ நீதான் யப்பானில் இருந்து அவக்காக அனுப்பி வைத்ததாகக் கூறிக்கொண்டிருக்கிறவாம் என்று ராத்தாசொன்னார் என்னவோ! எவ்வளவு தான் கொடுமை செய்திருந்தாலும் 'மாமா என்ற இடத்தில் உனது மனம் இளகிவிட்டதாக ராத்தா சொன்னார்.

அடுத்தது, நமதூர் பணக்காரர் வரிசையில் ஒருவரான 'கலந்தங்கண்டு ஹாஜியார் J. P. அவர்கள், சென்றஜும்ஆவிற்குப் பிறகு, பள்ளிவாயலில் 'நமதூரின் கல்விநிலை' என்பதுபற்றி சொற்பொழிவாற்றினார். அதில் பெரும்பான்மையான பங்கு நேரத்தை உன்னைப்புகழ்வதிலேயே செலவழித்தார். அத்துடன் இன்னுமொரு முக்கியவிடயத்தையும் குறிப்பிட்டார். அவர்குறிப்பிட்டவாறு அப்படியே எழுதுகின்றேன்.

''எமதூரில் படித்தவர்கள் என்று யாரும்வந்து விட்டால், அயலூர்க்காரர்கள் கொழுத்த சீதனத்தைக் கொடுத்து, அப்படியே அள்ளிக்கொண்டு போய்விடுகின்றார்கள். இனிமேல் இதற்கு அனுமதிக்கக்கூடாது. அன்வரைப் போன்று உயர் கல்வி கற்றவர்களின் சேவை எமக்குத் தேவை. அவர்களை நமது ஊரிலேயே, அவர்களின் படிப்புக்குத் தகுந்த பணம் படைத்தவர்கள் அனைத்துக் கொள்ள வேண்டும். இவ்விடயத்தில் நான் முக்கிய கவனம் எடுக்க இருக்கின்றேன்''

அதாவது 'கலந்தங்கண்டு ஹாஜியாருக்கும் உன்மீது ஒரு கண். இன்னும் பல்வேறு இடங்களிலும் உன்னைக் குறிவைக்கத் தொடங்கி இருக்கின்றார்கள் ''இளய நம்பிப் போடியாரும் உன்குண நலன்களைப் பற்றி பலரிடம் விசாரித்ததாகக் கேள்வி.

ஊர் புதினங்களைத்தான் குறிப்பிட்டேன். உன் நிலைமை எனக்குத் தெரியும் எதிலும் கவனம் செலுத்தாது படிப்பாய் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

இவ்வண்ணம்

நண்பன் - ரபீக்

கடிதத்தை வாசித்து முடித்ததும் அன்வருக்குச் சிரிப்புத்தான் வந்தது. முதல் வேலையாகத் தனது தாயிடம் சமர்ப்பிக்கும்படி, ரபீக்கிற்கு ஒரு கடிதம் எழுதினான், தான்வந்த இந்த நான்கு வருடங்களிலும் நடந்த பல விடயங்களைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் குறிப்பிட்டான். முதல் வேலையாகக் கடிதத்தைத் தபாலில் சேர்த்தபிறகுதான் அவனுக்கு நிம்மதியாய் இருந்தது.

☆

ரபீக் கடிதத்தை உரத்து அன்வரின் உம்மாவுக்குக் கேட்கக் கூடியதாக வாசிக்கத் தொடங்கினான். உழைப்பால் உருக்குலைந்திருந்தாலும், மகன் மாதாந்தம் தற்போது கூடியளவு பணம் அனுப்பத் தொடங்கி விட்டபடியால் சுலைகாவின் உடல் ஓரளவுதெளிந்து, பருத்திருந்தது. காலாகாலமாக முகத்தில் ஒடிக்கொண்டிருந்த அந்தத் துன்ப ரேகைகூட மறைந்திருந்தது.

அன்புள்ள தாயார், ரபீக் ஆகியோருக்கு,

நான் நலம். நாடுவது மஃதே.

இது மிகவும் முக்கியமான கடிதம். இதுவாசிக்கப்படும்போது உங்களிருவரையும்தவிர வேறுயாரும் இருப்பதை நான் விரும்பவில்லை. இவ்விடயங்கள் வெளியிலும் செல்லாது என்று நம்புகின்றேன்.

யப்பானிற்கு வந்தபுதிதில் எனக்கு ஒரே குழப்பமாக இருந்தது. எங்களுக்கு ஆரம்பத்தில் யப்பானிய மொழி படிப்பிக்கத் தொடங்கினார்கள். அக்கால கட்டத்தில் வெளியில் சனங்களுடன் பழகுவது, கடைகளுக்குச் செல்வது, இன்னோரன்ன

விடயங்கள் எனக்குச் சிரமமாக இருந்தது. இந்நிலையில்தான் ஒரு நாள் பல்கலைக் கழகப் பூங்காவில் தனியே அமர்ந்திருந்தேன். எனக்கு முழுக்க முழுக்க ஊர் நினைவாக இருந்தது. அப்போது ''எக்ஸ்கியூஸ் மீ'' என்று ஒரு பெண்ணின் குரல்கேட்டது. திரும்பினேன். அழகிய யப்பானியப் பெண்ணொருத்தி நின்றுகொண்டிருந்தாள் அவள் தன்னைத்தானே அறிமுகப்படுத்திக்கொண்டாள். ''எனது பெயர் 'குல் ஷா யுங்'' இதே பல்கலைக் கழகத்தில் மதவிவகார ஆராய்ச்சி மாணவியாக இருக்கின்றேன். இஸ்லாம் மதத்தைப் பற்றியும் ஆராய்கிறேன். நீங்கள் முஸ்லிம் என்று அறிந்ததும் உங்களிடம் சில விளக்கங்கள் பெறலாம் என்று வந்திருக்கின்றேன். தயவுசெய்து எனக்கு உதவமுடியுமா? என்றாள் எனக்கு உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருந்தது.

''எனது மதத்தில் எனக்கு ஆழ்ந்த பற்று உண்டு, ஆனால் மிக ஆழ்ந்த அறிவு இல்லா விட்டாலும் ஓரளவு என்னால் விளக்கங்கள் கூறமுடியும் என்னால் முடியுமானவரை உதவுகின்றேன்'' என்றேன் அவள் மகிழ்ந்துபோனாள். இதைத் தொடர்ந்து நான் பலமுறை அவளுக்கு இஸ்லாம்பற்றி போதிய விளக்கங்கள் கொடுத்தேன். அவளின் கேள்விகளில் இருந்து, பிறமதத்தவர் பலர் சில விஷமிகளின் பொய்ப்பிரச்சாரத்தினால் இஸ்லாத்தைப்பற்றி எவ்வளவுதூரம் தப்பாகப் புரிந்துள்ளார்கள் என்பதை என்னால் உணர முடிந்தது. நான் மிகத் தெளிவாக பல விடயங்களை விளக்கினேன். ஒருநாள் அவள் என்னிடம் வழமைபோல் வந்தாள். அவளின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்திருந்தது. அவள் சொன்னாள் ''மிஸ்ரர் அன்வர். எனது மத ஆராய்ச்சியில் நான் பட்டத்துக்காக மட்டும் ஈடுபடவில்லை என்னைப் பொறுத்தவரை நான்பெரிய பணக்காரி. என்னுடைய அப்பா, அம்மா எல்லாம் இறந்துவிட்டார்கள். எனக்கு பணத்தினால் மட்டும் நிம்மதி கிடைக்காது என்று நூறுவீதம் தெரியும். இந்த நிலையில் தான், எனது பல்கலைக் கழகக் கல்வியில் இம்மத ஆராய்ச்சித் துறையைத் தேர்ந்தேன். இஸ்லாம் மதத்தைப் பற்றி உங்களைப் போன்றவர்களிடம் சில விளக்கங்கள் பெற்றாலும், குர்ஆனையும், நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீஸையும் நிரம்பப் படித்தேன். இவ்வாறே ஒவ்வொரு மதத்திலும் போதிய ஆராய்ச்சியில் ஈடுபட்டேன். தற்போது என்மனம் உங்களின் மதத்தைத்தான் நாடுகின்றது. அதில் உள்ள ஆணித்தரமான உண்மைகள்என்னை மிகவும் கவர்ந்துவிட்டன. இஸ்லாம் வெறும் மதம் மட்டுமல்ல ''ஒருவாழ்க்கை முறை'' என்றுதான் சொல்வேன். நான் இஸ்லாத்தைத் தழுவ விரும்புகின்றேன்', மூச்சுவிடாமல் கதைத்தாள்.

எனக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது. இன்று அவள் பழைய 'குல் ஷாயுங்' கல்ல. இஸ்லாமிய மதத்தில் தீவிர பற்றுக் கொண்ட பூரண முஸ்லிம் 'ஜமீலா'. அத்தோடு அவள் நிற்கவில்லை. எனது சரித்திரத்தைக் கேட்டுப் பிடித்துக் கொண்டாள். கடைசியில் என் கதையையே கூற வேண்டியதாயிற்று. அவளின் கண்களில் கண்ணீர் மல்கிற்று ''உயர்ந்த ஒரு வழியைப் பின்பற்றுகின்றோம் என்று கூறிக்கொண்டு அதாவது முஸ்லிம்கள் என்று கூறிக்கொண்டு அதைப்பற்றி அறியாமல் — வெளி வேஷத்துடன் உங்களூரில் எத்தனைபேர் வாழ்கின்றார்கள்'' என்று மனவருத்தப்பட்டாள். அதைத் தொடர்ந்து எனது கல்விக்காக, எனக்காக ஏற்படும் மேலதிகச் செலவைச் யெல்லாம் வலிந்து ஏற்றுக்கொண்டிருக்கின்றாள்.

இன்று காலையில் நடந்த சம்பவம் ஒன்று தான் என்னை இவ்வளவு நெடிய கடிதம் எழுதத் தூண்டியது. இன்று காலையில் ஜமீலா வந்து என்னைச் சந்தித்தாள். அவளின் கண்களில் — முகத்தில் என்றுமில்லாதவாறு நாணம் குடிகொண்டிருந்தது! சுற்றிவளைக்காமல் நேரடியாகக் கேட்டுவிட்டாள். ''நான் உங்களைத் திருமணம் செய்ய விரும்புகின்றேன். எனக்கும், எனது சொத்துக்கும் இஸ்லாம் காட்டும் வழியிலான ஒரு பாதுகாவலராக நீங்கள் இருப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு'' என்றாள். என்னால் என் காதுகளையே நம்பமுடியவில்லை. என்தாயாரின் அனுமதிபெற்று பதில் கூறுகின்றேன் என்று கூறியுள்ளேன் நீங்கள் சம்மதம் தெரிவித்தால், எனது படிப்பின் இறுதியில் திருமணத்தை வைத்துக்கொள்ளலாம். தொடர்ந்து உங்களையும் இங்கு அழைத்துக் கொள்வேன். ரபீக் விரும்பினால் அதன் பிறகு, இங்கு அவனையும் அழைத்துக் கொள்ளலாம். அங்கு நமதூரில் எனக்காகப் பல முதலைகள் வாயைத் திறந்து காத்துக் கொண்டிருக்கின்றன என்று அறிந்ததும்தான் இவ்விடயத்தில் ஒரு முடிவு எடுக்கவேண்டும் என்ற எண்ணம்

எனக்கு ஏற்பட்டது. உங்களின் பதிலை சீக்கிரம் அனுப்பிவையுங்கள்''

இவ்வண்ணம்

அன்புமகன்

அன்வர்

ரபீக் கடிதத்தை வாசித்து முடித்ததும், சுலைகாவின் வதனத்தில் அர்த்த புஷ்டியுடன் புன்னகை மலர்ந்தது. தாயின் சம்மதத்தை அறிவிப்பதற்காக ரபீக் விரைந்து கொண்டிருந்தான். அப்போது படலையைத் திறந்து கொண்டு, தனது வழக்கமான பல்லவியைப் பாடி தங் கையை வழிக்குக் கொண்டுவர தப்பி லெப்பை ஹாஜியார்' வந்துகொண்டிருந்தார்.

(யாவும் கற்பனை)



அறிவு என்பது விசுவாசியின் காணாமற் போன பொருள். அது எங்கு கிடைப்பினும் அவன் அதை எடுத்துக் கொள்வான்

# இன்கிலாபே! தொடர்க பணி

எம். வை. எம். சித்திக்
இரண்டாம் வருடம்,
வணிகப்பகுதி.

வண்ண அட்டை கொண்டு எங்கள்
எண்ணமெல்லாம் சுமந்து நிற்கும்
இன்கிலாபின் வரவிற்காக
இதயங்கள் மலர்கின்றன.

புதுத்தென்றல் வீசுதற்காய்
பொன் மலர்கள் பூப்பதற்காய்
குதித்தெழும் உணர்வு வெள்ளம்
கொண்ட மலர் வாழ்கநீடு.

வாழையடி வாழையாக
வசந்தகால குயிலாக
தோழமையின் சின்னமாக
தோன்ற வேண்டும் எங்கள் மலர்

இனம் மதத்தின் பெயரில் இன்று
ஈழ மண்ணின் மூலை தோறும்
தினம் எழும்பும் சாபக்கேட்டை
தீய்த்திட நீ மலரவேண்டும்.

திசை கடந்திங்கலைகள்
தேடி வந்த வண்டுகளின்
இசைகலந்த தேன் சுனையே
இன்கிலாபே தொடர்க பணி!

☆

# නබිනායකයාණන් (සල්) සෙවන යට වර්ධනයවූ ඉස්ලාමීය ශිෂ්ඨාචාරය.

එම්. එස්. අබ්දුල් මජීඩ්., B. A., Dip - in. Ed , (Cey.)
( විදුහල්පති, මල්හරුසුල්හියා ම. වි, ගාල්ල )

ශිෂ්ඨාචාරය නම් පඩිපෙලේ මිනිසා තැබූ සෑම පාසටහනක්ම ඔහුගේ ශ්‍රමයේ සංකේතය සටහන් වී තිබීම අපට දැකිය හැකිය. ඔහු කළ පරිත්‍යාගවල සිහිවටන මෙන් ඔහු විසින් හෙළන ලද ලේ බිඳුද අප දෘෂ්ටියට ලක් වේ.

ආගමක් අනුව හැඩගැසුණු ශිෂ්ඨාචාරය ඒ නමින් හැදින්වීම සිරිතක් ව පවතී. ඒ අනුව ඉස්ලාම් දහම පදනම් කර ගෙන හැදී වැඩී ගිය ශිෂ්ඨාචාරය ඉස්ලාම් ශිෂ්ඨාචාරය යයි හඳුන්වනු ලැබේ. ලෝකයේ බොහෝ උසස් ඇදහිම් වෙත මනුෂ්‍ය ඉතිහාසය හැඩ ගස්වා සකස් කළ විශිෂ්ඨ අධ්‍යාත්මික බලයන් අතුරෙහි ඉස්ලාම් ධර්මයද එකකි.

ඉස්ලාමීය ශිෂ්ඨාචාරයේ උල්පත අල්-කුර්ආනය වේ. මුහම්මද් නබි නායකතුමාණන් මගින් ලොවෙහි පහළවූ අල්-කුර්ආනය මගින් පෙන්වනු ලබන ජීවන ක්‍රමය නබි නායකයාණන්ගේ හා එතුමාගේ අනුගාමිකයන් විසින් සාර්ථක අන්දමින් පිළිපැදීමෙන් යහපත් ජීවන ක්‍රමයකුත්, ඒ මගින් නවතම ශිෂ්ඨාචාරයකුත් ලොව ඉදිරියේහි තබන ලදී.

ඉස්ලාමය ඕනෑම කාලයක ඕනෑම සමාජයක ප්‍රශ්නවලට පිළිතුරු විසඳුම් සලසා දිය හැකි විදියේ සරුසාර ගැඹුරු ධර්මයකි. කාන්තාරයේ වෙසෙන මිනිසාටත්, හිමෙන් වැසුනු රටවල ජීවත්වන මිනිසාටත් තවත් ඕනෑම භූගෝලීය තත්ත්වයක දිවිගෙවන මිනිසාටත් තමාගේ පරිසරයෙන් ලැබෙන සම්පත් අනුව ජීවිතය සාර්ථක කර ගැනීමට හැකිවන පරිදි එහි නීතිරීති සකස් වී ඇත. හදට යන යුගයේ විද්‍යාත්මක මිනිසාට පවා සහාය වීමට ඉස්ලාම් ධර්මය සමත්ය. මේ නිසා නබිනායකයාණන් බිහි කළ ශිෂ්ඨාචාරය මුළුමහත් මිනිස් සමාජයටම ගැලපෙන අන්දමට සැකසී තිබීම වැදගත්වෙයි.

ඉස්ලාම් ධර්මයට ආවේණිකවූ විශේෂ ලක්ෂණ අතුරින් සහෝදරත්වය, උසස් චරිත ශුද්ධිය, අවංකත්වය, චාම් දිවිපෙවෙත, පරිත්‍යාගය යනාදිය මගින් ඉස්ලාම් ශිෂ්ඨාචාරය මුස්ලිම් වරුන්ගේ ජීවිතය හැඩ ගස්වයි. ඉස්ලාම් දහම බිහිවීමත් සමගම එකල අරාබිවරුන් අතර තිබුණු හැඩිදැඩිකම්, අවිනීතකම්, ආදිය තුරන් විය. මෙයට හේතු ඉහතින් දක්වන ලද යහපත් ගුණ ධර්ම ඉස්ලාම් දහම විසින් නබිනායකයාණන්ගේ මග පෙන්වීම යටතේ ඔවුන්ගේ ජීවිතය තුළට ස්ථිර ලෙසම තැන්පත් කිරීමය. මෙහි ප්‍රතිඵලයක් වශයෙන් වීරත්වය, දයාව, යනාදී ගුණාංගයන්ගෙන් යුත් සමාජයක් බිහිවීමයි. එම සමාජයේ අවංක පාලකයින්, අපක්ෂපාත විනිසුරුවන්, ශිෂ්ඨාසම්පන්න බැතිමතුන්වන ප්‍රධානීන්, යහමග දිවිගෙවන යුදභටයින් සහ දේවභක්තියෙන් යුත් විද්‍යාඥයින් ආදීන්ගෙන් සමන්විත සමාජයක් ඉස්ලාමීය ශිෂ්ඨාචාරය මගින් නබි නායකයාණන්ගේ සෙවන යටතේ බිහිවී වර්ධනය විය.

ඉස්ලාම් බිහිකළ ශිෂ්ඨාචාරය ඔස්සේ ලොවෙහි විවිධ ප්‍රදේශවල විසූ ජනතාවත්, ජනතා කටයුතුත් ඇදහිලි ක්‍රමත්, ශිල්ප ශාස්ත්‍රත්, කළා හා ජීවන

ක්‍රමත් සියල්ලටම, වඩා පාලන ක්‍රමත් කොතෙක් දුරට හැඩ ගැසී ගියේද යනු මුස්ලිම් යටගියාව දෙස එබී බැලීමෙන් පැහැදිලි වනු ඇත.

ඉතිහාසයේ පිටු පෙරළා බලන විට ලොවෙහි කලින් කළ බිහිවූ ශිෂ්ඨාචාර ගැනත්, එවා ගොඩ නැගීම සඳහා මිනිස් සමාජය විසින් කෙතරම් අගනා පරිත්‍යාග කර තිබීමත් දැන ගත හැකිය. මෙවැනි ශිෂ්ඨාචාර කාලයාගේ අයෝමය හස්තයට මැදිවීමෙන් සුණු විසුණු වී අවසානයේ දී පසට යටවී යාමත් දැකිය හැකිය. මිහි තලයේ සැහෙන කොටසක් අඳුරෙහිගිලී සිටි අවස්ථාවක ශිෂ්ඨාචාරය නම් පහන, මුස්ලිම් අධිරාජ්‍යයේ දැල්වෙමින්පැවතුණි. මුස්ලිම් අධිරාජ්‍යයේ වාසය කළ ජනසමූහයා ශිෂ්ඨාචාරයේ මුදුන් පෙත්තේ වාසය කළෝය. එවිට මුළු මහත් යුරෝපයම පාලනය කළ ග්‍රීක, රෝම, අධිරාජ්‍යයන් අභාවයට පත්ව තිබුණි. රෝම අධිරාජ්‍ය අභාවයට පත්වෙලේ සිටම ක්‍රි: ව: 5 සියවස සිට 15 සියවස දක්වාවූ කාල පරිච්ඡේදය තුළ මුළු මහත් යුරෝපාවම උතුරෙන් පැමිණි ම්ලේච්ඡයන්ගේ ආධිපත්‍යයට යටවී තිබුණි. මේ නිසා මෙම කාල පරිච්ඡේදය ඇතැම් ඉතිහාසඥයන් විසින් 'අඳුරු යුගය' යන නමින් හඳුන් වනු ලැබේ.

ග්‍රීක, රෝම ශිෂ්ඨාචාරයන්ගේ සේවාවන් ලොවින් තුරන් වී ගියේයයි සලකනලද අවස්ථාවකදීය නබි නායකයාණන්ගේ සෙවන යට ඉස්ලාමීයශිෂ්ඨාචාරය බිහිවී වර්ධනය වෙමින් පැවැතුනේ. යුරෝපයේ ස්පාඤ්ඤයේ සිට මධ්‍යම ආසියාවේ සමර්කන්ඩ් දක්වා විහිදී පැවැතුණු මුස්ලිම් අධිරාජ්‍යය එකී අවස්ථාවක ලොවෙහි අගතැන තම සතුකර ගත්තේය. ලෝක ඉතිහාසයේ මෙතෙක් බිහිනොවූ අග්‍ර අධිරාජ්‍යයක් සේ එය වැජඹුණි. එය ලොවේ සැහෙන කොටසක පැතිර මිනිස් සමාජය ශිෂ්ඨසම්පන්න පාලන ක්‍රමයකින් පාලනය කෙළේය. මෙතරම් විශාලත්වයකින් යුත් අධිරාජ්‍යයක් එ අවධිය දක්වා ලෝක ඉතිහාසයේ නොවීය.

මුහම්මද් නබි නායකයාණන් ක්‍රි: ව: 7 වෙනි සියවසේදී ආගමක් ලොවට හඳුන්වාදීමෙන් පමණක් නොනවතී, අළුත් ශිෂ්ඨාචාරයක් බිහිකිරීමේ කර්තව්‍යයද එතුමාණන්ගෙන් ඉටුවිණි. එපමණක්ද නොව, නවතම අදහස් හා ප්‍රතිපත්තීන්ගෙන් යුත් අලුත් රාජ්‍යයක් ගොඩනැගීමේ ගෞරවයද එතුමාණන් සතුවන්නේය. මෙම අදහස් බොස්වත් ස්මිත් නම් ක්‍රිස්තියානි පූජක තුමා මෙසේ පවසති :—

"By a unique fortune in history, Mohamed a threefold founder, founder of a religion, founder of a empire, and founder of a civilization" ("Mohamed and Mohamed and Mohamedanism" By Rev : Bosworth Smith)

සහෝදරත්වය පදනම් කරගෙන ගොඩනැගුණු සමාජීය ප්‍රතිපත්ති අනුව මිනිස් වර්ගයේ එක්සත්කම ඉතා වැදගත් බව සලකන ලදී. නබිනායකයාණන් දින පතාම මධ්‍යම රාත්‍රියෙහි යෙදුණු 'තහජ්ජත්' නම් යාඥාවෙන් පසුව එතුමාණන් පැතුවේ 'සැම මිනිසෙකුම අන් අයට සහොදරයෙක් යයි මා සාක්ෂි දරමි' යනුවෙනි. තවද 'අල්ලා (හ්) ගේ ඉදිරියේ සැමෝම එක සමානය' යනුවෙන් සමානාත්මතාවයට මග පෑදූහ. වර්ණ ජාති, කුළ භේද, තුරන් කිරීමටද, එතුමාණන් සමත් වූහ. මෙහි ප්‍රතිඵලය වූයේ සහෝදරත්වය පදනම් කරගෙන ලොවෙහි බිහිවූ විශාලතම සංවිධානය ඉස්ලාමය වීමයි. එමගින්

භේදවලින් තොර ශිෂ්ඨසම්පන්න සමාජයක් බිහිවිය. ඔවු එය හුදු දර්ශනයකට පමණක් සීමා වූයේ නැ. නබිනායකයාණන් ජීවත්ව සිටියදීම ඇබිසීනියානු වහලෙකුවූ බිලාල්, පර්සියාවේ උපන් සල්මාන් අල් පාර්සි, රෝම ජාතියෙකුවු ශුහයිබ්, ආදී පුද්ගලයින් විදේශ රටවලින් පැමිණ ඉස්ලාමය පිළිගැනීමත් සමගම ඔවුන් කිසිම භේදයකින් තොරව මුස්ලිම් සමාජයේ වැදගත් ස්ථාන හිමි කර ගැනීමට සමත් වූහ. මේ ගැන සඳහන් කළ නබිනායකයාණන් 'ඇබිසීනියාවෙන් ලැබුණු පළමු සම්පත බිලාල්ය, රෝමවරු අතරින් ලැබුණු පළමු ත්‍යාගය ශුහය්බ්ය. පරසියාවෙන් ලැබුනු ජයග්‍රාහණය සල්මාන්ය' යනුවෙන් ආඩම්බරයෙන් පැවසූහ අදට ශත වර්ෂ 14 කට පෙර ඇරඹුනු ශිෂ්ඨාචාරයේ මූලික ලක්ෂණවලින් එකක්වන, සියලුම ජාතීන්ට හා ගෝත්‍රවලට අයත් පුරවැසියන් එකම සංවිධානයක් යටතේ සමානාත්වයෙන් යුතුව ජීවත්වීමට ඉඩ සැලසීමයි.

භාෂාව ශිෂ්ඨාචාරයේ ප්‍රධාන අංගයකි. ඒ නිසා ශිෂ්ඨාචාරයේ හා භාෂාවේ ඇති සම්බන්ධය වෙන් කළ නොහැක්කෙකි. භාෂාවනොමැතිව ශිෂ්ඨාචාරයක් පැවැත්වීමත් ව්‍යාප්තියත් විය නොහැක. ඉස්ලාමයේ ව්‍යාප්තියත් සමග අරාබි භාෂාවේත් දියුණුවක් ඇතිවූ බව අවිවාදයෙන් පිළිගැනෙන්නකි. ඉස්ලාමීය ශිෂ්ඨාචාරයේ පදනම හා ව්‍යාප්තිය සිදුවූයේ අරාබි භාෂාවෙනි. සාමාන්‍ය එඬේරු ජීවිතයක් ගතකල මිනිස් කොටසකගේ මව් බස වූ අරාබි බස ඉස්ලාමීය ශිෂ්ඨාචාරයේ වර්ධනය සමග අධිරාජ්‍යයක භාෂාවක් ලෙස වැඩුණි. මධ්‍යතන යුගයේ විද්‍යාවේ පැතිරීමට ප්‍රධාන මාර්ගයක් ලෙස වැජඹුනි. ඉස්ලාමය තුලින් බිහිවී නබිතුමාණන්ගේ සෙවන යටතේ වර්ධනයවූ ශිෂ්ඨාචාරය ලොවහි පැතිරෙත්ම අරාබි බසට අරාබිවරුන්ගේත් පමණක් නොව, ලොව පුරා ඉස්ලාමය අදහන, එම ශිෂ්ඨාචාරය යටතේ ජීවත්වන කෝටි සංඛ්‍යාත මුස්ලිම්වරුන්ගේ භාෂාව විශයෙන් අග තැනක් හිමිවින. අරාබි භාෂාවේ පෝෂණයත් වර්ධනයත් ඉස්ලාම් ශිෂ්ඨාචාරය පැතිරීමෙන් සිදුවින.

**The Prophet (sal) said :**

"Whoever goes to the foreteller (astrologer) of the future and asks him about anything and believes his statement to be true, his forty days prayers will not be accepted.

*(Al-Hadis-Muslim)*

**The Holy Prophet said :**

"God never looks towards your faces and riches but He always looks only towards your hearts, your sincerity, and the *nature* of your Deeds!"

*(Al-Hadis-Muslim)*

# நம் சிந்தனைக்கு

எம். பீ. நூர் முகமட்
கணிதம், புள்ளி விபரவியல்,
இரண்டாம் வருடம்.

இன்றைய இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் கூட மதம் என்றாலே அலர்ஜிதான். காலங்கடந்த கோட்பாடுகளை அது கொண்டுள்ளது என்று அவர்கள் கருதுகின்றார்கள். மதம் என்பது மனிதனின தனிப்பட்ட வாழ்வோடு மட்டுமே சம்பந்தப்பட்டது; நான்கு சுவர்களுக்கு இடையே மாத்திரம் வைத்துப் போஷிக்கப்படவேண்டியது; மனிதனின் ஆன்மீக விடுதலைக்கான ஒன்று என்ற அளவிலேயே நம்மில் படித்தவர்கள் முதல் பாமரர்கள் வரை நம்புகின்றார்கள். இந்தப் பொருள் வரையறையின்படி இஸ்லாம் நிச்சயமாக ஒருமதமாக இருக்க முடியாது.

ஆனால் இஸ்லாம் மனித ஆன்மாவின் விமோசனத்திற்கு மட்டும் வழிகாட்டுவதோ அல்லது மனிதனின் தனிப்பட்ட வாழ்வோடு மட்டும் சம்பந்தப்பட்டதோ அல்ல. அது மனித சமுதாயத்தின் முழு வாழ்க்கையையும் மாற்றி அமைக்க விரும்பும் புரட்சி இயக்கம். இஸ்லாம் வாழ்க்கையைஆன்மீகத்துறை,உலகாயதத்துறை என்று கூறுபோடவில்லை. சடவாதக் கருத்துகளும், மேல்நாட்டு நாகரிகமும் கூறுவனபோல் உலகாயத வாழ்வை மட்டும் சிறப்புறச் செய்வதனால் உயர்ச்சி பெறலாம் என்று இஸ்லாம் கூறவில்லை.

இன்மை, மறுமையின் விளைநிலம்
(ஹதீஸ்)

லௌகீக வாழ்வை இறைவனின் வழிகாட்டலின் கீழ் வாழ்வதன் மூலமே ஆன்மீக விமோசனம் பெறலாம் என்பதே இஸ்லாத்தின் கொள்கை. ஆன்மீகத்தையும், லௌகீகத்தையும் இஸ்லாம் இணைத்துப் பேசுவதனால் துறவறத்திற்கு இஸ்லாத்தில் கிஞ்சிற்றும் இடம் அளிக்கப்படவில்லை இவ்வாறே உலகமே சதம் என்று வாழ்வதையும் இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

## இஸ்லாம் பற்றிய முஸ்லிம்களின் மனோபாவம்

விஷனிக்கத்தக்க விடயம் என்னவெனில் முஸ்லிம்களே இஸ்லாத்தைப் பற்றி சரிவர அறியாமல் இருப்பதாகும் இஸ்லாம் ஒரு வாழ்க்கை நெறி, மனிதவாழ்வின் சகல துறைகளிலும் பின்பற்றி ஒழுகவேண்டிய சிறப்பான நெறிமுறைகள் இஸ்லாத்தில் உண்டு என்று கூறினால் மூக்கின்மேல் விரலை வைப்பவர்களும் இருக்கின்றார்கள் முஸ்லிம் அல்லாதவர்கள் இஸ்லாம் பற்றி என்ன மனோபாவம் கொண்டுள்ளனரோ அதே மனோ பாவத்தினை முஸ்லிம்களும் கொண்டுள்ளனர். சில பல கிரியைகளை அதாவது ஐவேளை தொழுகை, நோன்பு, ஸக்காத்து, ஹஜ்ஜு இவற்றை நிறைவேற்றி விட்டால் தான் செய்யவேண்டியது எதுவும் இல்லை என்றும், தனக்கு சுவர்க்கம் கிடைத்து விட்டதாகவுமே பெரும்பாலான முஸ்லிம்கள் மனப்பால் குடிக்கின்றார்கள். ஆனால் இஸ்லாம் எம்மிடம் இவற்றை மாத்திரம் எதிர்பார்க்கவில்லை. குர்ஆன் இயம்புகின்றது:

விசுவாசிகளே! இஸ்லாத்தில் பூரணமாக நுழைந்துவிடுங்கள். (குர்ஆன் 2:208

நம்பிக்கை கொண்டவர்களைப்பார்த்து இறைவன் பூரணமாக இஸ்லாத்தில் நுழைந்து விடும்படி ஏவுகின்றான் அல்லாஹ்வை நாங்கள் பள்ளிவாயலில் மட்டும் எஜமானனாக ஏற்றுக்கொள்ள இஸ்லாம் கூறவில்லை. வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும், சந்து பொந்துகளிலும், ஒவ்வொரு திருப்பங்களிலும் அல்லாஹ்வையே எங்கள் எஜமானனாக ஏற்றுக்கொள்ளும்படி இஸ்லாம் பணிக்கின்றது மனிதன் ஆட்சிபீடத்தில் இருந்தாலும் சரி, நீதி வழங்கும் நிலையில் இருந்தாலும் சரி, வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தாலும் சரி, கல்விச் சாலையில் இருந்தாலும் சரி, கூட்டத்திலே இருந்தாலும் சரி எந்நிலையிலும் அவன் அல்லாஹ்வையே எஜமானனாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இதைவிடுத்து மனிதன் நீதிவழங்கலில் வேறுயாரின் சட்டங்களை ஏற்றுககொண்டாலும், பொருளாதாரக் கொள்கையில் மார்க்ஸ் அல்லது ஏன்ஜல்ஸ் ஐ ஏற்றுக்கொண்டாலும் அல்லது தனது ஆசையை வழிகாட்டியாக அவன் ஏற்றுக் கொண்

டாலும் அங்கே அவன் இறைவனுக்கு மாறு செய்கின்றான்.

> எவர்கள் இறைவன் இறக்கிவைத்ததைக் கொண்டு தீர்ப்பளிக்கவில்லையோ அவர்கள் நிச்சயமாக நிராகரிப்பவர்களே. (குர்ஆன் 5:44)

> எவன் இஸ்லாத்தை விட்டு அந்நியர்களைப் பின்பற்றுகின்றானோ அவன் அவர்களையே சார்ந்தவனாவான்
> (ஹதீஸ்)

## முஸ்லிம்களின் நிலை

முஸ்லிம்கள் இன்று உலகில் 80 கோடிக்கு மேலாக பரவலாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் நிலையோ பரிதாபகரமானது முஸ்லிம்களின் வாழ்க்கையில் இருந்து இஸ்லாத்தினை எடைபோடுவது என்பது இஸ்லாத்தினைப் பற்றி ஒரு கீழான கருத்துக்கே வழிவகுக்கும் முஸ்லிம் இளைஞர்களின் நிலையோ சொல்லும் தரமன்று. படித்தவர்கள் என்று சொல்லப்படுபவர்களும், மற்றவர்களும், மேற்கத்திய நாகரிகம், நாத்திகவாதம், சடவாதக் கருத்துக்கள் ''இஸங்கள்'' என்பனவற்றினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டு அவர்களுக்கும் இஸ்லாத்திற்கும் இடையே சம்பந்தம் இல்லாதவர்கள் போல ஏனோதானோ என்று நடந்து கொள்வதனை நாம் காணக்கூடியதாக உள்ளது.

> (விசுவாசிகளே!) அவ்வாறே (ஏற்றத் தாழ்வற்ற) நடுநிலையான வகுப்பாராகவும் நாம் உங்களை ஆக்கினோம். ஆகவே நீங்கள் (மற்ற) மனிதர்களுக்கு (வழிகாட்டக் கூடிய) சாட்சிகளாக இருங்கள்) (நம்முடைய) தூதர், உங்களுக்கு வழிகாட்டக் கூடிய) சாட்சியாக இருப்பார்.
> (குர் ஆன் 2:143)

பெருமானார் (ஸல்) அவர்கள் தங்கள் சாட்சியத்தினை சொல்லாலும், செயலாலும் நிறைவேற்றி விட்டார்கள். இஸ்லாமிய வாழ்க்கை நெறிதான் உலகின் சுபீட்சத்திற்கு, உலகின் சமாதானத்திற்கு மக்களின நிர்மதியான வாழ்க்கைக்கு சரியானது பொருத்தமானது என்று காட்டிவிட்டார்கள். அதன் காரணமாகவே நாங்கள் முஸ்லிம்களாக இருக்கின்றோம். ஆனால் அதேசாட்சியத்தை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு உம்மத்தினர்களாகிய எங்களுக்கு உரியது. இன்று எமது உம்மத்தினர் சாட்சியத்தினை சரியாக நிறைவேற்றுகின்றார்களா என்று சிறிது சிந்தனை செய்து பாருங்கள். முஸ்லிம் அல்லாதவர்கள் என்னென்ன பிழையான காரியங்களைச் செய்கின்றார்களோ அதனைவிட மோசமான காரியங்களை முஸ்லிம்கள் செய்கின்றார்கள் சொல்லாலும், செயலாலும் நாங்கள் இஸ்லாத்தினைப்பற்றி சரியான சாட்சியத்தினை எடுத்துவைப்பதனை விடுத்து பிழையான சாட்சியத்தினை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். ஈழத்திருநாட்டில் கூட முஸ்லிம்களுக்கு அன்று இருந்த கண்ணியம் இன்று இல்லை. அன்று முஸ்லிம்களிடம் இருந்த சில பல நல்ல பண்புகள் காரணமாக சிங்கள அரசர்கள் அவர்களை கௌரவித்தார்கள்.

அன்று வாக்கு மாறாதவர்களாக முஸ்லிம்கள் இருந்தார்கள். இன்று ..? வங்கிகள் இல்லாத காலத்தில் மற்றவர்களின் அடமானப் பொருட்களை முஸ்லிம்கள் பாதுகாத்துக் கொடுத்தார்கள்; நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக முஸ்லிம்கள் இருந்தார்கள்; வர்த்தகத்தில் இஸ்லாம் கூறிய முறை அன்று முற்றாக இருந்தது. இன்று பொய் சொல்லாமல் வர்த்தகம் செய்யமுடியுமா? என்று கேட்கின்றனர். அன்று இருந்த முஸ்லிம்களின் நிலைக்கும் இன்றைய முஸ்லிம்களின் நிலைக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு. நேர்மையான வர்த்தகர்கள் மூலமாக இஸ்லாம் பரவவில்லையா? அல்பர்பரி (ரஹ்) மூலமாக மாலைதீவு முஸ்லிம் நாடாகவில்லையா? தனி ஒரு வர்த்தகரால் இந்தோனீசியா முஸ்லிம் நாடாகவில்லையா?

இன்று முஸ்லிம்களாக நாம் இருந்து கொண்டு இஸ்லாத்தை எதிர்க்கின்றோம்; இஸ்லாமிய வாழ்க்கை நெறியைப் பின்பற்றத் தயங்குகின்றோம்; இஸ்லாத்திற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லாதவர்கள் போல் நடக்கின்றோம். மேலும் ஒருபடி முன்னே சென்று இஸ்லாத்தின் அடித்தளத்தினையே தகாக்கும் அளவிற்கு, நாத்திகவாதத்தை முஸ்லிம்களிடையே பரத்துகின்றோம் மேற்கத்திய ''இஸங்களுக்கு'' விசுவாசமாக இருந்துகொண்டு அதற்காகவே தங்களை அர்ப்பணிக்கும் அளவிற்கு முஸ்லிம் பெயர்தாங்கிகள், முஸ்லிம்களில ''படிகதவர்கள்'' என்று தம்மை அழைத்துக் கொள்ளும் ஒருசில கோடாரிக் காம்புகள் அதித பிரயத்தனம் செய்து கொண்டிருப்பதையும் இன்று நாம் கண்டு கொண்டுதான் இருக்கின்றோம்

*Visit for your next suit*

- SLACKS
- SHIRTS
- SHORTS
- CHILDRENS GARMENTS

# REFINE & Co.

40, Grand Bazaar JAFFNA,

GENTS & LADIES

FASHIONABLE

TAILORING

# REFINE

DRESS MANUFACTORY

3, Jummah Mosque Lane

JAFFNA.

*Visit Us For Your Requirements*

*in*

- AGRO CHEMICALS
- GROCERIES
- MEDICINE AND DRUGS
- SCHOOL STATIONERY
- HARDWARE AND ELECTRICAL GOODS.

# LATIFFA STORES

MAIN STREET;

SAINTHAMARUTHU-5

T. N. 333

---

FORMICA SHEETS

8' × 4' AND

CUT PIECES

*Visit*

# LANKA HARDWARE

198, PRINCE STREET,

PETTAH,

COLOMBO.

இஸ்லாத்தைப் பற்றி புகழ்ந்து கூறிய அறிஞர் பெருமக்களுள் ஜார்ஜ் பெர்ணாட்ஷா அவர்களும் ஒருவர். ஒருமுறை அவர்களிடம் இஸ்லாத்தைப் பற்றி இவ்வளவு தூரம் புகழ்ந்து பேசுகின்றீர்களே அந்த இஸ்லாத்தை ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை? என்று கேட்கப்பட்டது. நான் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளாததற்கு முஸ்லிம்கள் தான் காரணம் என்றே அவர் கூறியுள்ளார்.

முஸ்லிம்களின் நிலை இன்று வைக்கோற் போரின்மேல் உள்ள நாயின் நிலையை ஒத்தது. அவர்கள் இஸ்லாத்தைப் பின்பற்றுவதும் இல்லை பற்ற மக்களுக்கு இஸ்லாத்தைப் பின்பற்ற விடுவதும் இல்லை. நாங்கள் இஸ்லாமிய வாழ்க்கை நெறியை சரிவரப் பின்பற்றினால்தானே மற்றவர்கள் அதில் உள்ள இன்பத்தினை உணர்வார்கள்.

இஸ்லாமிய வாழ்க்கை நெறி பேணப்பட்டு உலகில் ஸ்தாபிக்கப்படுமேயானால் அவ் வாழ்க்கை முறையை ஏற்றுக்கொண்ட மக்களின் நிம்மதியான வாழ்வினை, ஒழுக்கத்தினை, சகோதரத்துவத்தினை, உலகளாவிய அன்பை மற்ற மக்கள் அனுபவரீதியாக உணரக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். இப்படியான சந்தர்ப்பம் அமைந்தால் குர்ஆனில் கூறப்பட்ட எமது கடமையாகிய ''சாட்சியத்தை'' சரியான முறையில் நாம் நிறைவேற்றியதாக இருக்கும். எனவே நாம் இஸ்லாமிய வாழ்க்கை நெறியை வாழ்ந்து காட்டவில்லை என்றால் அதன் சுவையை மற்றச் சகோதரர்கள் எவ்வாறு உணர முடியும்? இந்நிலையை வைக்கோற் போர் நாயின் நிலையைத் தவிர வேறு எதற்கு ஒப்பிடலாம் இஸ்லாமிய வாழ்க்கை நெறியை நாம் பின்பற்றாமலும், மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தாமலும் இருப்பதன் நஷ்டத்தை இன்று நாம் பிரத்தியட்சமாகக் காண்கின்றோம்.

## இன்றைய உலகநிலை

விஞ்ஞானம் உச்ச நிலையை எட்டிவிட்டதாகக் கூறப்படும் இந் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் உலகிலே என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதனை சிந்தனை செய்வது ஒவ்வொருவரினதும் கடமையாகும்

1967-ம் ஆண்டு ஆரம்பமான மத்திய கிழக்கு யுத்தமும் இழுபறி நிலையில் உள்ள சமாதானப் பேச்சுவார்த்தையும் உலக சமாதானத்திற்கு பெரும் சவாலாக உள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. சோமாலிய எதியோப்பிய எல்லைத் தகராறு, தென்னாபிரிக்க ரொடீசிய நிறவெறி, இத்தாலியில் அல்டோ மோரோ படுகொலை, ஆப்கானிஸ்தான், யெமன் நாடுகளில் புரட்சி, இலங்கையிலும், இந்தியாவிலும் இனக் கலவரங்கள், கொலை, கொள்ளை, நாசகாரச்செயல்கள், விமானக் கடத்தல்கள், கொலைப் பயமுறுத்தல்கள் என்பன ஒவ்வொருநாளும் பத்திரிகைவாயிலாகவும், வானொலி மூலமாகவும் கேட்டும் கேட்டு மறந்துபோன விடயங்கள் ஆகும்.

இங்கு பொதுவாக மனிதன் ஏன் மனிதனை அழித்துக்கொள்கின்றான் என்ற கேள்வி எழுகின்றது. மனிதன் இறைவனின் வழிகாட்டலை விடுத்து தனது ஆசையையும், மனிதன் தீட்டிய திட்டங்களையும் பின்பற்ற ஆரம்பித்ததுதான் இந்த குழப்ப நிலைக்கு மூலகாரணமாகும். ஆசை ஒரு நாளும் மனிதனை நேரான பாதையில் இட்டுச்செல்லாது. மனிதன் குறையுடையவன். வரையறுக்கப்பட்ட ஆற்றல்களைக் கொண்டவன். வரையறுக்கப்பட்ட அவனது அறிவைக் கொண்டு நித்திய வாழ்வை வகுப்பது என்பது முடியாத காரியம். எனவே சகல ஞானங்களும் பொருந்திய, விருப்பு வெறுப்பற்ற முக்காலங்களையும் அறிந்த ஏக இறைவன் அருளிய வழிகாட்டலை கைவிட்டதுதான் இன்றைய உலகின் குழப்ப நிலைக்கும், மனிதனின் நிம்மதியற்ற வாழ்க்கைக்கும் மூல காரணமாகும்.

இன்று உலகில் எத்தனையோ மதங்கள் இருக்கலாம். கொள்கைகள், சித்தாந்தங்கள், ''இஸங்கள்'' என்பன ஆட்சி செலுத்தலாம். ஆனால் கேத்திர கணிதத்தின் (Geometry) அடிப்படை உண்மைகளின்படி ஒரு புள்ளிக்கும் இன்னொரு புள்ளிக்கும் இடையே நேர்கோடு ஒன்றே ஒன்றுதான் இருக்க முடியும் எனவே இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே நேரான வழிகாட்டல் ஒன்றே ஒன்றுதான் அதுதான் தீனுல் இஸ்லாம். இஸ்லாம்தான் நேரான வழிஎன்றும் குர்ஆன் கூறுகின்றது, விருப்பு வெறுப்பற்ற முறையில் ஒருவன் தன் ஆராய்ச்சியைத் தொடங்குவான் ஆயின் இஸ்லாம்தான் நேரிய மார்க்கம் என்பதனைக் கண்டுகொள்வான்

இஸ்லாத்தின் கண்ணோட்டத்தின்படி உலகில் இரண்டே இரண்டு பிரிவுகளே இருக்க முடியும். ஒன்று அல்லாஹ்வை ஏற்

றுக்கொண்டவர்கள், மற்றது ஏற்றுக் கொள்ளாதவர்கள். இறைவன் கூறுகின்றான்.

> (உலகில் இறைவனுடையது தவிர மற்றவரின் சட்டங்கள் பின்பற்றப்படுகின்ற) அட்டூழியம் ஒழியும்வரையிலும், அல்லாஹ்வுடைய தீன் (மார்க்கம்) முற்றிலும் நிலைபெறும் வரையிலும் (அதாவது இறைவனுடைய சட்டங்கள் மட்டுமே பின்பற்றப்பட வேண்டும் என்னும் சூழ்நிலை உருவாகும் வரையிலும்) அவர்களோடு போராடுங்கள்,
>
> (குர்ஆன் 8:39)

இஸ்லாமிய வாழ்க்கை நெறியை உலகிலே ஸ்தாபிப்பதற்காக முஸ்லிம்கள் ஜிஹாத் புரிய வேண்டும் என்பதே அல்லாஹ்வின் விருப்பமாகும்.

புரட்சிகரமான கடும் உழைப்புக்கும் தான் விரும்பும் புரட்சித் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவரும் நோக்கத்தை அடைவதற்காகவும் இஸ்லாமிய இயக்கம் தன் சக்தி முழுவதையும் பயன்படுத்துவதே ஜிஹாத் எனப் பொருள்படும்.

"Jihad to exert one's utmost endeavour in promoting a cause"

"ஒரு குறிக்கோளை அடைவதற்காக தன் சக்திகள், திறன்கள் அனைத்தையும் முழுமையாகப் பிரயோகித்தல் என்றும் ஜிஹாதிற்கு பொருள் கொள்ளலாம்.

இடையறாத போராட்டத்தில், முயற்சியில் இஸ்லாமிய வாழ்க்கை நெறியை ஸ்தாபிப்பதன் மூலமும், இஸ்லாமிய வாழ்க்கை நெறியின் மேன்மையை மற்ற மக்களும் ஏற்றுக்கொண்டு வாழ்வதன் மூலமுமே மனிதன் ஏங்கிக் கிடக்கும் சமாதானம், சாந்தி, சுபீட்சவாழ்வு என்பன கிடைக்க முடியும்.

*With Best Compliments from*

**M. M. IZZATH**

No. 17, GALENMABER PLACE,
WELLAWATTE,
COLOMBO – 6

நங்கையர் விரும்பும் நவநாகரீக

நகைகளுக்கும்,

வைரங்களுக்கும்,

புகழ்பெற்று விளங்கும்

ஒரே ஸ்தாபனம்

# கே. என். எம். மீரான் சாஹிப்

## தங்கப்பவுண் நகை மாளிகை

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

Phone . 585

# K. N. M. MEERAN SAHIB

Jewellers & Diamond Merchants

SOVEREIGN PALACE

**Kannathiddy,**

**JAFFNA.**

**'MISKINS'**

*Manufacturers of:*

**Readymade Garments**

GENTS OUT FITTERS

&

LADIES TAILORS

27, Grand Bazaar,

**JAFFNA.**

முகம்மது கனி
வைத்திய நிலையம்

என்றும் பாவியுங்கள் !
எங்கும் கிடைக்கும் !!

சஞ்சீவி தாழம்பு தைலம் !
தாழம்பு பற்பொடி !!
தாழம்பு வச்சாலு களிம்பு !!
நில வுஸ்திரிகா தைலம் !

தயாரிப்பாளரும் விநியோகஸ்தரும்
டாக்டர் : ஐ எல். பி எம். இஸ்மாயில்
(*R.S.M P.Ceylon*)

**'முகம்மது கனி
வைத்திய நிலையம்'**

சாய்ந்த மருது - 3
கல்முனை

வட இலங்கையில் புகழ் பெற்ற
புகைப்பட நி லயம்

**பாரத் ஸ்ரூடியோ**

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
போன் : 252

For anything in

**Photography**

Always Remember.

*With Best Compliments of*

**Sahilas**

21, Main Street
KALMUNAI.

# இஸ்லாமிய இலட்சியப் பெண்

செல்வி பாக்கியா ஜெலீட்
*மனிதப் பண்பியல் பீடம்*

பெண்ணினத்தின் பெருமையும், சுதந்திரமும், சமத்துவமும் பற்றிய கோசங்கள் இன்று வானதிர ஒலித்துக்கொண்டிருக்கின்றன. இன்று பெண்ணினத்திற்கு மதிப்பளித்து, அவர்களின் உரிமைகள் வழங்கப்பட்டு வருகின்றன. எம் பெண் இனத்தின் பெறுமதியையும் அவசியத்தையும் உணர்ந்து சென்ற 1976ஆம் ஆண்டு மகளிர் ஆண்டு எனப் பிரகடனப் படுத்தப் பட்டதைக்கூட நாம் பெருமையுடன் ஏற்றுக் கொள்கிறோம். மகளிர் இயக்கங்களால் முன்வைக்கப்பட்ட பல கோரிக்கைகளை உலகம் சிந்தித்து, அவர்களுக்கு வழங்க முன்வந்துள்ளது. இவை யாவற்றுக்கும் காரணம் உலகம் தாய்க்குலத்தின் சிறப்பினைப்பற்றி சிந்திக்கத் தொடங்கியுள்ளதே ஆகும். ஆனால் இந்தக் கோசங்கள் கனவு நிலையில் கூட இல்லாத காலப் பிரிவில் பெண்ணினத்திற்குப் பெருமையளித்து அதன் உரிமையைப் பேணிக்காத்தது இஸ்லாம். ''மாதாவின் காலடியின் கீழ் சுவர்க்கமிருக்கிறது'' எனப் பகர்ந்து மாதர் குலத்தைப் பெருமைப்படுத்தினார்கள் பெருமானாரவர்கள்.

நாகரிகத்திலும் பொருளாதாரத்துறையிலும் உயர்ந்த நிலையில் திகழ்ந்து கொண்டிருக்கும் எந்த நாட்டிலும் அன்று பெண் உரிமை மறுக்கப்பட்டிருந்தது. காலத்தில் பெண்களுக்கு சகல துறைகளிலும் ஆண்களைப் போன்றே சம உரிமையைப் பெற்றுக்கொடுத்து பாதுகாப்பை அளித்தது இஸ்லாம். அனைத்துக்கும் மேலாக உலக வரலாற்றிலே முதன் முதலாக பெண்களுக்குச் சொத்துரிமை அளித்த பெருமையும் நாயகத் திருமேனியைச் சார்கின்றது. இவை பற்றி டாக்டர் அன்னி பெஸன்ட் கூறிய கருத்து கீழே காணலாம்:

''கிறிஸ்தவத்திலும் இஸ்லாம் பெண்களுக்கு பூரண சுதந்திரத்தை அளிக்கிறது என எப்போதும் நினைக்கிறவன் நான். ஒரு தார மணத்தைப போதிக்கும் மதங்களை விட. இஸ்லாம் தான் பெண்ணுக்கு மேலான பாதுகாப்பை அளிக்கிறது. பெண்களைப் பற்றி திருக்குர் ஆனில் காணப்படும் சட்ட திட்டங்கள் நீதமானவையாகவும் பரந்த நோக்கம் கொண்டவையாகவும் இருக்கின்றன. கடந்த இருபது ஆண்டு காலமாகவே கிறிஸ்தவ இங்கிலாந்து சொத்தின் மீது பெண்களுக்குள்ள உரிமையை உணரத் தலைப்பட்டுள்ளது. ஆனால் இஸ்லாமோ காலாகாலமாக அவ்வுரிமையைப் பெண்களுக்கு அளித்து வந்திருக்கிறது. மேலும் பெண்ணை ஆன்மா அற்றவள் என்று இஸ்லாம் கருதுவதாகக் கூறுவது இஸ்லாத்தின் மீது சுமத்தும் அபாண்டமாகும்.''

(An extract from Annie Besant's "The Life and Teachings of Muhammed, June 1932)

இஸ்லாம் தோற்றுவித்த மறுமலர்ச்சி யுகத்திற்கு முன்பு உலகில் பெண் சமுதாயம் எத்தகையதொரு நிலையில் இருந்த தென்பதை இங்கு நாம் சொல்லிப்புரிந்து கொள்ள வேண்டியதில்லை. உலகின் எந்தக் கோணத்தை நோக்கினும் அங்கெல்லாம் பெண்கள் மதிப்பற்ற பொருளாக, கௌரவம் அற்றவர்களாக, கீழ்த்தரமானவர்களாகக் கருதப்பட்டனர். அன்றைய பெண்களின் நிலையை விளக்குவதற்கு ஒரு சிறந்த உதாரணமாக அரேபியாவின் அன்றைய நிலையை (ஐயாமுல் ஜாஹிலியா காலம்) எடுத்துக்கொள்ளலாம். அவர்கள் பச்சிளம் பாலகர்களை (முக்கியமாக பெண் குழந்தைகளை) உயிருடன் புதைத்தனர். பெண் குழந்தைகள் ஒரு குடும்பத்தில் பிறப்பது அவர்களுக்கு அவமானம் எனக் கருதினர். மேற்கு நாடுகளிலும் கூட பெண்களை ஒரு போகைப் பொருளாகவே பயன்படுத்தினர். இவ்வாறெல்லாம் இன்னலுற்றிருந்த பெண்சமுதாயத்தை விழிப்படையச் செய்து, துயர்துடைத்து, உயர்வளித்துக் காத்தது இஸ்லாம்.

பெண் இனத்திற்கு விடுதலை அளித்துப் பாதுகாத்த இஸ்லாம் இல்லற வாழ்க்கையிலும் நல்லற வழிகளைக் காண்பிக்கத் தவறவில்லை மதிப்பும் மரியாதையும் அற்றிருந்த அன்றைய சமுதாயத்தில் பெண்களை ஆடவர் தாம் விரும்பியபடி விவாகம் புரிவதும் விடுதலை செய்வதும் சகஜமான செயலாக இருந்தது. இதனால் பாதிக்கப்படுபவர்கள் பெண்கள் என்பதைப்பற்றி அவர்கள் சிறிதும் கவலைப்பட்டார்களில்லை.

அன்று அஞ்சாரத்தில் ஊறித் திளைத்திருந்தவர்கள் திருமணம் என்பதை ஒரு சுலபமான காரியமாகவே கருதினர். ஒருவர் தாம் விரும்பிய எத்தனை பெண்களையும் மணமுடித்து இன்பங்கண்டனர். தனக்கு எத்தகைய உறவுமுறைக்குரியவர்களையும் மாற்றானின் தாரம் என்றால் என்ன தன் தாய் என்றால் என்ன, தன் மகளாயிருந்தால் என்ன, தான் விரும்பின் மண முடித்துக் கொண்டனர். இவ்வாறெல்லாம் சீர்குலைந்து சின்ன பின்னப்பட்டிருந்த சமுதாயத்தை வரம்புடையதாக ஒரு கட்டுக்கோப்புக்குள் மாற்றியமைத்தது தீனுல் இஸ்லாம் எனும் உயரிய மார்க்கம்

திருமறை, எவ்வித உறவுமுறை உள்ளவர்களைத் திருமணம் செய்ய வேண்டும் என்பதை தெளிவாக விளக்கியுள்ளது. கீழ் வரும் வசனம் அதற்கு சான்றாகும்.

உங்கள் தாய்மார்களும், உங்கள் புத்திரிகளும், உங்கள் சகோதரிகளும், உங்கள் தகப்பனின் சகோதரிகளும், உங்கள் தாயின் சகோதரிகளும், உங்கள் சகோதரரின் புத்திரிகளும், உங்கள் சகோதரியின் புத்திரிகளும், உங்களுக்குப் பாலூட்டிய (செவிலித்) தாய்மார்களும், பால்குடி சகோதரிகளும், உங்கள் மனைவியின் தாய்மார்களும், (ஆகிய இவர்களை நீங்கள் விவாகஞ் செய்து கொள்வது) உங்களுக்கு விலக்கப் பெற்றுள்ளது. அவ்வாறே நீங்கள் ஒரு பெண்ணை விவாகஞ் செய்து, அவளுடன் நீங்கள் வீடு கூடிவிட்டால், அவளுக்கு முந்திய புருஷனுக்குப் பிறந்த மகளையும் (நீங்கள் விவாகம் செய்வது கூடாது) அவளை விவாகம் செய்தபின்னர், அவளுடன் வீடு கூடாதிருந்தாலோ, (அவளை நீக்கி விட்டு அவளுக்கு முந்திய புருஷனால் பிறந்த மகளை விவாகம் செய்து கொள்வதில்) உங்கள் மீது குற்றமில்லை உங்களுக்குப் பிறந்த குமாரர்களின் மனைவிகளையும் (நீங்கள் விவாகம் செய்து கொள்ள விலக்கப்பட்டிருக்கிறது) இரு சகோதரிகளை, (ஒரே காலத்தில் மனைவிகளாக) ஒன்று சேர்த்து வைப்பதும் கூடாது. இகற்கு முன்னர் நடந்து விட்டவைகளைத் தவிர (அறியாத நிலைமையில் முன்னர் நீங்கள் செய்துவிட்ட தவற்றைப்பற்றி) நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்போனும், கிருபையுடையோனுமாக இருக்கின்றான். (அல்குர்ஆன் 4:23)

இஸ்லாமிய வாழ்க்கைத் திட்டத்தின்படி ஒரு ஆண் தாம் விரும்பிய எத்தனை பெண்களையும் மணமுடித்துக் கொள்ளலாம் எனப் பலர் பிழையான அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளனர். இஸ்லாத்தின் ஆரம்பகாலப் பகுதியில் பல ஆண்கள் யுத்தங்களில் மடிந்தனர். இவ்விதம் தங்கள் கணவரை இழந்த கைம்பெண்களின் வாழ்க்கையை மலரச் செய்வதற்காகவும், ஏழைப் பெண்களுக்குக் கைகொடுத்து உதவுவதற்காகவும், இன்னும் பல காரணங்களுக்காகவும் இஸ்லாத்தில் பலதார மணம் அனுமதிக்கப்பட்டது. ஆனால் அதே வேளையில் அதற்குப் பல நிபந்தனைகளும் வரையறைகளும் வகுக்கப்பட்டுள்ளன என்பதையும் நாம் புரிந்துகொள்ளல் வேண்டும். இன்று உலக சனத்தொகையில் பெண்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது எனவே இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆண்கள் அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டிய நிலையில் உள்ளனர். ஆனால் ஒருவன் இரு மனைவிகளை வைத்திருந்தால் அவ்விருவரையும் ஒரேமாதிரியாக மதித்து அவ்விருவர்களுடன் சமமாக வாழவேண்டும். ஏதும் தவறுகள் நடந்தால் கணவன் இறைவனிடத்தில் குற்றவாளியாக இருப்பான். பெண்களை மணமுடித்து அவர்களுடன் நடப்பது பற்றி இறைவன் திருக்குர்ஆனில் பின்வருமாறு கூறுகின்றான்.

''அனாதைப் பெண்களை விவாகம் செய்து அவர்கள் விஷயத்தில் நீதமாக நடக்க மாட்டோம் என நீங்கள் அஞ்சினால் மற்றப் பெண்களில், உங்களுக்கு விருப்பமானவர்களை இரண்டிரண்டாகவோ, மும்மூன்றாகவோ, நான்கு நான்காகவோ நீங்கள் விவாகம் புரிந்து கொள்ளலாம். எப்போதும் அவர்களுக்கிடையில் நீங்கள் நீதமாக நடந்துகொள்ள வேண்டும். அவ்வாறு நீங்கள் நீதமாக நடக்கமுடியாதெனப் பயந்தால் ஒரே பெண்ணையே விவாகம் செய்து கொள்ள வேண்டும் நீங்கள் தவறு செய்யாமல் இருப்பதற்கு இதுவே சுலபமான வழியாகும்.

(அல்குர் ஆன் 4:3)

இஸ்லாமிய சட்டத்தின்படி ஒருவன், மணமுடிக்குமுன்பு தான் திருமணம் செய்யப்போகும் பெண்ணுக்கு ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தை ''மஹர்'' செலுத்த வேண்டும். அதற்குப் பின்புதான் அவன் அப்பெண்ணை தன் மனைவியாக்கிக்கொள்ள அருகதையுடையவனாவான். அவ்வாறே தான் விரும்பியபடி விவாக விடுதலை (தலாக்) செய்யவும் முடியாது. இஸ்லாம் மிகவும் வெறுக்கும் ஒரு விடயம்தான் இந்த ''தலாக்.'' இவ்விடயத்தில் பெண்ணின் விருப்பமே பிரதானமானதாகும்.

பெண்ணின் சுதந்திரத்தைப் பேணிக் காப்பதற்காக இஸ்லாம் இவ்வாறெல்லாம் சட்டம் வகுத்திருக்கின்றது. இதன்மூலம் ஒழுங்கும், கட்டுப்பாடுமுடைய ஒரு சமுதாயத்தை இஸ்லாம் தோற்றுவித்தது. மேலை நாடுகளிலே நாகரிகம் என்ற போர்வைக்குள் ஒழுக்க சீர்கேடான வாழ்க்கையைக் காண்கிறோம். அவர்கள் பெண்களை வியாபாரப் பொருளாகவும், விளம்பரப் பொருளாகவும், காட்சிப் பொருளாகவும் கருதுகின்றனர். ஓர் ஆடவன் தான் விரும்பிய எந்தப் பெண்ணுடனும் இணைந்து இன்பம் காண்கிறான். ஆனால் இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இஸ்லாம் இதை ஒழித்துக் கட்டிவிட்டது. பெருமானார் போதனைகளும், சாதனைகளும் திருமறையின் திருவசனங்களும் காட்டிய வழியைப் பின்பற்றி இன்றைய இஸ்லாமிய சமுதாயம் மறுமலர்ச்சிச் சமுதாயமாக உருப்பெற்று உலகிற்கோர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது விதவைப் பெண்ணுக்கும் மறுமணம் புரிந்து வாழ இஸ்லாம் வழி காட்டுகின்றது. ''உங்கள் மனைவியர்களிடம் மிக்க நல்ல முறையில் பழகுபவர்களே உங்களுள் சிறந்தவராவர்'' என்ற பெருமானார் (ஸல்) அவர்களின் கூற்றும் இங்கு கவனிக்கவேண்டியுள்ளது.

இன்றைய சமுதாயத்தில் முக்கிய பங்கு வகிக்கும் பெண்களை சரியான முறைப்படி நடாத்துவது ஒவ்வொரு ஆடவர்மீதும் சுமத்தப்பட்ட பெரும் பொறுப்பாகும். ஒரு சமுதாயம் சிறந்த முறையில் உருப்பெற பெண்களே முக்கிய பங்கு வகிக்கின்றனர். தம் கையில் கிடைக்கும் குழந்தைகளை சரியான வழியில் நெறிப்படுத்தி, நல்வழியில் ஆக்கும் பொறுப்பும் இவர்களின் கையிலேதான் உண்டு. எனவே பெண்குலமே, சமுதாயத்தின் ஜீவநாடியே, எமது எதிர்கால வாழ்க்கையைச் சிறந்த முறையில் அமைத்து, எமது சமுதாயப் பூங்கா திறன்பட செழித்து ஓங்க, அன்பு நீர் பாய்ச்சி, மார்க்க உணர்வு எனும் ஏகத்துவத் தென்றலால் குளிரச் செய்து அந்தப் பூங்காவை வளமுள்ளதாக்கி, இலட்சியப் பாதையில்வீறுநடை போடுவோமாக.

*Visit*

**M. A. S. CADER**

201, MAIN STREET,
MAWANELLA.

உங்களின்
உற்பத்திப் பொருட்களை
நியாயமான விலையில்
கொள்வனவு செய்வதற்கு
நம்பிக்கையானதும்
நாணயமானதுமான
ஒரே ஒரு இடம்.

M. A. S. CADER
201, Main Street,
Mawanella.

WITH BEST COMPLIMENTS FROM

**THAHIR** *Jewellery Merchant*

PERAKUMBA STREET,
KURUNEGALA.

# அனைத்துலக மனிதனை நோக்கி அல்லாமா இக்பால்

எம். ஸீ. எம். ஹஸன்
மனிதப் பண்பியல் பீடம்

ஆத்மீக வாதிகள் பலர் உலகைப் பற்றிக் கூறுகையில் உலகம் சதம் அல்ல; இறைவன் உலகவாழ்வின் இன்பங்களை அனுமதிக்கவுமில்லை என்றெல்லாம் கூறிக் கொண்டு உலகிலேயே வாழ்கின்றார்கள். மனிதனின் இலட்சியம் உலகவாழ்வு அல்ல. எனினும் இலட்சியத்தை யடைவதற்கு உலகமே ஒரு துணைக்கருவி இத்துணைக் கருவியில் நமக்கு அக்கறையில்லையென்றால் இலட்சியத்தை எப்படி அடைதல் இயலும்? என்பது அல்லாமா இக்பால் மனிதனை நோக்கி எழுப்பும் சுதந்திர வேட்கையாகும்.

மனிதனின்றேல் சமுதாயம் இயங்கமுடியாது. சமுதாயமின்றேல் மனிதன் தன் இலட்சியத்தை அடைதல் இயலாது. அவ்வாறு மனிதன் தனித்து நின்று அடையக் கூடியது ஒன்று இருக்குமாயின் நிச்சயமாக அது உண்மையான இலட்சியமுமல்ல; சமூகம் அதனால் பயன் பெறப்போவதுமில்லை என்பதை விளக்குவதன் மூலம் மனிதனைச் சமுதாயத்தில் ஓர் அங்கமாகவே இக்பால் நோக்குகின்றார்.

மனிதனின் இலட்சியம் அவனுடைய தனித்தன்மை வளர்ச்சியில் தங்கியுள்ளது. இவன் வளர்த்துக் கொள்ளும் தனித்தன்மையிலிருந்து சூழல் வயப்படுத்தப்பட்டு செம்மையான வாழ்வைக் கற்றுக்கொள்ள முடிகின்றது. இந்தவாழ்வின் பூரணத்துவம் ஆத்மாவை அறிவதால் நிறைவு பெறுகின்றது. முதலில் தன்னையறிகிறான். தன்னையறிவதன்மூலம் தன் இறைவனை அறிகிறான். இவ்விலட்சியத்தை மனிதன் அடையவேண்டுமென்றே அல்லாமாவின் கவிதைத்துவம் செயற்படுகின்றது.

இலட்சியங்களையும் மதிப்புக்களையும் உண்டாக்கி அவற்றை எய்தமுயற்சித்தலே அன்பின் குணவியல்பாகுமென்றார் இக்பால்.

அன்பு பற்றிய அவரின் கருத்து இதனை நிரூபிக்கின்றது:

''அறிவு வாழ்க்கையின் பாதுகாப்
பான ஆயுதம்
அகத்தை வளர்க்க உதவும் கருவி
அகம் என்னும் ஒளி விடும்முனை
நம் மண்ணுள் உள்ள ஜீவசுடராகும்
அன்பால் அஃது அதிக உறுதியா
கின்றது''
(அஸ்ராரே குத்ச)

அறிவு வாழ்க்கையைப் பாதுகாக்கிறது. உள்ளத்தை வளர்க்கின்றது. எனினும் அன்புதான் அதற்கு ஒளியேற்றுகின்றது. அன்பின் மூலம்தான் அறிவு உண்மையை உணர்கின்றது என்ற கருத்தை இக்பாலின் கவிதைகள் சொட்டுகின்றன. ஆத்மீகத்தத்துவத்தில் நம்பிக்கைவைத்த உலகம் அழிவுக்கான ஆயுதங்களை உற்பத்தி செய்து பெருமை கொள்ளும் போது அன்பு கலவாத அறிவின் பரிணம நிலையை இன்று காண்கின்றோம்.

அறிவின் உச்சமான வளர்ச்சியால் ''அதிகார மமதையும் ஆதிக்க வெறியும் கொண்ட இவ்வுலகை அதன் போக்கில் விடுங்கள். எங்களோடு அதற்கு எதுவிதமான உறவும் இல்லை'' என்று அவரோகணக்குரல் எழுப்புகின்றார்கள் விதிக்குத் தாம் அடிமை என்று கூறிக்கொள்ளும் ஞானிகள் இவர்களது கருத்துக்கு மாறாக யாதார்த்தத்தைப் புரிந்து கொள்வதற்காக இரண்டு விதமான அணுகுதல் முறைகள் உண்டு என்றார் அல்லாமா இக்பால். ஓர் அணுகுதல் முறை, ஏதுவான காரணத்தை ஆய்தல் மூலமாக; விவேகத்தின் மூலமாக; பயிற்றப்பட்ட சிந்தனையின் மூலமாக அணுகும் முறையாகும். இதுவே நமக்கு அறிவையும்விஞ்ஞானத்தையும் அளித்தது. மற்ற அணுகுதல்முறை இயல்பான ஞானத்தின் மூலமாக, இதய பாஷையின் மூலமாக, அன்பின் மூலமாக அணுகுதல் முறையாகும். இவ்விரு அணுகுதல் முறையும் கொண்டு விதிக்கு மனிதன் அடிமையல்ல என்று மேலும் விரித்துரைக்கின்றார். அழியக் கூடிய மனிதனால் ஒன்றும் ஆவதில்லை. அவன் அலைகடல் துரும்பு; புயலில் சிக்கிய தூசு; விதிக்கு அவன் அடிமை என்ற போதனைகளால் மனிதன் ஒதுக்கப்படுகிறான்.

அவ்வாறான மனிதனை நோக்கி அல்லாமா அவர்கள் "உன்னை முதலில் அறிந்து கொள்; உன் ஆற்றலை அறிந்து கொள்; உலகத்திலே உள்ளவையெல்லாம் உனக்காக, உன் சேவைக்காகப் படைக்கப்பட்டவை. முழந்தாளைக் கட்டிக்கொண்டு, "நம்மால் ஆவதென்ன" என்ற சோம்பல் வேதாந்தம் பேசுவது சமுதாய அழிவை முரசொலிக்கும் மரணச்செய்தியாகும்" என்று வீறுகொள்ளச் செய்கின்றார்.

சோம்பேறியைக் கண்டு வெறுப்படைந்த கவிஞர் அதே மனிதனை நோக்கி "ஊர்க் குருவிபோல் மேட்டில் கூடு கட்டாதே. இராஜாளியைப் போல மலையுச்சிக்குப் போ. அஞ்சத்தகும் ஆரணியத்தில் அரசு செலுத்துவதனாலன்றோ இராஜசிங்கம் போற்றப்படுகின்றது தம்மிடமுள்ள சக்தி, அதனைப் பற்றிய தன்னுணர்வு ஆதியவைவையே சிங்கத்துக்கும் இராஜாளிக்கும் இத்தகைய பெருமையை அளிக்கின்றது. நீ மட்டும் ஏன் விதி! விதி! என்று மதிமருண்டு நிற்கிறாய். விதி உன்னை என்ன செய்யும்? இறைவனைத்தவிர உலகிலே வேறெந்தச் சக்திக்கும் அடிபணியமாட்டேன்! என்று நெஞ்சுரம் பெறு; பிறகு விதி உனக்கு அடிமையாகும். உன் ஆத்மசக்தி மகத்தானது; அதனை உணர்ந்து கொள்; நீ ஏற்றம் பெறுவாய்" என்று தத்துவ அறிவுரைகளை இக்பால் வழங்குகின்றார்.

தன் வலிமையுணர்ந்து தன்னுணர்வு பெற்று தன் ஆதமபலம் கொண்டு செயல்படும் மனிதனைத் தடுத்து நிறுத்தும் சக்திய உலகில் கிடையாது என்பதை இக்பால் "பாலேஜிப்ரீல்" கவிதை நூலின் மூலம் வலியுறுத்துகின்றார்.

"உன் ஆத்ம வலிமையை எந்த அளவுக்கு நீ பயன்படுத்த வேண்டுமென்றால் உனக்கு எதனையும் விதிக்குமுன்னர் இறைவன் தன் அடியானை உன்னிடம் உன் விருப்பமென்ன? சொல். அப்படியே உன்விதியை அமைக்கிறேன் என்று கேட்கவேண்டும்." இந்த அளவுக்கு மனிதன் தன்வாழ்க்கையை தன் முயற்சியால், தன்உழைப்பால் வகுத்துக் கொள்ளமுடியும் என்று இக்பால் நம்புகின்றார். இயற்கைச் சக்திகளைத் தன்பணிக்கு ஆளாக்கும் ஆற்றல் படைத்த மனிதன் சீருடையவன்; சிறப்புடையவன். இப்பெருமிதத்தில் இறைவனிடமே உரையாடுகின்றார்.

"இரவைப்படைத்தாய் நீ எழில்விளக்
கைச் சமைத்தேன் நான்
மண்ணைப்படைத்தாய் நீ மட்பாண்டம்
சமைத்தேன் நான்
காடும் மலையும் பாலை மண்ணும்
படைத்தாய் நீ
கவினுறு மலர்வனங்களும் கனிகள்
நிறைத் தோட்டங்களும்
பூம்பொழிலும் சமைத்தேன் நான்
கல்லிலிருந்து கண்ணாடி சமைப்பவன்
நான்
கடும் விஷத்தையும் சஞ்சீவியாக்குப
வன் நான்"

மனிதனிடம் அமைந்திருக்கும் தெய்வீகக் கலையை திறமையென்னும் சக்தியோலிட கவிஞர் கூறுகின்றார் ஒவ்வொரு கலையும் அடிப்படை உண்மைகளை ஊடுருவிச் செல்லவேண்டும். மக்கள் வாழ்வோடு கலந்து பொலிவு பெறவேண்டும் என்று இக்பாலின் சிந்தனை கூறுகின்றது. மேற்கூறிய அம்சங்கள் சேர்ந்து புருஷாத்துவம் அல்லது பூரணமனிதனைச் சிருஷ்டிக்கின்றது.

"படைக்கப்படாததும் தெய்வீகமானதுமான தன் அமரத்துவ ஆத்மாவை அறிந்துகொள்பவனே இலட்சிய மனிதனாவான்" என்று கூறுகின்றார் இக்பால் இந்த அமரத்துவ ஆத்மாவினுள் மறைந்தும் மறையாமலும் நிற்கும் அந்த சக்தியை அறிந்து கொள்ளப் புறப்படும் மனிதனிடம் "அவனைத்தேடு உன்னை அறிவாய்; உன்னைத்தேடு அவனை அறிவாய்: தன்னையறிந்தவன் தன் நாயனையறிந்தவன்." என்னும் இஸ்லாம் மதசித்தாந்தத்தையே வலியுறுத்துகின்றார். தன்னைத்தானே ஆட்சி செய்யும் நிலை அதாவது மனச்சக்தி நிறைய உள்ளவனே இந்த இலட்சிய மனிதனாக விளங்கமுடியும் என்ற உணர்ச்சி தரும்பும் உயரிய கருத்துக்களோடு உலகை நோக்குகின்றார்.

குறிப்பு:-

கருத்துக்கள் யாவும் அல்லாமா இக்பால் கவிதை நூல்களின் விமரிசனப் பகுதிகளின் மூலம் எடுக்கப்பட்டவையாகும்.

*Donated By:*

# *Zarook Hadjiar & Sons*

35, YOOSUF AVENUE,
CHAINA FORT,
BERUWELA.

## *Hotel* WELIGAMA

**Grand Bazaar,**
**Mannar.**

*Special Tea*
*Special Buriyani*
*Orders for*
*Cakes, Sweets*
*etc.*

*With Best Compliments from*

## JIFFRIYA STORES

**17, RAWANA ROAD,**
**KATUGASTOTA.**

Dial: 9219

# இஸ்லாத்தின் பெருமை பற்றி பிற மதத்தினர் அளிக்கும் நற் சான்றுகள்

தொகுத்தவர் : ஸியாட் எம். தாஹா
விஞ்ஞானபீடம், முதலாம் வருடம்

1. டாக்டர் S. ராதா கிருஷ்ணன்

மனிதர்கள் யாவரும் ஏக சகோதரர்களே என்னும் தத்துவம் இஸ்லாத்தில் தேசிய, இன எல்லைகளைத் தாண்டி நிற்கும் ஓர் உயரிய கொள்கையாக இயங்குகிறது என்பதை மறுக்கஇயலாது வேறு எம்மதமும் தன்னகத்தே கொண்டிராத சில மிக்க கொள்கை இது. [மேற்கோள் :"மதத்தின் மேற்கும் கிழக்கும்"]

2. மகாத்மா காந்தி:-

*1.* ஒரு மகத்தான இலட்சியம் வைத்திருப்பவன் அதை எத்தனை பேர் ஆதரிக்கிறார்கள் என்று கவலைப்பட மாட்டான். திரளான நபர்கள் முஹம்மது நபியை விரட்டிச் சென்ற போது அவருடன் ஓடிய சீடர் அபூபக்கர் நடுங்கினார். "இத்தனை பேரை எதிர்த்து நாம்இருவர் என்ன செய்ய முடியும்," என்றார் அபூபக்கர். "இல்லை நாம் மூவர் இருக்கிறோம். நம்முடன் கடவுள் இருக்கிறார்" என்று பதிலளித்தார் நபிகள் நாயகம்.

2. "இஸ்லாம் உலகத்தையே ஆக்கிரமித்துக் கொண்டது. குர்ஆனை நான் பக்திப் பரவசத்துடன் படிக்கும் போது உள்ளத்திலே ஒருவித சாந்த உணர்ச்சி உண்டாவதை அனுபவத்திலே காண்கிறேன் எனது இந்து சகோதரர்கள் பரிசுத்த உள்ளத்துடன் குர்ஆனைப் படிக்கப் புகுந்தால் இஸ்லாமிய தத்துவத்தின் இணையற்ற தன்மையும் உண்மை உபதேசமும், வெளியாவதை உணர்வார்கள்.

3. அறிஞர் அண்ணாத்துரை

*[7/10/1957 சென்னை கடற்கரை மீலாத் விழாவில் ஆற்றிய சொற்பொழிவு]*

இஸ்லாத்தின் உயரிய பண்புகள் இதற்கு முன் உலகுக்கு எவ்வளவு அவசரமாகத் தேவைப்பட்டனவோ, அதைவிட இப்பொழுது தத்துவக் காட்டுக்குள் ஒளி தேடி அலையும் இந்த உலகுக்கு மிக அவசரம் அவசரமாகத் தேவைப்படுகின்றன.

இஸ்லாமிய மார்க்கம் ஏன் சிறந்ததெனப் போற்றப்படுகிறதென்றால் மனிதனுக்கு என்ன என்ன ஐயப்பாடுகள் தோன்றுகின்றனவோ அவற்றையெல்லாம் நீக்கக் கூடிய வகையில் அதிக நல்ல கொள்கைகள் அதில் இருக்கின்றன. நபிகள் நாயகத்தின் போதனைகளில் ஒன்று "ஆண்டவனுக்கு இணைவைத்தல் ஆகாது" என்பதாகும் இந்தப் போதனையை நான் கொஞ்சம் நெக்குருக எண்ணிப் பார்த்து மகிழ்ந்திருக்கின்றேன்.

ஏன் நான் இப்போதனையை சிறப்பாகக் கூறுகிறேன் என்றால், இப்போதனை மனிதனைச் சிந்திக்கத் தூண்டுகிறது. ஆண்டவனுக்கு இணைவைத்தல் ஆகாது—ஏன் இணைவைத்தல் ஆகாது ஆண்டவன் எப்படி இருக்கக் கூடும்? என்றெல்லாம் சிந்தனைக்கு வேலை கொடுத்து ஆண்டவன் இப்படியிருக்கக் கூடும் என்று சிந்தனை முடிவடைவதில்லை. எனவே தான் பழந்தமிழ் மக்கள் "கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்" "பார்த்தவர் சொன்னதில்லை, சொன்னவர் பார்த்ததில்லை" என்று கூறியிருக்கிறார்கள்

கடவுள் தன்மையின் தத்துவமே இது தான். ஆண்டவனுக்கு இணை வைத்தல், ஆண்டவனுக்கு முன் ஒருவரை வைக்க வேண்டும் அத்தகைய ஒருவர் யாராக இருக்க முடியும்? யாருக்குத் தெரியும் ! அதனால்தான் "ஆண்டவனுக்கு இணைவைத்தல் ஆகாது' என்ற போதனையை நபிகள் நாயகம் கூறியிருக்கிறார். மற்ற மார்க்கத்தில் இணைவைத்துக் கூறிய காரணத்தால் தான் எங்களைப் போன்றவர்களுக்கு ஏராளமான மாற்சரியங்கள் தோன்றின.

4 ஜார்ஜ் பெர்னாட்ஷா:—

எக்காலத்திற்கும் எத்தேசத்திற்கும் ஏற்ற கொள்கைகள், அறிவுரைகள் மக்களை நேர் வழியில் செலுத்தக்கூடிய திட்டங்கள் நிறைந்த திருக்குர்ஆனை வேத நூலாகக் கொண்ட இஸ்லாம் மார்க்கத்தைத் தவிர வேறெதுவும் இருப்பதாகக் குறிக்க என்னால் இயலவில்லை.

5. டாக்டர் ரவீந்திரநாத்தாகூர்:—

குர்ஆன். தனது உண்மையான தத்துவங்களாலும் உயரிய ஆத்மீக போதனைகளாலும் உலகோர் அனைவரையும் தன்னுள் ஈர்த்துக் கொள்ளும் நாள் மிக தூரத்தில் இல்லை.

6 சார்லல் பிரண்ஸ்போடு:—

குர்ஆன் ஓதப்படுவதுபோல் உலகின் எவ்வேதமும் ஓதப்படுவதில்லை. காரணம்? உலகின் பல மூலைகளிலும் முஸ்லிம்கள் நாளொன்றுக்கு ஐந்துமுறை தங்கள் தொழுகையில் குர்ஆனின் நீண்ட நீண்ட வசனங்களை யெல்லாம் வாசித்துத் தொழுகின்றனர்.

DIAL : 7067

# Gnanams



PHOTOGRAPHERS
BLOCK MAKERS
PHOTOSTAT PRINTERS
and
Distributors of Photographic
Materials
Northern Province

301, CLOCK TOWER ROAD, JAFFNA.

# பிணைக்குப் பிணை

*(சீருப் புராணம், மானுக்குப் பிணைநின்ற படலம்)*

நா. தர்மராஜா
விஞ்ஞான பீடம், மூன்றும் வருடம்

அடர்ந்த காட்டுப் பிரதேசம், மலைச் சாரலில் ஓர் இடம். எங்கு பார்த்தாலும் ஒரே இயற்கையின் இன்ப விரிப்பு. பசுந் தளிர்கள் கொழுந்து விட்டு பச்சைப் பசேலென பரந்து விரிந்திருந்தது. மூங்கில்கள் அடர்ந்து வளர்ந்திருந்த காட்டுப் பக்கத்திலிருந்து இன்னிசை அந்த இடத்திற்கு அலையலையாய் வந்துகொண்டிருந்தது. மூங்கில்லே வண்டுகள் துளைத்த துவாரத்தின் வழியாக இளந் தென்றல் புகுந்து சென்றதால் எழுந்த நாதம் அந்த வனத்தின் இயற்கை அழகுக்கு மெருகூட்டியது. மேட்டுப் புதரெங்கும் பூத்துக் குலுங்கி இருந்த காட்டுப் பூக்களின் கனிவான புன்னகைக்கு காத்துக் கிடப்பதுபோல் தரையிலே கிடந்துகொண்டு முயற்கூட்டம் அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தது ஏதோ ஒரு பயத்தின் அறிகுறியால் அங்குமிங்கும் மிரண்டு மிரண்டு பார்த்துக்கொண்டிருந்த போதும் இயற்கை அன்னையின் இன்ப அணைப்பிலே தன்னையும் மறந்து கிடப்பது போலிருந்தது அந்த முயல்களின் செய்கை.

அந்த மலைச்சாரல் அளித்துக் கொண்டிருந்த இன்ப வெள்ளத்தில் ஏதோ ஒரு பயங்கரமும் பரிதாபமும் அலையடித்துக் கொண்டிருந்தது. நறுமலர் மணத்தினை நாற்புறமும் வீசிக்கொண்டிருந்த இளந் தென்றல் ஒருசமயம் ஏதோ ஒரு துர் நாற்றத்தையும் கலந்து வீசியது. காற்று திசை மாறியதை அறிந்து உற்று நோக்கினால் — எங்கே இருந்து அந்த துர்நாற்றம் வந்து கொண்டிருக்கிறது. சற்றே அந்தப் பக்கமாகச் சென்று பார்ப்போம் இதயத்தை நெகிழவைக்கும் இனிமையான இயற்கைச் சூழலைக் கெடுக்கும் இழி காற்று எங்கிருந்து வீசுகிறது? இந்த துர்நாற்றத்தின் காரணம் என்ன?

அதோ தெரிகிறதே அது ஒரு சிறு குடிசை அதன் அருகே இருக்கும் பயங்கர ஆயுதங்கள் அங்கு ஏதோ கொடிய செயல்கள் நடைபெறுகின்றன என்பதைக் காட்டுகின்றன. வலையொன்று நிலையாகக் காற்றிலே அலைமோதி ஊசலாடிக் களித்துக் கொண்டிருந்தது. தோல்களால் பின்னப்பட்ட நார்க் கயிறுகளும் கொடிகளும் அந்தக் குடிசையின் முனபுறம் அலங்கோலமாகக் கிடந்தன. சற்றே அருகிற் சென்று பார்த்தால் ... பர்ப்பதற்கே பயங்கரமான உருவத்துடன் ஒருவன் கத்தி ஒன்றைத் தீட்டிக் கூராக்கிக் கொண்டிருக்கிறான். அவன் அவன்...... அவன் ஒரு வேடன்போல் தெரிகிறது. அவனது முகம் பார்ப்பதற்குப் பயங்கரமாகத் தெரிகிறது மாமிசத்திலே உண்டு வளர்ந்த உடல். பயங்கரம் அளித்ததில் வியப்பில்லைத்தான் ஆனால் அவன் மிகவும் குதூகலமாக தன் கத்தியைத் தீட்டிக் கொண்டிருந்தான் அவனது சந்தோஷம் அளவு கடந்து வாயினூடாக முணுமுணுப்பாக வந்தது.

"இன்று நல்ல நாள் தான் என் பசிப் பிணிக்கு ஒரு முடிவு வந்துவிட்டது.

முள்ளுடைக் காணிலேகி முகமழிந்
துச்சி வேர்வை
யுள்ளங்கால் னனைப்பவோடி
யுடலுலைந் தொன்றுங்காணே
விள்ளரும் பசியால் மீளும் வேளையிப்
பிணையை நோக்கி
யொள்ளிழை வலையிற்றுக்கிப் பிடித்திவ
ணொருங்கு சார்ந்தேன்

என்று வாய்நீர் ஊறச் சொல்லிக் கொண்டிருந்தான் இப்பொழுது புரிகிறது அங்கிருந்து வரும் துர்நாற்றத்தின் காரணம் கொலைத் தொழிலையே விரும்பிச் செய்யும் வேடனின் குடிசையில் துர்நாற்றமன்றி சுகந்தமா வரும். ஆமாம் .. ... ... ...
மானைப் பிடித்து வந்ததாக முணுமுணுக்கிறானே மானெங்கே

அதோ ஒரு மரத்தின் கீழே கால்கள் இரண்டாகச் சேர்த்துக் கட்டப்பட்ட நிலையில் கிடக்கிறதே. பாவம் அதன் கெதி! அதன் வாடிய முகத்திலும் ஒரு தெம்பு. இந்த வேடனின் கையால் இறப்பதைப் பற்றி பெருமைப்படுகிறது மான். வீணாக இந்த உடலம் மாய்ந்து மண்ணுக்கிரையாவதை விட ஒரு மனிதனின் பசிக்குணவாக மாறும் என்றால் அது நான் செய்த பாக்கியமே.

"அற்ருர் அழி பசி தீர்த்தல் அஃ
தொருவன்
பெற்ருன் பொருள் வைப்புழி"

என்ற வள்ளுவன் வாக்கிற் கொப்ப மானும் தன்னுடலேயே யாதுமே உண்ண அறறு பசியோடிருக்கும் வேடனின் கரங் களுக்கு தரத் துடிக்கின்றது.

"அடவியிற் கிரியில் வீணி லவதியுற்றி
றந்திடாமல்
... ... ... ... ... ... ... ... ...
படுபரற் கானில் வேடன் பசிப்பிணி
தீர்ப்பதாக
வுடலிறத் திடுத லெவ் வெவ் விறப்
பினுமுயற்சி"

என்று முணுமுணுக்கிறது மான்
ஆனல் தான் இறத்தலே விரும்பினுலும்

"பிடிபடு மிதற்கு முன்னே மூன்று நாட்
பிறந்து புல்லின்
கொடிநுனே மேய்ந்து நீருங் குடித்த
றியாத ......."

தன் கன்றுக்காக ஏங்கியது அதன் உள் ளம் மிரள மிரள விழித்துக் கொண்டே சிந்தித்துக் கொண்டிருந்தது.

கலேயோடு கூடிக் களித்த நாட்கள் அதன் கண்களில் வந்து போய்க் கலேந்தது. நிலேயான வாழ்வென்று நீண்டகாலம், நித்தமும் தன் சொந்தமாய் தன் கலேயைப் பிரியாது சுகத்தை அனுபவித்து திளேத்த பினே இன்று நிலேயழிந்து நின்று வாடி யது மானேடு கூடிக் கானேடு ஓடித் தேனேடு கூடித் தெளிந்த மலர்ச் சோலே எல்லாம் காதல் கீதம் தன் காதலனேடு பாடி இடையிடையே ஊடி அன்போடுகூ டிக்கலந்திட்ட நாட்கள் ஒரு நிழற் பட மாக மாறி மாறி வந்து கொண்டிருந்தது.

ஈன்றெடுத்த கன்று. இளங்கன்று இன் முகத்தோடு அதனே அணேத்து உச்சி மோர்ந்து சுரந்த பால் தரையோட கன் றைத் தொடர்ந்தோடி பாலமுதூட்டி நாவினல் நீராட்டிய நிகழ்ச்சி அதன் கண் களில் நீரைச் சொரிய வைத்தது பால ருந்தும் படி தன் கன்றிடம் வந்து நிற்க கன்றே பசியின்மையால் முலேயிலே இடி த்து மோதி குறும்பு செய்து வெடிவாலேக் கிழப்பிக் கொண்டு அங்குமிங்கும் துள்ளித் திரிய, அடம்பிடித்துத் திரியும் தன் இளங் கன்றை அண்டி அணேத்து ஆசையோடு முத்தமீந்து அதற்குப் பாலூட்டி விட்ட தெல்லாம் பார்ப்பதற்கு காலமினி உண்டோ என்று கலங்கி பெருமூச் செறி ந்து நெட்டுயிர்த்தது

"புல்மேய்ந்தறியாப் பருவத்தே விட் டுவந்து விட்டேனே, என்ற கவலேதான் அதனே வாட்டியது. என்ன செய்ய வேடனு விடுவான். ஒருதடவை என் சன்றையும் என் கணவலேயும் கண்டு விடயத்தை எடுத்துக் கூறி என் சுற்றத்தோடு என் கன் றையும் சேர்த்து விட்டேனுகில் இந்தப் பாழும் உடல் எனக்கு வேண்டாம் இந்த வேடனே உண்டு பசியாறட்டும்" என்று எண்ணிக் கொண்டது. "புலியின் உறுமலேக் கேட்டுப் பதறிக் கூட்டத்திலிருந்து தப் பிச் சிதறி ஓடினேமே என்கன்றும், என் கலேயும் எங்கு சென்றனவோ?" என்று ஏங்கிக் கொண்டே தன் சாவுக்குத் தயா ராயிருந்தது.

சற்று நேரத்தில் மானின் கண்களில் ஒரு நம்பிக்கை ஒளி படர ஆரம்பித்தது. "அதோ வருபவரைப் பார்த்தால் எனக்கு ஏதோ ஒரு நம்பிக்கை பிறக்கிறது. அந்த மகானின் ஒளி வீசும் கண்கள், கருணே வாய்ந்த முகம், பங்கயம் போற் பாதம் நிச்சயம் அவர் எனக்கு உதவுவார்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டது' அந்த மகானும் வந்தார். அவர் கட்டுண்டு கிடக்கும் மானேப் பார்த்தார். பரிதாபப் பட்டார். மான் நினேத்தது சரியாகி விட் டது அந்தமகான் நபிகள் நாயகம் அவர் கள் தான். அவரிடம் தன் குறையை எடுத் துக் கூறியது.

"என் கன்றுக்குப் பால் கொடுத்து என் இனத்தோடு சேர்த்து வருகிறேன். அதறகு தாங்கள் தான் அருள்புரிய வேண் டும் என்று மன்றுடியது" நபிகள் நாயக மும் அதன் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்தார் மானுக்கு சிறிது நேரம் அவ காசம் கொடுக்கும்படி வேண்டினர். வேடனே

"கானிடைப் பிடித்த மானேக் கட்ட
விழ்த்தவணிற் போக்கின்
மானிடர் பாலின் மீட்டும் வருவது
முன்னருண்டோ.
ஞானமு மறையுந் தேர்ந்தோர் செய்
யுளு நாட்டிற்றுண்டோ
வூனமிப் பினேச் சொல்லேயா யோதுங்
தொழிகவென்ருன்"

மானே விட்டால் மீண்டும் திரும்பி வருமா? சகலதும் அறிந்த நீங்களே இப்ப

டிச் சொல்லலாமா? நான் மானைவிடப் போவதில்லை அது தன் கன்றின் பசிக்கு பால் கொடுக்க அனுமதியளித்தால் என் பசிக்கு யார் பொறுப்பு. ஒரு உயிரின் பசியைப் போக்க என்னால் உயிர்விடமுடியாது. என்று பிடிவாதம் செய்து மறுத்தான். ஆனால் நபிகள் நாயகமோ இப்போது நீ அனுப்பும் மானுக்காக நான் இவ்விடம் நிற்கிறேன் அந்தமான் திரும்பி வராவிடில் ஒருமானுக்கு இரு மானகள் நான் தருகிறேன் இந்தப் பிணைக்கு நானே பிணையென்று கூறினார்.

''என்னுறு பிணையாய்ப் போனவிரு
பிணை கடிகைப் போதி
லுன்னிடத் துறும்வா ராதே லுன்
பசி தீர்ப்பதாகப்
பின்னிரண் டொன்றுக் கன்பாய்த்
தருகுவன் பேதுறேலென்
றன்னவன் தனக்குச் சொன்னா ரார
ணத் தமிர்தச் சொல்லார்

வேடனும் மானைப் போக அனுமதித்தான். நேரம் சென்று கொண்டிருந்தது. மான் பிணை காடெல்லாம் தேடிக் கலையோடு கன்று தன்னைக் கண்டதால் மகிழ்ச்சி பொங்க, கட்டியே கன்றினுக்கே கணக்கற்ற முத்தமீந்து, கலைமுகம் பார்த்து ஏங்கிக், கடந்தவை பலவும் சொல்லிக் கலங்கியே தவித்தும். பின்னர் கடமையை எண்ணித் தேறி, கானிலே வாழும் தங்கள் மானினம் தன்னைச் சேர்ந்து, கன்றையும் சேர்த்துத் தான் உற்ற கடமையை எடுத்துக் கூறிக் கலங்கிற்று சிறிது போது. மற்றய மான்கள் எல்லாம் மறுத்தபோதும் கேளாது தனக்குப் பிணையாய் நின்ற நபிகளின் பெருந்தன்மையை நினைத்து ஊன் வேடன் பசிதீர்க்கப் புறப்பட்டது கன்றோ கதறி வீழ்ந்தது. ''அம்மா, நீயின்றி நான் இல்லை நீ போகும் இடத்துக்கே நானும் வருகிறேன்'' என்று தாயின் முன்னே ஓடியது.

மானோடு கன்றும்வர வேடன் பிரமிப்பிலாழ்ந்தான். நபிகள் அவனை நோக்கி.

'' குருளையும் பிணையுங் கூடி வருவது
குறித்து நோக்கி
முருகலர் புயத்தார் வள்ளல் முகம்
மது மகிழ்ந்தன்பாக
விருளுறு மனத்தனா வேடனை
யினிது கூவி
யொருபிணைக் கிரண்டுன் பாலின் வரு
வதென் றுரைத்திட்டாரால்

வேடன் தெளிந்தான் நபிகள் நாயகத்தின் பாதக்கமலத்தைப் பற்றித் தன் கண்ணீரால் கழுவி இன்றோடு என் கொலைத் தொழிலையே விட்டேன் என்று பணிந்தான். மானையும் கன்றையும் திரும்பவும் காட்டுக்கனுப்பி வீடு பெற்றுயர்ந்து வாழ்ந்தான்.

(சீராப்புராணத்தில் வரும் ஒருபாடலை அடிப்படையாக வைத்து வரையப்பட்ட ஒரு கற்பனைச் சித்திரம்)

The Holy Prophet said:

"God will produce a Reformer and Reconstructer in my Nation. about the end of every century, who will renew and revive its religion. (Islam)"

—(*Abu Daud*)

The Holy Prophet said:

"God grants the praying of three persons, beyond any doubt: the praying of parents for their children, the praying of a traveller, and the praying of an oppressed person."

– (*Tirmazi*)

*With best compliments*

*of*

## Hadji S. M. Esmail & Sons

Whole Sale Dealers of
General Merchant

T. P. 377

20 A. Main Street,
Kalmunai.

*With best compliments*

*from*

## M/s. A. W. A. Careem

No. 8, Naleem Hadj. Mawatha,
China fort, Beruwala

and.

## M/s. A. W. A. Careem

120, Main Street,
Ratnapura.

*With Best Compliments from*

# JAMEELAS

60, 3rd Cross Street,
Colombo.

Tel 27757 or 26047

# " ශුද්ධ මොහම්මද් නබි (සල්) තුමාගේ සානුකම්පිත අදහස "

එම්. ජේ. එම්. මක්කීන්.
2 වැනි වසර මානව ශාස්ත්‍ර.

ශත වර්ෂ 14 කට පමණ පෙර ලොව සත අන්ධකාරයෙහි ගිලී අන්ත ප්‍රපාතය කරා ගමන් කරමින් සිටි මනුෂ්‍යවර්ගයා වෙනුවෙන්දීය ශුද්ධ මොහම්මත් නබි (සල්) තුමා මෙම ලොවෙහි ජනිතවූයේ. විසිපස් වසරක්වූ කෙටි කලකදී, මනුෂ්‍ය ජීවිතයේ සියළු අංගයන්හිම නව ප්‍රබෝධයක් ඇති කිරීමට එතුමා සමත් වූහ. නබි තුමා ගතකල ආදර්ශවත් ජීවිතය සෑම කල්හිම, සියළු දෙනාටම ශ්‍රේෂ්ඨ ජීවිතයක නිදසුනකි. සර්වබලධාරී අල්ලාහ් විසින් එළිදරව් කරන ලද දර්ශනය පදනම් කොට ගත් නබි තුමාණන්ගේ ජීවිතයේ එක් අංශ අතුරෙන් එතුමාණන්ගේ විවාහ පිළිබඳව කරුණු සලකා බැලීම මෙම ලිපියේ අරමුණයි.

නබිතුමණන් හා විවාහවූ කාන්තාවන් නම් එතුමාණන්ගේ මරණින් පසු අන් අයෙකු සමග විවාහ වීමක් නොවීය. එම කාන්තාවන් ' උම්මුහාතුල් මුමිනීන් (පරිශුද්ධ කාන්තාවෝ) යන විරුදාවලිය ලැබුයේ එහෙයිනි. එවැනි ශ්‍රේෂ්ඨ බවක් හිමි කාන්තාවෝ නම්, කුවෙයිලිත් නැමැත්තාගේ දියණියවූ කදීජා තුමියත් සව්දා ඉබ්නු කයිස් නමැත්තාගේ දියණියවූ සව්දා (රලි) තුමියත්, පළමු කලීපා අබුබක්කර් සිද්දික් (රලි) තුමාගේ දියණියවූ ආයිෂා (රලි) තුමියත්, දෙවන කලීපා උමර්කත්තාබ් (රලි) තුමාගේ දියණියවූ හබ්සා (රලි) තුමියත්, කුසෙයිමාගේ දියණියවූ සෙයිනබ් (රලි) තුමියත්, ආබු උමෙයියාගේ දියණියවූ උම්මු සල්මා (රලි) තුමියත්, ජහ්ස් නමැත්තාගේ දියණියවූ සෙයිනබ් (රලි) තුමියත්, හාරිත් නමැත්තාගේ දියණියවූ ජුවෙයිරියා (රලි) තුමියත්, අබුසුප්යාන්ගේ දියණියවූ උම්මු හබීබා (රලි) තුමියත්, හාරිස් බින් හසන් නමැත්තාගේ දියණියවූ මයිමූනා (රලි) තුමියත්, හයි ඉබ්නු අක්තබ්ගේ දියණියවූ සපියා (රලි) තුමිය යන අයවෙති. ශුද්ධ කුර්ආනයේ ඉගැන්වීම් අනුව එක්කෙනෙකුට කාන්තාවෝ 4 දෙනෙකු හා විවාහ වන්නට අනුමත වුවත්, මෙම නීති ක්‍රියාත්මක වූයේ නබිතුමාගේ විවාහයන්ට පසුවයි. එසේ වුවත් නබි මොහම්මත් (සල්) තුමා උතුම් අදහස් මුල් කරගෙන කරන ලද විවාහයෙන් පසු එතුමා ගත කළ විවාහ ජීවිතය අනුකම්පාව සාධාරණත්වය මුල්කොට ගත් බව විචාරාක්ෂියෙන් බලනකාහට වුවද වැටහී යනු ඇත.

මොහම්මද් තුමා කාන්තාවන් 11 දෙනෙකු සරණ පාවා ගත්තේ ශාරීරික අවශ්‍යතා නිසා නොවන බව මුලින්ම පැහැදිලිකරගත යුතුය. නිදසුනක් වශයෙන් එයට මුල්ම විවාහය ගෙන බලමු. එවකට අරාබි දේශයේ විසූ අරාබීන්ගේ ජීවිතය, වන මෘගයින්ට නොදෙවෙනි අවිචාරවත් එකක් විය. බොහෝ අවස්ථාවලදී එක් කාන්තාවක් පුරුෂයන් කීප දෙනෙකු සමගද, එක් පුරුෂයෙකු කාන්තාවන් කිහිප දෙනෙකු සමගද සම්බන්ධවී තමාගේ සිත හිතුවක්කාර ගත්තේත් වන සතුන් ලෙසිනි. එහෙත් එවැනි පරිසරයක ජීවත් වෙමින් මනා රූප ශෝභාවක්ද ඇති, කරුණාබර තරුණයෙකු වූ 25 වියෙහි පසුවූ නබි උත්තමයාණෝ පමණක් මෙවන් වැරදි ක්‍රියාවන්ගෙන් ඉවත්ව සිටියහ. එවැනි තරුණයෙකු තම මුල්ම විවාහ මංගල්‍යයෙහි සහකාරිය කරගත්තේත් වයසින් වැඩුනු, වැන්දඹු කාන්තාවක් වන කදීජා (රලි) තුමියයි. එම විවාහය එතුමාගේ කැමැත්ත පරිදි සිදුවිය. නබිතුමාණන් දැරූ කාරුණික, හෘදයාංගම විත අදහස්වලට මෙය කදිම සාක්ෂියකි. එසේම එකල අරාබිවරුන්ගේ ශ්‍රේෂ්ඨ සම්පන්න ජීවිතය පැවැත්මට පටහැනි ජීවිතයක් ගතකළ ඒ තුමා කදීජා (රලි) තුමිය ස්වර්ගස්ථ වන තුරුම – නම් තම ජීවිතයෙහි අර්ධ ශතකයක් වන තුරුම එම භාර්යාවත් සමග සාමයෙන් හා සමාදානයෙන් ජීවත්වීමෙන් ආදර්ශයක් ගෙනහැර පෑවේය. එහෙත් නබි තුමාට එදා අවශ්‍ය වූවා නම් කුලයෙන් උසස්, ධනයෙන් පිරි, රූප රාජිනියන් කිහිප දෙනෙකුම සරණපාවා ගැනීමට අවස්ථාව තිබුණි. එහෙත් යහපත් ජීවිතයකට එතුමා ඇලුම් කළ බැවින් එසේ නොකළේය.

ලෝක නායක නබි තුමාණන්ගේ ජීවිතයේ තවත් අංගයක්වූයේ වැන්දඹුවනට සතුටින් ජීවත්වීමේ අවස්ථාව ලබාදීමයි. මෙම 20 වන ශත වර්ෂයේ පවා ඇතැම් ආගමික කාන්තාවකගේ ස්වාමියෙකු අභාවප්‍රාප්ත වුවිට ඇය අවාසනාවන්තියක් හැටියට ගෙයි මුල්ලකටවී දෙවෙනි වරට විවාහයක් කර ගැනීමට නොහැකිව තනිවම ඇවිදින මළ මිනියක් ලෙසින් ජීවත්වන සැටි අද අපි දකිමු. එසේම ඉන්දියාව වැනි රාජ්‍යවල තම පුරුෂයා මළ විට එම මළ සිරුර ආදාහනය කරන ගිණි මැලයට පැන එම කාන්තාවද (භාර්යාවද) දිවිනසාගත යුතු විය. මෙම පිළිවෙත කිසිවෙකුට කඩ කළ නොහැකි විය. උතුම් කාන්තා පක්ෂයට මෙය මහත් ශාපයක් වූ බවට සැකයක් නැත මෙවන් දුක්ඛිත තත්වයේ සිටි කාන්තා පරපුර මුදවා ගැනීම ට මොහම්මත් (සල්) තුමා වසර 1400 කට පමණ පෙර තමා ආවාහ කරගත් කාන්තාවන් 11 දෙනෙකුගෙන් 10 දෙනෙකුම වැන්දඹු අයගෙන්ම තෝරා ගත්තේ, වැන්දඹුවනට සම තැනක්, යහපත් ජීවිතයක් උදාකර දීමට හා ඔවුන්ගේ දුක් කරදර නැති කිරීම සඳහාය. වැන්දඹු අසරණ කාන්තාවන්ගේ ජීවිතයේ ප්‍රබෝධයක් ඇති කොට මින් මතු කිසි කලෙක කාන්තාව මෙවැනි දුක් කම්කටොලු වලට භාජනය නොවිය යුතුය යන පරමාර්ථයෙන් යුක්තව උත්තම නබි සල්) තුමා තම විවාහ ජීවිතය ගත කළහ.

එලෙසින්ම පසුව එළිදරව් කළ අල්ලාහ්ගේ අණ වූයේ කෙනෙකුට කාන්තාවන් 4 දෙනෙකු පමණක් විවාහ කර ගත හැකිය යන්නයි. මෙම නීතිය අද ලෝක විද්වතුන්ගේ හා දාර්ශනිකයන්ගේ ප්‍රශංසාවට ලක්වී තිබේ. මෙයට හේතුව කුමක්ද? ඔව්. අද මහාද්වීප පහේම ජනගහණය දෙස බලන විට පිරිමින්ට වඩා කාන්තාවන් බහුල බව පෙනේ. යුධ කටයුතු නිසාත්, දුර්භික්ෂ නිසාත්, විනාශ මුඛයට පත්ව ඇති සමහර රටවල කාන්තාවන් 60 දෙනෙකුට එක් පුරුෂයෙකු බැගින් ජීවත් වන බව සමහර සඛ්‍යා ලේඛණ වලින් පෙනීයයි. මෙවන් රටවල සමහර කාන්තාවන් අසරණව, විවාහවීමේ වරප්‍රසාද ලැබුනත්, යුධය නිසා එනි සුඛාස්වාදය නොලැබ මිය යෑමට සිදුවේ. මෙවන් අවාසනාවන්ත දුක්ඛිත තත්වය නැති කිරීම වත්, අසරණ කාන්තාවනට පුනර්ජීවයක් ලබාදීමටත් නබි තුමාගේ සානුකම්පිත විවාහ ජීවිතයෙන් මඟ පෙන්වීමෙන් ඉස්ලාම් ධර්මයෙහි නීතියන් සැදූසා ඇත්තේ මහත් සහනයකි. එසේ නම් අද පැන නැගී තිබෙන විවාහ ගැටළු නිරාකරණය කිරීමෙහි ලා කිසිම ආගමික නායකයෙකුට හෝ දාර්ශනවාදියෙකුට හෝ නොහැකිවූ උතුම් සේවයක් නබි තුමා විසින් ඉටුකර ඇත.

අනෙක් කරුණ වූයේ අල්ලාහ් දෙවියන් වහන්සේ විසින් ඒ උත්තම නබිතුමාට පවරන ලද භාරදූර කාර්යය ඉටු කිරීමයි. දහම් ප්‍රචාරයක් වශයෙන් එතුමන්ගේ විවාහ වැදගත් විය. නබිතුමාට විරුද්ධව පැනනැගුනු විරුද්ධතා මෙම විවාහවලින් මැඩ පැවැත්වීමට හැකි වීය. නිදසුනක් වශයෙන් එකල සිටි උසස් නායකයෙකු වූද, බලවත් ඉස්ලාම් විරුද්ධවාදියෙකු වූ අබූසුපියන්ගේ දුව, ඇගේ ස්වාමියා මළ සින් පසු වැන්දඹුවක් ලෙස දුකින් පසු වන අවස්ථාවේ නබි තුමා එම කාන්තාව සමග ආවාහ වී ඇයට නව ජීවිතයක් ලබාදුන්නා පමණක් නොව, ඉස්ලාම් ආගමට විරුද්ධවූ නායකයෙකුව තම අතට හීලෑ කරවා ගැනීමට සමත් විය මෙය එතුමාගේ ධර්ම ප්‍රචාරයට හොඳ රුකුලක් හා වාසියක් විය.

තවද ශ්‍රේෂ්ඨ යුදෙව් ජාතිකයෙකුගේ දියණියක්වූ සපියා (රලි) තුමිය හා විවාහ වීමද වැදගනි. තවද ඉස්ලාම් ධර්මයේ උත්තතිය සඳහා යුධ කටයුතුවලත්, ආගමික ප්‍රශ්ණ විසඳීම සඳහාත් නිතරම තම කාලය ගතකරන මොහම්මත් තුමාට තමාගෙන් ඉටුවිය යුතු අනෙකුත් කටයුතු අතපසු විය හැක. එනම්, තම නිවෙස් කරා එන අයගේ ප්‍රශ්ණ විසඳීමටත්, එසේම තමාගෙන් පසු මුස්ලිම් සමාජයේ පැන නගින ප්‍රශ්ණවලට විසඳුමක් ලබාදීමටත්, බැතිමත් හා ගුණවත් කාන්තාවන් විවාහකර ගත්තේය.

එබැවින් ලෝක ඉතිහාසයේ ඉස්ලාමීය නායක මොහම්මත් නබි තුමා ගත කළ ආදර්ශවත් ජීවිතය හා එතුමා කෙරෙහි පිහිටි උතුම් ගුණාංග වන කාරුණාව දයාව හා සානුකම්පිත බව අප කවුරුත් අගය කළ යුතුය. මෙකල ලෝකය මුහුණපාන විවිධාකාර ප්‍රශ්ණ-

වලට විසඳුම් සොයා ගැනීමට නම්, නබිතුමා ගත කළ ඒ උතුම් ජීවිතය දෙසට අප හැරිය යුතුව ඇත.

වැන්දඹු කාන්තාවනට නව ජීවිතයක් ලබාදී ඔවුන් සතුටු සාගරයෙහි ගිල්වීමටත්, ඔවුන්ට අසාධාරණයක් සිදුවීම වැළැක්වීමටත් ඉස්ලාම් ධර්මයේ උන්නතියටත්, ධර්ම ප්‍රචාරයට එරෙහිව පැන නගින බලපෑම් මර්දනය කිරීමටත්, යුද ගමනයේදී ස්වාමි පුරුෂයන් නොමැතිව විවාහ වීමේ අවස්ථාවන් නොලැබ පසුවන අසරණ කාන්තාවන්ගේ විවාහ ප්‍රශ්නය නිරාකරණය කිරීමටත් ශුද්ධෝත්තම නබි (සල්) තුමා ගතකළ ඒ උසස් ජීවිතය ආදර්ශයක් වන්නේය.

## சரியான பதில்

நாயகத் தோழர் (சகாபி) ஒருவர் தனது மனைவியை விவாகரத்து செய்வதற்காக வழக்கு மன்றத்திற்குச் சென்று கொண்டிருந்தார். வழியில் சந்தித்த அவரது நண்பர் கேட்டார்:

''நண்பரே உமது மனைவியை விவாகரத்து செய்யச் செல்கிறீர்களே அவளது குறைகளைக் கொஞ்சம் சொல்லுங்களேன்''

சகாபி உடனே பதில் கூறினார் ''இப்போதும் அவள் என் மனைவிதான் அவள் குறைகளை நான் எப்படி வெளியிட முடியும்''

விவாகரத்து முடிந்து திரும்பிக் கொண்டிருந்த சகாபியை மீண்டும் நண்பர் வினவினார் ''விவாகரத்து முடிந்து விட்டது இனி அவள் உங்கள் மனைவி இல்லை. இப்போதாவது அவளது குறைகளைக் கூறக்கூடாதா?''

சகாபிசிரித்துவிட்டுச் சொன்னார் ''நண்பரே, அவள் இப்பொழுது விவாகரத்து பெற்று விட்டாள். அவள் இப்பொழுது ஓர் அன்னியப் பெண். ஓர் அந்நியப் பெண்ணுடைய அந்தரங்கங்களை நான் எப்படி வெளியிட முடியும்.

நண்பர் மௌனமாக அகன்றார்.

அறிவாளியை முட்டாள் அறிய முடியாது
ஏனென்றால் அவன் எப்பொழுதுதாவது
அறிவாளியாக இருந்ததில்லை.

ஹஸ்ரத் அலி(ரலி)

மிதமான புன்சிரிப்பே, மேலான சிரிப்பாகும்
அளவு கடந்து சிரித்தால் மனிதனுடைய மரியாதையை அழித்துவிடுகிறது
அதிகமான சிரிப்பு உள்ளத்தைக் கொன்றுவிடுகிறது

ஹஸ்ரத் அலி (ரலி)

# OUR MAJLIS MEMBERS

## FACULTY OF SCIENCE

**Mathematics and Statistics**

| | *Name* | *Year* | *Address* |
|---|---|---|---|
| 1 | Jabbar I. L A. | 3rd | "Crescent Light", Sainthamaruthu Kalmunai. |
| 2. | Jaufer Sadique A. L. | 3rd | Hadjiar Place, 3rd Division Sammanthurai |
| 3. | Mathar I S. | 3rd | Ward No. 4, T/Kinniya |
| 4. | Kasnafar H. M. | 2nd | Moor St. Mannar |
| 5. | Irfan A. J. M. | 2nd | 79, Mallawapitiya, Kurunegala |
| 6 | Noor Mohamed M. B. | 2nd | "Hidaya Manzil," Hinguloya Mawanella |
| 7. | Azeez S. A. | 1st | Tamil Division, Sainthamaruthu Kalmunai |
| 8. | Jalaldeen M. T. M. | 1st | Hammaliya, Bandarakoswatte |
| 9. | Thalib M. A. | 1st | 189, Sodamala Rd. Mallawapitiya, Kurunegala |
| 10. | Nawas T. L. M. | 1st | "Rubber Estate" Kudugala, Ambatenne |

**Physical Science**

| | | | |
|---|---|---|---|
| 11. | Aslah M. S. M. | 2nd | 89, Galbokka Rd. Weligama |
| 12. | Jaufar P. C. P. | 2nd | Thaikkappalli, Akkaraippattu |
| 13. | Faiz M. M. | 1st | 48, Kathi Aboobucker Rd Jaffna |
| 14. | Munas M. H. M. | 1st | 920, Neerella Akurana |
| 15. | Ziyad M. Thaha | 1st | "Country Courts" Akurana |
| 16. | Thaowfiq A. R. M. | 1st | Cassim Road, Kalmunai - 6 |
| 17. | Iqbal A. R. | 1st | Ward: 6, Erukkalampiddy |

**Bio. Science**

| | | | |
|---|---|---|---|
| 18. | Umar Lebbe A. | 2nd | A. V. V. Road, Akkaraippattu |
| 19. | Ashroff M. I. M. | 1st | "Fowzi Manzil" Muslim Div. Karaitheevu |
| 20. | Nazeera Beebi A L. | 1st | Jinnah Road Akkaraippattu |
| 21. | Sadick M. I. M. | 1st | Sainthamaruthu 2, Kalmunai |
| 22. | Samsudeen M. | 1st | Ward No. 2, Nilaveli, Trincomalee |

## FACULTY OF HUMANITIES

**Arts**

| | | | |
|---|---|---|---|
| 23. | Ismail Y. M. | 2nd | 42, Udatalawinne Madige, Katugastota |
| 24. | Cassim M. S M. | 2nd | Madige Midiyala, Bandarakoswatte |
| 25. | Noorul Bakiya A. J. | 2nd | 21, Kottar Manzil, Dharga Town |
| 26. | Uwais M. H M. | 2nd | Gatteberiya Aranayaka |
| 27 | Mumtaz Begum A. H. | 2nd | Attawarawatte Welimada |
| 28. | Amsilain M. H. | 2nd | 44, Dole Road, Matale |
| 29. | Sithy Fakiya M. K. | 2nd | 145 Madawala Rd, Katugastota |
| 30. | Sithy Zohara Beebi I. L | 2nd | 439, Kalligamuwa, Gelioya |
| 31. | Shreen Rojee M. B. | 2nd | 98, Second Cross St, Puttalam |

| | | | |
|---|---|---|---|
| 32. | Inul Shifaya M. K. | 2nd | 51, Hendeniya, Peradeniya |
| 33. | Sithy Saleema A. C. | 2nd | 181, Kurunegala Rd, Anuradhapura |
| 34. | Kabeer Rawuthar S. H. | 2nd | 15A, Kadahapola, Horam Bawa |
| 35. | Mohamed Siyan M. | 2nd | Lebbe St, MN/Tharapuram |
| 36. | Makeen M. J M. | 2nd | 31. Terrace St, Hambanthota |
| 37. | Hasan M. C M | 2nd | MR/Kirinda, Puhulwela |
| 38. | Thayyoob M. A. S. | 2nd | Ward No 3, MN/Vidathaltheevu |
| 39. | Mansoor A. C. A.M. | 1st | Marayagam, 5 Noordeen Lane Sammanturai |
| 40. | Sithy Jariya | 1st | Mosque Road, Kahatagasdi giliya |
| **Commerce** | | | |
| 41. | Ahamed M T. | 2nd | "Villa De Lux" Tamil Division Sammanthurai |
| 42 | Abdul Hameed M. A K. | 2nd | Block J East 114/101, Sammanthurai |
| 43. | Hussain A. M. | 2nd | 1st Cross Street 3rd Division Sammanthurai |
| 44. | Siddeek M Y M. | 2nd | Sainthamaruthu 4, Kalmunai |
| 45. | Thasleem K. M M. | 2nd | 1st Div Addalaichenai |
| 46. | Abdul Thasool K L | 2nd | Boundary Rd, Sammanthurai |
| 47. | Sinnarajah S | 2nd | Hospital Rd Sammanthurai |
| 48. | Abdul Careem U. L | 2nd | 6 Main St, Maruthamunai, Kalmunai. |
| 49. | Alavudeen M. A. M. | 2nd | V. V. Rd Maruthamunai Kalmunai |
| 50 | Ibra Lebbe U. | 1st | "Thaha Manzil" Rauther Lane, Sammanthurai. |
| 51. | Meera Lebbe M. | 1st | Rauther Lane, Sammanthurai. |
| 52. | Abdul Gffoor M. I. | 1st | A. V V Road, Akkaraippattu |
| 5 . | Farook H M | 1st | 2 , Mosque Rd, Kalmunai-4 |
| 54. | Jamal Deen A. L. | 1st | Mosque Lane, Thaikanagar Addalaichenai. |
| 55. | Majeed S. M A. | 1st | Veeramunai, Sammanthurai. |

The Holy Prophet said:

"In the sight of God the best of all companions is he, who is helpful and beneficial to his companion in miserable circumstances; and the best of all neighbours is he who is helpful and beneficial to his neighbour in miserable circumstances." —(*Tirmazi*)

The Holy Prophet said:

"Whoever goes to see and serve a sick person, for him an angel proclaims from the Heaven and says: Yours is a blessed deed, and blessed is your walk to this person, and I congratulate you, as you have made your residence in Paradise."

—(*Ibn-i-Majah*)

# பொதுச்செயலாளரின் அறிக்கை

''அல்ஹம்து லில்லாஹ்''

இம்மஜ்லிஸின் பொதுச்செயலாளர் என்ற வகையில், எமது மஜ்லிஸ் வெளியிடும் ஆண்டுச்சஞ்சிகைக்கு நடப்பு வருடத்தின் செயற்பாடுகளை விளக்கும் விதத்தில் அறிக்கை சமர்ப்பிக்க கடமைப்பாடுடையேன்.

இம்மஜ்லிஸானது, எமது வளாக முஸ்லிம் மாணவர்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கிணங்க 22-7-77 அன்று அங்குராப்பணம் செய்யப்பட்டது. அவ்வமயம் இம்மஜ்லிஸின் முதலாவது செயலவை உறுப்பினர்களாக பின்வருவோர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| | |
|---|---|
| போஷகர் : | மௌலவி கே. எம். எச். காலித்தீன் B. A. (Hons) |
| பெரும் பொருளாளர் : | கவிஞர் எம். ஏ. நுஃமான் B. A. (Hons) |
| தலைவர் : | ஜனுப் ஐ. எல். அப்துல் ஜப்பார் |
| உப தலைவர் : | ஜனுப் எம். ரி. அஹமட் |
| பொதுச் செயலாளர் : | ஜனுப் ஏ. எல். ஜஃபர்சாதிக் |
| உதவிப்பொதுச் செயலாளர் : | ஜனுப் ஐ. எஸ். மதார் |
| சமூகத்தொடர்பு செயலாளர் : | ஜனுப் வை. எம். இஸ்மாயில் |
| இளம் பொருளாளர் : | ஜனுப் எம். எஸ். எம். காஸிம் |
| இணைப்பத்திராதிபர்கள் : | ஜனுப் எம். ஏ. கே எம். அப்துல் ஹமீட்<br>செல்வி ஏ. ஜே. நூருல் பாக்கியா |
| நிர்வாகசபை உறுப்பினர்கள் : | ஜனுப் எம். பி. நூர்முகம்மட்<br>ஜனுப் எம். எச். எம். உவைஸ்<br>செல்வி ஏ. எச். மும்தாஸ் பேகம் |

இம்மஜ்லிஸின் முதலாவது செயலவை என்ற வகையில் அங்கத்தவர்களைச் சேர்த்தல், நிதியின்மை, யாப்பு, இலச்சனை, மஜ்லிஸை பதிவு செய்தல் போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. எமது வளாக முஸ்லிம் மாணவர்களை அங்கத்தவர்களாக சேர்த்ததன் மூலம் எமது ஆரம்பகால நிதித்தேவையை ஒருவாறு பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது. தற்போது சுமார் 55 பேர் எமது மஜ்லிஸின் உறுப்பினர்களாக உள்ளனர்.

மஜ்லிஸின் யாப்பை யார்த்தலுக்காக, விரிவுரையாளர் ஏ ஸி. எஸ். ஹமீட் அவர்களின் தலைமையில், தலைவர், பொதுச்செயலாளர் ஆகியோர்களைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. மஜ்லிஸின் இலச்சனை, மஜ்லிஸ் அங்கத்தவர்களிடையே கோரப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டது.

இஸ்லாத்தையும், இஸ்லாமிய வாழ்க்கை நடைமுறைகளையும் முஸ்லிம் மாணவர்களிடையே விளங்க வகை செய்தல், ஏனைய சமயங்களைப்பற்றியும், சமயங்களுக்கிடையே நல்லுறவுகளை ஏற்பட வகை செய்தல், இலங்கை முஸ்லிம்களினது முக்கிய பிரச்சினைகளை பல்கலைக்கழக மட்டத்தில் ஆராய்தல், தேசிய நலனை முன்வைத்து செயற்படுதல்போன்ற தலையாய நோக்கங்களை மையக்கருவாகக்கொண்டே எமது மஜ்லிஸ் செயற்பட்டு வருகின்றது.

எமது மஜ்லிஸ் ஆரம்பிக்கப்பட்டு முதலாவது ஆண்டு பூர்த்தியைக் கொண்டாடு முகமாக ஒரு சஞ்சிகை வெளியிட வேண்டுமென்று, மஜ்லிஸ் அங்கத்தவர்கள் வேண்டிக் கொண்டதற்கிணங்க, சஞ்சிகை வேலைகளைக் கவனிப்பதற்கு சஞ்சிகைக் குழுவொன்று ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டது. ஜனாப்கள் ஐ. எல். ஏ. ஜப்பார் எம். எஸ். எம். அஸ்லஹ், எம். பீ. நூர்முகம்மட், ஏ. எல். ஜஃபர் சாதிக், எம். ஏ. கே. எம். ஏ. ஹமீட, கே. எஸ். ஏ. சகூல், எம். எச். எம். உவைஸ், செல்வி ஏ. ஜே. நூருல் பாக்கியா என்பவர்களே சஞ்சிகைக் குழுவிற்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களாகும். இச் சஞ்சிகை வெளியிடுவதில் மிகவும் சிரமத்திற்கு மத்தியில், முக்கிய பங்கெடுத்துப், பணியாற்றிய ஆசிரியர்குழு உறுப்பினர்களான ஜனாப்கள் ஐ. எல். ஏ. ஜப்பார், எம். எஸ். எம். அஸ்லஹ், எம். பீ. நூர்முகம்மட், ஆகியோர்களுக்கு எனது விசேட நன்றிகளைக் கூறுவதற்குக் கடமையுடையவனுவேன்.

எமது மஜ்லிஸ், 5–10–77 அன்று, உத்தம நபியின் உதய தினத்தை முன்னிட்டு ஒரு கலந்துரையாடலை நடத்தியது. அக்கலந்துரையாடலின்போது எமது வளாகத்தலைவர் பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் பிரதம விருந்தினராகவும், யாழ் மாவட்ட உயர் நீதிமன்ற நீதிபதி அல்ஹாஜ் எம். எம். அப்துல் காதர் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவோராகவும் கலந்துகொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. இக்கலந்துரையாடலில் எமது வளாக விரிவுரையாளர்களான மௌலவி கே. எம். எச். காலிதீன், ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீட், ஜனாப் எம். ஏ. நுஃமான் ஆகியோரும் சிறப்புரையாற்றினர்.

எமது மஜ்லிஸ், சர்வவளாக மஜ்லிஸின் ஒரு அங்கமாக செயற்பட்டு வருகின்றது. 14–05–77 ம் திகதி அன்று சர்வவளாக முஸ்லிம் மஜ்லிஸினுல் ஒழுங்கு செய்யப்பட்ட கல்வியமைச்சரோடான கலந்துரையாடலின்போது எமது மஜ்லிஸின் தலைவர், பொதுச்செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். அவ்வமயம் இன்றைய இலங்கை முஸ்லிங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தரப்படுத்தலினுல்-முஸ்லிம் மாணவர்கள் பாதிக்கப்படுதல், முஸ்லிம் மாணவர்களின் வேலையில்லாத்திண்டாட்டம் போன்ற முக்கிய பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டன.

யாழ் வாழ் முஸ்லிம் மாணவர்களின் நலன் கருதி, இலவச கலந்துரையாடல் வகுப்புக்களை நடாத்தியமை, தரப்படுத்தலினுல் முஸ்லிம் மாணவர்கள் பாதிக்கப்பட்டமை குறித்து பிரதமர், கல்வியமைச்சர் ஆகியோர்களுக்கு மஜர் சமர்ப்பித்தமை, எமது மஜ்லிஸ், வளாக முஸ்லிம் மாணவர்களின் நலனைப்பேணவும், உரிமைக்காகப் போராடுவதுமட்டுமின்றி, இலங்கைவாழ் முஸ்லிங்களின் பிரச்சினைகளின் போதும் முக்கிய பங்கினை வகித்தமை தெளிவாகும்.

எமது முதலாவது செயலவை என்ற வகையில் பல பிரச்சினைகளையும், நெருக்கடிகளையும் எதிர்நோக்கவேண்டியிருந்தது. எதிர்காலத்தில் இம்மஜ்லிஸ் சிறப்பாக இயங்கி அதன் இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கு வாழ்த்துவதுடன், இச் சஞ்சிகை பல சிரமங்களின் மத்தியில் வெளியிடுவதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்த சஞ்சிகைக் குழுவிற்கு நன்றியும் கூறி, விடை பெறுகின்றேன்.

ஏ. எல். ஜஃபர்சாதிக்
(பொதுச் செயலாளர்)

# OUR GRATEFUL THANKS TO ....

- The Minister of Transport Hon. Mr. M. H. Mohamed the vice-Chancellor Prof. P. P. G. L. Siriwardene and the Campus President Prof. S. Vithiananthan for their inspiring messages
- Al-Haj. M. I. M. Naleem J. P. for his Generous Financial contribution
- The Advertisers and donors who contributed in no small measure to make the printing of our maiden venture a grand success.
- The contributors of articles and messages.
- Our Locturer Mr. A. C. S. Hameed who helped us in various ways to bring out this Magazine
- The designer of the front cover Mr. M. L. M. Nizar of Hemmathagama
- The Members of the Science faculty who helped us to collect the advertisements, specially to Messrs I. L. A. Jabbar, M. S. M. Aslah and M. B. Noor Mohamed.
- All the members of the Majlis, who helped us in every way to make this Magazine a success.
- The Jaffna Municipality Co-operative Printers for having done a splendid job of work.

*- Editorial Board -*

# GOLD HOUSE

Cordially Inviting for

**REPUTE JEWELLERY & TEXTILES**

Visit Today **GOLD HOUSE**

71, Main Street, KALMUNAI.

**நவநாகரீகமான பிடவைகளுக்கும் தங்க நகைகளுக்கும்**

**இன்றே விஜயம் செய்யுங்கள்**

**கோல்ட் ஹவுஸ்** 71, பிரதான வீதி, கல்முனை.

*With Best Compliments*

*From*

# RIZANS

**159, Galle Road,**
**WELLAWATTE.**

**Phone : 84753**

*Space Donated*

*By*

# Mirbaha Stores

**110, Galle Road,**
**WELLAWATTE.**

**Phone : 82922**

★

*With best*
*Compliments*
*from*

# HANAFI & FALEEL

20, Naleem Hadjiar
Mawathe,
CHINA FORT, BERUWALA.

உங்களுக்குத் தேவையான
சேட்டுக்கள்
சேட்டிங்ஸ்
சூட்டிங்ஸ்
பழைகாட் சாறங்கள்
யாவும்
卐 மலிவாகக் கிடைக்கும்

# Majeediya Textiles

**Sainthamaruthu-4**
**Kalmunai,**

# முஹிதீன் ஜுவல்லர்ஸ்

அழகிய
நவீன
உத்தரவாதமுள்ள
★ தங்க நகைகளுக்கு

111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# Mohideen Jewellers

GURANTEED JEWELS IN
LATEST DESIGNS

**111, Kasthuriar Road,**
**Jaffna.**

*With best*
*Compliments*
*from*

★

# Nagoor Autos

**Main Street, Kalmunai,**

*With best Compliments of*

# K. K. M. STORES

**Rest House Road,**
**KALMUNAI.**

*Dealers in*

## ELETRICAL GOODS

# EMMO SONS

**Stanley Road,**
**JAFFNA.**

FOR ATTRACTIVE

## JEWELLERY

**Visit**

# S. L. M. THEEBY & SONS

**Kannathiddy,**
**JAFFNA.**

எமது

முதலாவது ஆண்டு மலரை

சிறப்புற

குறித்த காலத்தில்

மும் மொழிகளிலும்

அச்சிட்டுத் தந்தமைக்கு

யாழ். மாநகர ப. நோ. கூ. சங்க அச்சகத்திற்கு

யாழ். வளாக முஸ்லிம் மஜ்லிஸ்

நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது —

*Dont Worry !* *We are here to solve your* *Be Merry !!*

*TRANSPORT*

*Problems between Jaffna & Colombo*

**" SAIFEE TRANSPORT SERVICE "**

# Mohamedally Abdulally

( Distributing Agents — M/s. Ceylon Oxygen Ltd. )

*We meet your requirements in Materials*

*Also visit us for*

*Varieties of Gift Articles for any Occasion to have Your better Selection*

**5 & 7, GRAND BAZAAR,**
**JAFFNA.**
*Phone: 515 T'Gram: SAIFEE*

**81, OLD MOOR STREET,**
**COLOMBO.**
*Phone: 33569 T'Gram: BARWALA*

---

★ *Window Glass*
*Belgium Mirrors*
*and*
*Pictures*

*Specialist in*
*PICTURE FRAMING*

Phone: 7127

## Jazeema Picture Palace

222, K. K. S. Road,
JAFFNA.

*Branches:*

**FANCY HOUSE**
Grand Bazaar,
Mannar.

**JAZEEMAS**
95, Stanley Road,
Jaffna.

---

*உயர்ந்த ரகம் !* *நிதான விலை !!*

## ஏ. கே. பிறதர்ஸ்

22, நவீன சந்தை
பெரியகடை.
யாழ்ப்பாணம்

★ பலவகைப் பிடவைத் தினிசுகளையும்
தரமான றேடிமேட் உடைகளையும்
மற்றும்
அழகுசாதனப் பொருட்களையும்

ஒரே இடத்தில் குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ளக்கூடிய
சிறந்த இடம்

## A. K. Brothers

**22, MODERN MARKET, JAFFNA.**

எங்கள் விளம்பரதாரர்களை ஆதரியுங்கள்

Please Patronise our Advertisers

# குமரன் ரூறிஸ்ட் இன்

# Kumaran Tourist Inn

நகரின் மத்தியில் குறைந்த செலவில்
நிறைந்த வசதிகளைக் கொண்ட 30 தங்கும்
அறைகளைக் கொண்டது

லிடோ தியேட்டருக்கு அருகாமையில்

67, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

*With Best Compliments*

*from*

# AL-HAJ - S. M. ANVER

**FARHAN GEM TRADERS**

DHARGA ROAD

CHINA FORT

**BERUWALA**

*With best Wishes*

*&*

*Kind Regards*

*from*

# IRSHARD HADJIAR SONS

**ALBARAKATH**

17, GLEN ABER PLACE

**COLOMBO-3**

J.M.M.P.C.S Printers 249–73